# நமது செட்டிநாடு

மலர் 10 ✿ மணம் 08 ✿ ஸ்ரீ குரோதி ஆண்டு ✿ மார்கழி ✿ டிசம்பர் 2024 ✿ ரூ.25
Namadhu Chettinad ✿ Volume 10 ✿ Issue 08 ✿ December 2024 ✿ Rs.25




பக்கம் - 12



வித்தியாசமான துறையில்
தடம் பதித்த
விசாலாட்சி பக்கம் - 6




அரவிந்த் சிதம்பரம்
சூப்பர் கிராண்ட் மாஸ்டர் - 2024
பக்கம் - 31

செட்டி நாட்டரசர், பெரும் கொடையாளர்

# டாக்டர் எம்.ஏ.எம்.அவர்களின் 9 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



30-09-1931 - 02-12-2015

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்

மகன் : டாக்டர் முத்தையா ராமசாமி

மருமகள் : கீதா முத்தையா

பேத்திகள் : மெய்யம்மை முத்தையா
சிகப்பி முத்தையா

பேரன் : ராமசாமி முத்தையா

மற்றும்

செட்டிநாடு குழும நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள்

நமது செட்டிநாடு

மலர் 10 மணம் 08 டிசம்பர் 2024
ஸ்ரீ குரோதி ஆண்டு மார்கழி மாதம்

ஆசிரியர்: ந.ஆவுடையப்பன்

ஆசிரியர் குழு:

புதுவயல் செல்லப்பன்

குழ.கதிரேசன்

ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்

முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி

விசாலாட்சி சுப்பிரமணியம்

புதிய சந்தா, சந்தா புதுப்பித்தல்,

தட்டச்சு: முரு.மலர்விழி

வடிவமைப்பு: பி.தாமோதரன்

விளம்பரம் தொடர்புக்கு:

99622 43750

இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com

செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

நமது செட்டிநாடு மாத இதழ்

ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,

603, அண்ணா சாலை, சென்னை - 600 006

தொலைபேசி: 044–42951888

கரு.மணிகண்டன்

மக்கள் தொடர்பு அலுவலர்

காரைக்குடி 86818 28284

கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

மின்னஞ்சல்

namadhuchettinad@gmail.com

வாட்ஸ் ஆப்

9962243750



# மின் இதழாகும் நமது செட்டிநாடு

அன்புள்ள வாசகப் பெருமக்களே,

கடந்த பத்தாண்டுகளாக நமது செட்டிநாடு மாத இதழில் மதிப்புமிக்க வாசகர்களாக நீங்கள் தொடர்ந்து ஆதரவளித்து வருவதற்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். எங்கள் மீது நம்பிக்கை வைத்து அச்சு இதழுக்காக நீங்கள் செலுத்திய சந்தா எங்கள் இதழின் பயணத்திற்கு மிகவும் உறுதுணையாக இருந்தது. அதற்காக எங்களின் இதயப் பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

வளர்ச்சி அடைந்துள்ள தகவல் தொழில்நுட்ப உதவியால் கடந்த சில மாதங்களாக நமது இதழ் மின் இதழாகவும் வெளிவந்து பெரும்பாலான வாசகர்களின் ஆதரவையும் பெற்றுள்ளது. அவர்களில் பெரும்பான்மையர் விருப்பம் அச்சுப் பிரதியைவிட மின் இதழில் இருப்பதை எங்களால் அறிந்து கொள்ளவும் முடிந்தது. மின் இதழில் உள்ள சாதக பாதகங்களை நன்கு பரிசீலித்து, மின் இதழில் மேலும் பல புதுமைகள் புகுத்த இயலும் என்பதைக் கருத்தில் கொண்டு 2025 பிப்ரவரி மாதம் முதல் அச்சு இதழிலிருந்து மின் இதழுக்கு மாறத் தீர்மானித்துள்ளோம். மின் இதழ் நமது சந்தாதாரர்கள் அனைவருக்கும் இனி கட்டணமில்லாமல் கிடைக்கும். அதே தரமான கட்டுரைகள், செய்திகள், நிகழ்ச்சிகளின் தொகுப்பை உள்ளடக்கிய இதழாக சிறியவர் முதல் பெரியவர்கள் வரை சிரமமின்றி படிக்க வசதியோடு தொடர்ந்து வெளிவரும்.

அச்சு இதழை நிறுத்திவிட்டு, மின் இதழுக்கு மாறுவதால் வாசகர்கள் செலுத்தியுள்ள சந்தா தொகையைக் கணக்கிட்டு மீதமுள்ள காலத்திற்கான தொகை உரியவர்களுக்கு விரைவில் திரும்ப வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். வாசகர்கள் அச்சு இதழுக்கு இதுவரை அளித்து வந்த ஆதரவிற்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் எங்கள் மின் இதழ் மூலம் நமது சமுதாயப் பணியை மேலும் விரிவாக முனைப்புடன் ஆற்ற உள்ளோம். வாசகர்கள்/சந்தாதாரர்கள்/விளம்பரதாரர்கள் தங்கள் நல் ஆதரவை தொடர்ந்து வழங்க வேண்டுவதோடு இந்த மாற்றம் தொடர்பாக மேலும் விவரம் அறிய / ஆலோசனைகள் வழங்க எங்களைத் தொடர்பு கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வாசகர்கள் அனைவருக்கும் அன்பான இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளுடன்,

ந.ஆவுடையப்பன், ஆசிரியர், நமது செட்டிநாடு
தொடர்பு கொள்ள: மின் அஞ்சல் : namadhuchettinad@gmail.com
வாட்ஸ் ஆப் : 9962243750



தமிழக அரசு, கலைமாமணி முனைவர் ஆறு.அழகப்பன் அவர்கள் எழுதிய நூல்களை நாட்டுடமையாக்கியது. அந்நூல்களுக்கு உரிமைத்தொகையாக ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையை 18.11.2024 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சுவாமிநாதன் அவர்கள் வழங்கினார். உடன் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் டாக்டர் அவ்வை அருள் உள்ளார்.

# உள்ளே...


வித்தியாசமான துறையில் தடம் பதித்த விசாலாட்சி ........ 06

தமிழ்ப் பற்றாளர், கல்வியாளர், ஆலைப் பேரரசர் கருமுத்து தியாகராசர் ........ 08

நகரத்தார் திருப்பணிகள் ........ 10

2024ஆம் ஆண்டின் சிறந்த தொழில் முனைவோராக திரு.வெள்ளையன் சுப்பையா தேர்வு ........ 12

திருமாலின் திவ்ய தேசங்கள் ........ 14

“உறையூர் பஞ்சவர்ணேசுவரர் கோயில்” நகரத்தார் திருப்பணி ........ 16

வாங்க... வாங்க... வியட்நாமுக்கு வாங்க... .... 18

தொழில் தொடங்கலாம் வாங்க ........ 21

இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு ........ 26

நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு ..... 28

அரவிந்த் சிதம்பரம் சூப்பர் கிராண்ட் மாஸ்டர் – 2024 பட்டம் வென்றார் ........ 31

இராம காவியம் ........ 32

திருமந்திரச் சுவை ........ 34

பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன் ........ 36

வெல்லலாம் வாருங்கள் ........ 38

ஹைதராபாத் நகரத்தார் சங்கம் ஆண்டு விழா – சங்கமம் 2024 ........ 39

நகரத்தார் சிகரத்தார் ........ 40

வாழையடி வாழை ........ 42




வாசகர்களுக்கு
2025
ஆங்கிலப் புத்தாண்டு
மற்றும்
இனிய பொங்கல் திருநாள்
நல் வாழ்த்துகள்

Vees Star™
Diamonds & Jewelry

ஸ்ரீ அடைக்காத்தாள் பெரியகருப்பண்ண சாமி துணை

GIA CERTIFIED SOLITAIRE

Happy New Year 2025



CHENNAI: W-182, NORTH MAIN ROAD ANNA NAGAR WEST EXTN., TN-600 101.
SURAT: SURAT DIAMOND BOURSE DREAM CITY KHAJOD, GUJARAT - 395007.

CHENNAI I SURAT I MADURAI I KARAIKUDI





S. விஜயகுமார் V. விசாலாட்சி
பள்ளத்தூர்

CHENNAI - 044 4553 6003 1, 9383007477
MADURAI - 9884473330
KARAIKUDI - 9884803349

www.vstardiamonds.com

# வித்தியாசமான துறையில் தடம் பதித்த

# விசாலாட்சி



'எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!'

இந்த வரிகளைச் சும்மா பாடவில்லை பாரதி. நம் பெண்களின் அறிவையும் புத்திகூர்மையையும் திறமையையும் வருங்காலத்தில் அவர்கள் வகிக்கப் போகும் பொறுப்புகளையும் எண்ணி வியந்துதான் பாடிச் சென்றிருக்கிறான். நம் நகரத்தார் பெண்மணிகளும் அதற்கு விதிவிலக்கல்ல. அவர்கள் கால் பதிக்காத துறைகளே இல்லை என்னுமளவுக்கு அனைத்துத் துறைகளிலும் உயர் பதவிகளில் கோலோச்சி வருகின்றனர்.

இந்திய ராணுவத்துறையின் கீழ் வரும் விமானப் படை தளவாடங்கள் தரக் கட்டுப்பாட்டு பிரிவில் மண்டல இயக்குநராகப் பதவி வகித்து அண்மையில் ஓய்வு பெற்ற விசாலாட்சி அதற்கு ஓர் உதாரணம். அரண்மனை சிறுவயலில் பிறந்து, கடியாபட்டியில் வாழ்க்கைப்பட்டவர். இரணிக்கோயிலைச் சேர்ந்தவர். கணவர் அழ. தண்டாயுதபாணி. பெங்களூரில் தனியார் கட்டுமான நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர்களுக்கு ஒரே மகள் வித்யா. அமெரிக்காவில் எம்.எஸ். படித்துவிட்டு, அங்கேயே பணிபுரிகிறார். 40 ஆண்டுகளாக ராணுவத் துறையில் பணியாற்றிய விசாலாட்சியுடன் ஒரு பேட்டி.

"நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் பெங்களூரில்தான். என் பெற்றோர் 50 வருஷங்களுக்கு மேலாக அங்கேயே செட்டிலானவர்கள். 10ம் வகுப்பு முடித்ததும், மின்னணு தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளமா படித்தேன். 1983-இல் டிப்ளமா முடிச்சிட்டு, ஒரு வருடம் கம்ப்யூட்டர் இன்ஜினீயரிங்கில் ஒரு போஸ்ட் டிப்ளமாவும் பண்ணினேன். உடனேயே கர்நாடகா மின்சார வாரியத்தில் வேலை கிடைச்சுது. ஆனால் என் அப்பா, 'இந்த வேலையில் அடிக்கடி ஊர் மாத்துவாங்க. கர்நாடகாவில் பெங்களூரைத் தவிர மத்த மாவட்டங்களில் வேலை செய்ய முடியாது'ன்னு சொல்லி மறுத்துட்டாங்க. அப்பா அதிக அனுபவமும் தொலைநோக்குப் பார்வையும் கொண்டவங்க. எங்க எல்லாரையும் நல்லாப் படிக்க வச்சாங்க. 'உங்களுக்குன்னு எந்தச் சொத்தும் சேர்த்து வைக்கல. நல்ல படிப்பைக் கொடுத்துட்டேன். இனிமே உங்க சமத்து'னு சொல்வாங்க.


அதுக்கப்புறம் ஒரு ட்ரெய்னிங் போய்கிட்டிருந்தபோது, பாரத் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில், ராணுவத் துறையின் கீழ் DGQA (Director General of Quality Assurance) பணி தேடி வந்தது. ராணுவம் மற்றும் கப்பல்படைக்குத் தேவையான அனைத்துத் தளவாடங்களும் மற்ற பொருட்களும் இந்த DGQA வழியாகத்தான் போகணும். எந்த கம்பெனியிலிருந்து ராணுவத்துக்குப் பொருட்கள் வந்தாலும், எங்கள் துறை அந்தப் பொருட்களின் தரத்தைப் பரிசீலித்து, தரச்சான்றிதழுக்கு முத்திரை குத்தி ஓகே சொல்லி கையெழுத்துப் போட்ட பிறகுதான் ராணுவத்துக்கே போகமுடியும். 16 வருஷம் அங்கே வேலை பார்த்தேன்.

84-இல் வேலை கிடைச்சதும், அப்பாவும் என் சகோதரர்களும் 'வேலைதான் கிடைச்சிடுச்சே.. மேல படிக்கலாமே'ன்னு சொன்னாங்க. அதனால் 1987ல் பார்ட் டைம் இன்ஜினீயரிங் கோர்ஸில் சேர்ந்தேன். அது ஈவினிங் காலேஜ்.. ஆபீஸ் முடிஞ்சதும் காலேஜுக்குப் போகணும். நாலு வருஷம் இதே மாதிரி படிச்சு, பி.இ. டிகிரி வாங்கினேன். காலையில் 8 மணிக்கு ஆபீஸ் போனா ராத்திரி 10 மணிக்குதான் வீட்டுக்கு வரமுடியும். இதில், நான் கடைசி வருஷம் படிக்கும்போது கல்யாணம் ஆயிடுச்சு. திருச்சியில் வேலை பார்த்த என் கணவர், கல்யாணத்துக்கு அப்புறம் பெங்களூருக்கே வந்துட்டாங்க..

பி.இ. டிகிரி தவிர எக்கச்சக்கமான சர்டிஃபிகேட் கோர்ஸஸ் படிச்சிருக்கேன். பிறகு யு.பி.எஸ்.சி. தேர்வுக்கு விண்ணப்பிச்சேன். ஏனெனில் நான் டிப்ளமா முடிச்சிட்டு பணியில் சேர்ந்ததால் நான் இருந்தது 'நான் கெஸட்டட்' போஸ்ட் தான். யு.பி.எஸ்.சி. பாஸ் செய்ததும், DGAQA- துறையில் பணி மாற்றம் கிடைச்சது. இதுவும் ராணுவத் துறைதான். ஆனால் இது வானூர்திகளுக்கான




பிரேமா நாராயணன்



கூட ஆகிவிடும். எல்லா பாராமீட்டர்களும் ஓகேன்னு நாங்க சொன்ன பிறகுதான் பைலட் ஃப்ளைட்டையே எடுப்பார். அப்புறம் சோதனை ஓட்டத்துக்கு பெங்களூரிலிருந்து அரக்கோணம் போய் வரும். முதலில் குறைவான தூரம் போய்ப் பார்ப்பாங்க. அப்புறம் அதிகமான தூரம் போவாங்க. பிறகு அதிக மழை, அதிக வெப்பம் மாதிரி மாறுபட்ட காலநிலைகளில் ஓட்டிப் பார்ப்பாங்க. குண்டு போட்டுப் பார்க்கும் விமானங்களும் உண்டு. ஜெய்சல்மீர் பாலைவனத்துக்குப் போயிடுவாங்க குண்டு போட்டு செக் பண்றதுக்கு.. லே, லடாக், கோவான்னு பல வெளியூர்களுக்குப் போகச் சொல்வாங்க. என் பொண்ணு சின்னதா இருக்கும்போதே நான் பல வெளியூர்களுக்குப் போயிருக்கேன்.

“நான் ஒரு ‘வொர்கஹாலிக்’.. ஓய்வுக்குப் பிறகும் கூட நான் வீட்டில் சும்மா இருக்காமல் தொடர்ந்து வேலை செய்யணும் என்கிற விருப்பம் இருக்கு. ஏன்னா, என் துறையில் நான் கண்டிப்பான அதிகாரியாகப் பணியாற்றி, குறிப்பிடத்தகுந்த நல்ல பெயர் வாங்கியிருக்கேன்.” என்று திருப்தியுடன் கூறும் விசாலாட்சி, தனது பெற்றோருக்குத்தான் நன்றி கூறுகிறார்.

தரக் கட்டுப்பாட்டு இயக்குநரகம். Military Aircraft Manufacturers ஆன HAL (Hindustan Aeronautics Limited) நிறுவனத்தில் முதலில் ஜூனியர் சயின்டிஃபிக் ஆபீசர் ஆகச் சேர்ந்தேன். பிறகு படிப்படியாக பதவி உயர்வு கிடைத்து, சீனியர் சயின்டிஃபிக் ஆபீசர், பிரின்சிபல் சயின்டிஃபிக் ஆபீசர் பதவிகளில் பணிசெய்து, ஓய்வு பெறும்போது இயக்குநர் பொறுப்பில் இருந்தேன். மொத்தம் 24 வருடங்கள் அனுபவம் அங்கே! பாதுகாப்புத் துறைக்கான ராணுவ விமானங்கள் தயாரிக்கும் நிறுவனம் அது. அது தவிர தனியார் நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட எல்லா நிறுவனங்கள் தயாரிக்கும் விமானப்படைக்கான பொருள்களும் எங்க அலுவலகம் மூலமாகத்தான் போகமுடியும்” என்று உற்சாகமாக தனது கல்வி மற்றும் பணிப் பயணம் பற்றி விவரிக்கிறார் விசாலாட்சி.



என்னுடைய பணி அனுபவம் வித்தியாசமானது. இந்திய விமானப் படைக்குத் தேவையான மிலிட்டரி ஃபைட்டர் ஏர்கிராப்ட்ஸ் அனைத்தும் புரொடக்ஷன் செய்யும்போது சிஸ்டம்ஸ் எல்லாம் ஒழுங்காக வேலை செய்கிறதா என்று ஒவ்வொரு நிலையிலும், ஸ்டேஜ் பை ஸ்டேஜ் ஆக பரிசோதித்து, பல ட்ரையல் ஃபிளைட்ஸ் செய்யப்பட்டு ஓகே ஆன பிறகுதான் விமானப் படைக்கு டெலிவரி செய்யப்படும்.

விமானத்தின் காக்பிட்டுக்குள் உட்கார்ந்து ஒவ்வொரு சிஸ்டத்தையும் பரிசோதிக்கணும். பைலட் வந்து டேக் ஆஃப் செய்து பார்க்க வேண்டும். இப்படியே ஒரு விமானத்தை பரிசோதித்து முடிக்க ஒரு வருஷம்

“என்னை டைப்ரைட்டிங் கத்துக்க வச்சாங்க அப்பா. என் பி.ஏ.வை விட வேகமாக என்னால் டைப் செய்ய முடியும். என் அம்மா பாசிடிவ் மனப்பான்மை நிறைஞ்சவங்க. அப்பா, அம்மாவைப் போலவே என் கணவரும் என் படிப்பு, வேலை எல்லாத்துக்கும் சப்போர்ட் பண்ணியிருக்காங்க. அதனால்தான் என்னால் இந்த உயரத்துக்கு வர முடிந்தது. ஆனால் இந்தத் துறையில் பெண்கள் அதிகம் இல்லை. அதுதான் எனக்கு வருத்தம். ராணுவத்துறையில் பணியாற்றும் 800 அதிகாரிகளில் நாங்க 22 பெண்கள்தான் கெஸட்டட் அதிகாரிகள் நிலையில் இருக்கிறோம். நான் பணியில் சேர்ந்த காலத்தில் வேலை மிக எளிதாகவும் விரைவாகவும் கிடைத்தது. ஆனால் இப்போது நிலைமை தலைகீழாக இருந்தாலும், நன்கு படித்து, தொடர்ந்து முயற்சி செய்தால் கண்டிப்பாக வேலை காத்திருக்கிறது. எனவே நகரத்தார் இளைய தலைமுறையினர், சோம்பேறித்தனத்தை உதறிவிட்டு, நல்லாப் படிக்கணும். நீங்கள் தளராமல் முயற்சி செய்தால், கல்வியிலும் மேன்மை அடையலாம்; நல்ல பணியும் பதவிகளும் தேடிவரும் என்பது எங்கள் வாழ்வில் நானும் என் சகோதரர்களும் என் மகளும் கண்ட நிதர்சனமான உண்மை!”

தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம் என 6 மொழிகளில் பேசக்கூடிய திறமை கொண்ட விசாலாட்சி, இந்த வயதிலும் கூட இன்னும் கற்கும் ஆர்வமும் பணிபுரியும் துடிப்பும் நிறைந்தவராக இருக்கிறார். அதுதான் அவரை இயக்கும் கனலாக இருக்கிறது.

உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் அந்தப் பொறி உருவாக வேண்டும்; பெருந்தனலாக அது ஒளிர வேண்டும். அதுவே உங்கள் வாழ்வை ஒளிவீசச் செய்யும்.

சென்ற இதழ் தொடர்ச்சி



## தமிழ்ப் பற்றாளர், கல்வியாளர், ஆலைப் பேரரசர்

# கருமுத்து தியாகராசர்

டாக்டர் சோம வள்ளியப்பன்



### ஊழியர் நலன்

தொழிலாளர் குழந்தைகளுக்கு கல்வி வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை கொடுத்தார். வேலையை விட்டு விலகுகிறவர்களை வாழ்த்தி அனுப்பினார். திரும்பி வர விரும்பியவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொண்டார். இப்படி பல விதங்களில் முன்மாதிரி தொழிலதிபராக விளங்கினார். 1929 இல் இருந்து அவரிடம் பணியாற்றிய சி.எஸ். ராமசாமி பிற்காலத்தில் தனியாக ஆலை நிறுவ விரும்பிய போது அவருக்கு உதவி செய்ய, மதுரை சீதாலட்சுமி ஆலை உருவானது.

எல்லா காசோலையிலும் அவர் கையெழுத்து போடுவதில்லை. அதற்கென ஆறு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளை நியமித்திருந்தார். அப்போதே சிறப்பாக அதிகாரப் பகிர்வு செய்திருக்கிறார்.

### குணம்

தியாகராசர் யாரையும் கோபிக்க மாட்டார். ஒருமுறை அவர் மதுரை வருவதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது. கார் வந்திருக்க வேண்டும். வரவில்லை. அவர் எவரையும் கோபிக்கவில்லை. ரயில் தண்டவாளங்கள் ஊடே நடந்து ஆலைக்கு வந்துவிட்டார்.

விவரம் அறிந்த ஊழியர், தான் மறந்து விட்டதைக் கூறி, மன்னிப்புக் கேட்டு, எனக்கு தண்டனை தாருங்கள் என்று கடிதம் கொடுத்தார். அதைப் படித்துப் பார்த்துவிட்டு சிரித்த தியாகராசர், கடிதத்தை ஊழியர் முன்பாகவே கிழித்துப் போட்டார். பிறகு, " போய் வேலையை பார்" என்றார்.

வியாபாரத் தொடர்புடைய வீட்டில் தங்கமாட்டார். உறவினர்களும் தங்கக்கூடாது என்பார்.

1942-ல் அரசு நூல் விற்பதற்கு விலைக் கட்டுப்பாடு கொண்டுவந்தது. அதனால் அப்போது தனி சம்ஸ்தானமாக இருந்த புதுக்கோட்டையில் புதிய நிறுவனம் தொடங்கி, மதுரை ஆலையின் நூலை சந்தையில் உரிய விலைக்கு விற்றார்.

தென் மாநிலங்களில் விளைகிற பஞ்சை வாங்கிய பின்னரே கூடுதல் தேவை இருந்தால் மட்டுமே பிற மாநிலங்களில் இருந்து வாங்க வேண்டும் என்பார். அதே போல நூல் விற்பனையில் நூலை வாங்கி பயன்படுத்துபவர்களுக்கே முன்னுரிமை, வாங்கி விற்பவர்களுக்கு அல்ல என்றார்.

அதற்கு பிறகு அவர் பல்வேறு ஆலைகளை விலைக்கு வாங்கினார். ஒவ்வொன்றாக வாங்கி, ஒரே நேரத்தில் மொத்தம் 16 ஆலைகளை சிறப்பாக நிர்வகித்து ஆலை அரசராகத் திகழ்ந்தார்.

அது தவிர,கேரள மாநிலம் திருச்சூர் மற்றும் தனி சமஸ்தானமாக இருந்த புதுக்கோட்டை ஆகிய ஊர்களில் நலிந்த ஆலைகளை அந்தந்த அரசுகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அவற்றின் நிர்வாகப் பொறுப்பை எடுத்துக்கொண்டு மேம்படுத்தினார்.

### சட்டப்படி

அரசிடமோ அல்லது வேறு எவரிடமோ மன்றாடக்கூடாது, கெஞ்சக்கூடாது என்பார். அடிபணியவே மாட்டார். சரி என்று பட்டால் எதிர்த்து நின்று, போராடி உரிமையை வெல்வார். தன் ஊழியர்களும் அப்படியே இருக்கவேண்டும் என்று நினைப்பார்.

ஆலைக்கு ஒன்று என 20 வழக்கறிஞர்கள் கொண்ட தனிச் சட்டத்துறை வைத்திருந்தார். அவரது ஆலைகள் தொடர்பான வழக்குகள் தவிர, பல பொது நல வழக்குகள் போட்டார். அவர் சந்தித்த மொத்த வழக்குகள் 250. அதில் வெற்றி பெற்றது 200-ல், தோல்வி அடைந்தது 40-ல், முடிவுக்கு வராதவை 10.

### மன உறுதி

தியாகராசர், அஞ்சாநெஞ்சர். எதிரில் இருப்பவரை திருப்தி படுத்துவதற்காக மாற்றிப் பேச மாட்டார். தேசபக்தி மிக்கவர்.

இரண்டாம் உலகப் போரின் போது வெள்ளை அரசு ஆணை வெளியிட்டு, யுத்த நிதி கேட்டது. தொழில், வியாபாரம் செய்தவர்கள் கொடுத்தார்கள். ஆனால், தொழில், வியாபாரம் செய்துகொண்டிருந்த போதிலும் அரசுக்கு அஞ்சாமல், கொள்கை காரணமாக வெள்ளைக்கார அரசுக்கு யுத்த நிதி கொடுக்க வெளிப்படையாக மறுத்துவிட்டார்.

மதுரை ஆலை உரிமையாளர்களான ஐரோப்பியர்கள் தங்களுடன் போட்டியிடும் இந்தியர்களை நசுக்குவதற்காக அவர்களது நூல் விலையை குறைத்து விற்பனை

செய்தார்கள். கலங்காத தியாகராசர், அவர் கணக்கு வைத்திருந்த வங்கியின் மூலமாகவும் அவரது நண்பர்களின் உதவியோடும் குறைந்த விலைக்கு விற்கப்பட்ட நூல் முழுவதையும் அவரே வாங்கினார்.

1929ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதாரச் சுணக்கம் காரணமாக மீனாட்சி ஆலையை தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. ஆலையின் வளர்ச்சித் திட்டங்களுக்கு மேலும் ரூபாய் 15 லட்சம் தேவைப்பட்டது.

கடன் கிடைக்காத நிலையில், போட்டி நிறுவனமாக நடந்து கொண்டிருந்த ஹார்வி நிறுவனத்தின் முதலாளிகளிடமிருந்து ஐந்து லட்ச ரூபாய் கடன் கேட்டார்.. அதற்கு பல நிபந்தனைகள் விதித்தார்கள். ஹார்வி நிறுவனத்தினரின் சப்ளையர்களுக்கு ஹார்வி நிறுவனம் கொடுப்பதைக் காட்டிலும் கூடுதல் விலை கொடுக்கக்கூடாது. ஹார்வி நிறுவனத்தினரின் விலையைக் காட்டிலும் குறைவான விலைக்கு நூல் விற்கக்கூடாது போன்ற நிபந்தனைகள் தவிர, அசலை ஒவ்வொரு ஆண்டும் ரூ. 50,000 வீதம் 10 ஆண்டுகளில் திருப்பித் தர வேண்டும்.

சம்மதம் தெரிவித்து, கையெழுத்துப் போட்டுக் கடன் வாங்கினார். அவர் ஹார்வி ஆலையிடம் அவரது ஆலையை விற்றுவிட்டார் என வதந்தி பரவியது. மேலும் கடுமையான நிபந்தனைகளுடன் வியாபாரம் செய்யமுடியவில்லை. அதனால் இந்தியன் வங்கியில் வேறு கடன் பெற்று, ஹார்வி நிறுவனக் கடனை முழுவதுமாக திருப்பிக்கொடுத்து விட திட்டமிட்டார். அதைத் தெரிந்துகொண்ட ஹார்வி நிறுவனம், உடனடியாக முழுத்தொகையையும் பெற்றுக்கொள்ள ஒப்புக்கொள்ளவில்லை.

தியாகராசர் விடவில்லை. லண்டனில் இருந்த ஹார்வி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு தந்தி கொடுத்தார். அவர்கள் கடனை திருப்புவதென்றால் உடனடியாக ஒரு மாதத்திற்குள் திருப்பிவிடவேண்டும் எனக் கெடு கொடுத்தனர். அதற்குள் கடனை அடைத்து, ஆலையை தொடர்ந்து நடத்தினார். அதன்பின்பும் ஆலையை நடத்துவதில் சிக்கல்கள்தான். இந்த முறை தொழிற் சங்கத்தினரால் சிரமம். 1939-ஆம் ஆண்டு வரை அந்த பிரச்னைகள் தொடர்ந்தன.

### வங்கி, இன்சூரன்ஸ், கல்லூரிகள்

1943-ஆம் ஆண்டு மதுரா பேங்க் தொடங்கினார். முதலில் வங்கிக்கு மதுரை, சேலம் மற்றும் புதுக்கோட்டையில் மட்டுமே கிளைகள் இருந்தன. அது ரிசர்வ் வங்கியின் ஷெடியூல்டு வங்கியும் அல்ல. பிறகு,வேறு சில சிறிய வங்கிகளையும் வாங்கி மதுரா வங்கியுடன் சேர்த்தார், வளர்த்தார். ஒரு நேரம் பேங்க் ஆப் மதுராவிற்கு 353 கிளைகள் இருந்தன. பின்னர் 1993-ஆம் ஆண்டு ICICI வங்கி, பேங்க் ஆப் மதுராவை விலைக்கு வாங்கிக்கொண்டது.

மதுரை பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையை வாங்க இருந்தவர்கள் வாங்க முடியாமல் போனது. அவசரமாக வெளிநாடு போகவேண்டியிருந்த டாக் துரை கலைத் தந்தையாரிடம் விற்றார்.

ஆலை விபத்துகளுக்காக பெருந்தொகை காப்பீட்டுப் பிரியமாக கட்ட வேண்டி வந்தது. அதனால், 1943-இல் சொந்தமாக மதுரை காப்பீட்டுக் கழகம் உருவாக்கினார். 30 ஆண்டுகள் செயல்பட்ட அந்த காப்பீட்டு நிறுவனம், 1973-ஆம் ஆண்டு மற்ற காப்பீட்டு நிறுவனங்களைப் போல, அரசுடமையாக்கப்பட்டது.

பிறகு ஒரு சர்க்கரை ஆலையை விலைக்கு வாங்கினார். அதை மேம்படுத்தி, சிவகாமி சர்க்கரை ஆலை எனப் பெயரிட்டு, நடத்தினார்.

ஒரு வாடிக்கையாளராக தொடர்ந்து சென்னை பி ஆர் & சன்ஸ் கடைக்கு வந்து போய்க்கொண்டிருந்த கலைத் தந்தையார், ஒரு சந்தர்ப்பத்தில் அந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கி, அதன் உரிமையாளரானார்.


### கல்வி நிறுவனங்கள்

1932, 33-ஆம் ஆண்டுகளில் பல்வேறு பொருளாதார நெருக்கடி காரணமாக அவர் பம்பாயிலும் கல்கத்தாவிலும் இருக்கவேண்டி வந்தது. அப்போது ரவீந்திரநாத் தாகூர் நிறுவிய விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை சுற்றிப் பார்த்து பெருமிதம் கொண்டார். அது அவர்களுக்கு கல்வி ஆர்வத்தை அதிகப்படுத்தியது.

முதலில் சில பள்ளிகள் பிறகு 1949-ல் மதுரையில் தியாகராசர் கலைக் கல்லூரி தொடங்கினார். தியாகராசர் ஆசிரியர் பயிற்சி கல்லூரி, தியாகராசர் மேலாண்மைப் பள்ளி, தியாகராசர் பொறியியல் கல்லூரி மற்றும் தியாகராசர் பாலிடெக்னிக் கல்லூரி உள்ளிட்ட மொத்தம் 19 கல்வி நிறுவனங்கள் அவரால் நிறுவப்பட்டன. ஐந்து அறக்கட்டளைகள் நிறுவி பல உதவிகள் செய்தார்.

கட்டிடக் கலை, சிற்பம், ஓவியம், இசை. தோட்டக்கலை என பலவற்றிலும் சிறந்து விளங்கினார். சட்டம் தெரிந்தவர். அவரை வழக்குரைஞர்களின் வழக்குரைஞர் என்பார்கள். தமிழ் மீது தீராத பற்று வைத்திருந்தார். போராடினார். பல பெற்றும் தந்தார்.

தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் புலமை. சட்டம் குறித்த அறிவு. சைவ சமயத்தின் மீது தீராத பற்று. தனித்தமிழ் முன்னெடுப்புகள். பத்திரிகைகள் நடத்தி அதன் மூலம் தீர்வுகளை நோக்கி மக்களை திருப்புதல். ஆலைகளை திறம்பட நடத்துதல், போட்டிகளை சமாளித்தல், ஊழியர்களையும் வாடிக்கையாளர்களையும் மனதில் கொண்டு தொழில், வியாபாரம் செய்தல். நூற்பாலைகள், சர்க்கரை ஆலை, வங்கி, இன்சூரன்ஸ், பத்திரிகை, பள்ளி மற்றும் பல்துறை கல்லூரிகள், அறக்கட்டளைகள் என பல்வேறு துறைகளில் இறங்கி, துலங்கி, வெற்றிக் கொடி நாட்டல், வெள்ளையரையும் இந்தித் திணிப்பாளர்களையும் அஞ்சாமல் எதிர்த்தல் என, எத்தனை எத்தனை பரிமாணங்களில் ஜொலிக்கிறார் நம் தியாகராசர்! என்றைக்கும் தமிழர்கள் மறக்கக்கூடாத ஒரு வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார், கருமுத்து தியாகராசர். வாழ்க அவர் புகழ். ♦



நமது செட்டிநாடு

சென்ற இதழ் தொடர்ச்சி

# நகரத்தார் திருப்பணிகள்



சொ.சொ.மீ.சுந்தரம்

### 111) திருமுதுகுன்றம் (Pincode - 606 001):

"காசியின் விழுமிதான முதுகுன்றம்" என்று கந்தபுராணத்தில் புகழப் பெறும் இத்தலம் இப்பொழுது விருத்தாசலம் என்ற அழைக்கப்படுகிறது. விழுப்புரத்தை அடுத்துள்ள இத்தலம் அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவராலும் பாடப் பெற்றது. சுந்தரர் இத்தலத்தில் பரவை நாச்சியாருக்காகப் பெருமானை வேண்டிப் பொன் பெற்று அதை இங்குள்ள மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூர்க் கமலாலயத்தில் எடுத்துக் கொண்டார் என்பது வரலாறு. இங்கு இறைவன்: பழமலை நாதர், இறைவி: பெரியநாயகி. இத்தல விநாயகர் பெயர் ஆழத்துப் பிள்ளையார். திருமுதுகுன்றம் கல்வெட்டில் நெற்குப்பை என்று குறிக்கப்படுகிறது. இறைவி முதிய வடிவில் விருத்தாம்பிகையாகவும், இளைய வடிவில் பாலாம்பிகையாகவும் குருநமச்சிவாயருக்குக் காட்சியளித்தார்.

இத்தலம் விழுப்புரத்திலிருந்து திருச்சி செல்லும் நெடுஞ்சாலையில் உளுந்தூர்ப்பேட்டைக்கு அருகில் உள்ளது. இது சுந்தரமூர்த்தி சுவாமியை இறைவன் தடுத்தாட்கொண்ட திருத்தலமாகும். வழக்கிட்டு ஆரூரரை வலிய வந்து ஆட்கொண்ட சிவபெருமான், "வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டுக" என்று ஊரார் கேட்ட போது "என் இருப்பிடம் இதுவே" என்று (இறைவன்) காட்டிய கோயிலையுடைய திருத்தலம் இதுவே ஆகும். ஊரின் பெயர் திருவெண்ணெய்நல்லூர். கோயிலின் பெயர் திருவருட்டுறை. சுந்தரரின் முதல் திருப்பதிகம் "பித்தா பிறைசூடி" இங்குதான் பாடப் பெற்றது. இறைவன் பெயர்: அருட்டுறை நாதர், இறைவி: மங்களாம்பிகை. இக்கோயிலில் சுந்தரர் வழக்கு நடந்த, வழக்குத் தீர்த்த மண்டபம் உள்ளது. இங்கு சுந்தரர் கையில் ஓலையுடன் காட்சியளிக்கிறார். கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளலும் சிவஞான போதம் அருளிய மெய்கண்டாரும் இந்த ஊரில்தான் வாழ்ந்தனர். வடக்கு வீதியில் மெய்கண்டார் சமாதி உள்ளது. திருவருட்டுறைச் சிவன் கோயில் திருப்பணி தேவகோட்டை வீர.ராம.அரு. அருணாசலம் செட்டியாரால் நகரத்தார் பலர் பொருளுதவி பெற்றுச் செய்யப் பெற்றது. அம்மன் கோயில் தேவகோட்டையைச் சேர்ந்த ராம.அரு.அரு. பொதுக் குடும்பத்தாரால் திருப்பணி செய்யப் பெற்றது. சிவன் கோயில் திருப்பணிக்கு ரூபாய் ஐம்பதாயிரமும், அம்மன் கோயில் திருப்பணிக்கு ரூபாய் இருபத்தைந்தாயிரமும் செலவிடப் பெற்றன. பராபவ ஆண்டு, ஆனி மாதம், (1906, ஜூன் மாதம்) திருக்குட நன்னீராட்டுச் செய்யப் பெற்றது.

### 113) திருத்துறையூர் – (Pincode - 607 205):

இப்பொழுது திருத்தளூர் என்று மக்களால் அழைக்கப் பெறும் இத்தலம் பண்ருட்டிக்கு அருகில் உள்ளது. சுந்தரர் தவநெறி வேண்டிப் பெற்ற தலம் இதுவே ஆகும். இத்தலத்துக்கு வந்த சுந்தரரை இறைவன், முதியவர் வடிவில் தோன்றி ஆடகொண்ட இடம் கிழப்பாக்கம் என்று அழைக்கப்படுகிறது. சிவஞான சித்தியார் என்ற சாத்திர நூலை இயற்றிய சகலாகம பண்டிதர் எனப்படும் அருணந்தி சிவாச்சாரியார் இங்குதான் அவதரித்தார். இவர் சமாதிக் கோயில் இவ்வூரில் உள்ளது. சுந்தரர் காலத்தில் ஊருக்குத் தென்பால் ஓடிய பெண்ணையாறு இன்று வடபால் ஓடுகிறது. இங்கு சிவபிரான் மேற்கு நோக்கியும், அம்மை வடக்கு நோக்கியும் இருப்பது சிறப்பானது. இறைவன் பெயர் : பசுபதீஸ்வரர். இறைவி : சிவலோகநாயகி. சுந்தரரால் பாடப் பெற்ற இத்திருக்கோயிலில் பெருமாள் சந்நிதியும் உள்ளது.

இத்திருக்கோயில் தேவகோட்டை மு.ராம.நடேசன் செட்டியாரால் திருப்பணி செய்யப் பெற்றது. மீண்டும் இக்குடும்பத்தைச் சேர்ந்த மு.ராம.அரு.க. அருணாசலம் செட்டியாராலும், மாணிக்கம் செட்டியாராலும் திருப்பணி

செய்யப்பெற்று, 1966-ல் திருக்குட நன்னீராட்டு நடைபெற்றது.

114) திருப்பாதிரிப்புலியூர் – (Pincode - 607 002):

இத்தலம் கடலூரின் ஒரு பகுதியாக உள்ளது. இதற்குக் கடைஞாழல் என்ற பெயர் இருந்தது. அது கடைஞாழலூர் ஆகிப் பிறகு கடலூர் ஆகிவிட்டது. பாதிரி தலமரம் என்பதாலும், வியாக்ரபாதர் வழிபட்டதாலும் இத்தலம் திருப்பாதிரிப்புலியூர் எனப்பட்டது. திருநாவுக்கரசரைச் சமண மன்னன், கல்லோடு கட்டிக் கடலில் போட்டான். அவர் சொற்றுணை வேதியன் எனத் தொடங்கும் பதிகம் பாடினார். கல்லே தெப்பமாயிற்று. திருப்பாதிரிப்புலியூர் அருகே அவர் கரையேறினார். இவ்விடம் இப்பொழுது கரையேறவிட்ட குப்பம் (வண்டிப்பாளையம்) என்ற பெயர் பெற்றது. இங்கே உள்ள குளம் அப்பர்சாமி குளம் எனப்படுகிறது. இறைவன் பெயர்: தோன்றாத் துணைநாதர். இறைவி: அருந்தவநாயகி. இது சம்பந்தரும், அப்பரும் பாடிய தலமாகும். பாதிரி மரம் பூக்கும். ஆனால் காய்க்காது. இக்கோயிலில் பள்ளியறை சுவாமி கோயிலில் உள்ளது. நாடோறும் அம்பிகையே பள்ளியறைக்கு எழுந்தருளுவது தனிச்சிறப்பாகும். தல விநாயகர் சொன்னவாறறிவார். அருந்தவநாயகி சந்நிதியில் அம்பிகை அருவமாகத் தவம் செய்வதால் உருவமில்லை. பீடம் மட்டும் உள்ளது. இது தவிர அம்பாள் கோயில், பக்கத்தில், தனியாக உள்ளது. இத்தலத்தில் சந்நிதி வீதியில் மிகச் சிறந்த தமிழறிஞரும், தவமுனிவருமாகிய ஞானியார் சுவாமிகள் மடாலயம் உள்ளது. நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் செய்த மிகப்பெரிய திருப்பணிகளில் இத்தலத் திருப்பணி குறிப்பிட்டுப் போற்றத்தக்கதாகும்.

திருப்பாதிரிப்புலியூரில் நகரத்தார் செய்த திருப்பணிகள்:

1) கடியாபட்டி, தீ.சொ. முருகப்ப செட்டியார், தீ.நா. முத்தையா செட்டியார், தீ.அ. சிதம்பரம் செட்டியார் ஆகிய மூவரும் பன்னிரண்டு லட்ச ரூபாய் செலவு செய்து மிக அழகுறத் திருப்பணி செய்து பிலவங்க ஆண்டு, தை மாதம், 24-ஆம் நாள் (06.03.1908) திருக்குட நன்னீராட்டுச் செய்தனர். திருக்குட நீராட்டுச் செலவு ஒரு லட்ச ரூபாய் ஆயிற்று.

2) கடியாபட்டி, பெருஞ்செல்வர்களாகிய இம்மூவரும் மீண்டும் திருப்பணி நிறைவேற்றி பிங்கள ஆண்டு, ஆனி மாதம், 15-ஆம் நாள் (28.06.1917) இரண்டாம் திருக்குட நீராட்டுச் செய்தனர்.

3) கடியாபட்டி, தீ.சொ. பொதுவில் சுவாமிக்குத் தங்கக் கவசமும், பரிவார தேவருக்கு வெள்ளிக் கவசமும் செய்தனர். செலவு ரூ.60,000/-

4) கடியாபட்டி, தீ.சொ. பொதுவில் சுவாமிக்கு வெள்ளி ரதம் செய்து வைத்தனர். கல்கத்தா நகர விடுதியிலிருந்து இந்த வெள்ளி ரதம் விலைக்கு வாங்கப்பட்டுத் திருத்தம் செய்யப்பெற்றது. செலவு ரூ.1,50,000/-

5) உச்சிக்காலக் கட்டளைக்காக தீ.சொ.முரு., ராம., எடுத்து வைத்த மூலதனம் ரூ.15,000/-

6) காலசந்திக் கட்டளைக்காக தீ.சொ.கி. எடுத்து வைத்த மூலதனம் ரூ.15,000/-

7) சாயரட்சைக் கட்டளைக்காக தீ.சொ., தீ.நா. எடுத்து வைத்த மூலதனம் ரூ.15,000/-

8) கடியாபட்டி, தீ.நா. முத்தையா செட்டியார் குளித்தளிகை, அர்த்தஜாமக் கட்டளை, கங்கை அபிடேகம் இவற்றுக்காகக் கொடுத்தது ரூ.2,00,000/-

9) கடியாபட்டி, தீ.நா. முத்தையா செட்டியார் அம்மைக்கு நவமணி இழைத்த தங்கக் கவசம், தங்கப் பல்லக்கு, தங்கத் தோளுக்கினியான், நவரத்தினங்கள் ஆகியவை செய்தமைக்குச் செலவு ரூ.68,000/-

10) கடியாபட்டி, தீ.நா. முத்தையா செட்டியார் திருநந்தவனம், விடுதி, பசுமடம் வைத்தமைக்கான செலவு ரூ.50,000/-

11) கடியாபட்டி, தீ.சொ. குருபூஜை மடம், தேவாரப் பாடசாலை, மருத்துவமனை, விடுதி ஆகியவை கட்டச் செலவு ரூ.90,000/-

12) கடியாபட்டி, தீ.சொ.தீ. நாகப்ப செட்டியார், கல்வி நிலையம் அமைத்தமைக்குச் செலவு ரூ.20,000/-

13) கடியாபட்டி, பி.கு. குடும்பத்தாரும், பிசு. குடும்பத்தாரும் அலுவலர் இல்லங்கள், விடுதி ஆகியவை கட்டியமைக்குச் செலவு ரூ.27,000/-

14) மேற்கண்ட இரு குடும்பத்தாரும் வேத பாடசாலை கட்டிய செலவு ரூ.20,000/-

15) இதற்காக எடுத்து வைத்த மூலதனம் ரூ.15,000/-

16) தீ.நா. முத்தையா செட்டியார் அன்னசத்திரம், விடுதி, ஆகமப் பாடசாலை, கால்நடைகள் நீர் அருந்த நான்கு இடங்களில் பாதாளக் கிணறுகள் ஆகியவை அமைத்தமைக்குச் செலவு ரூ.1,40,000/-

ஏறத்தாழ 110 ஆண்டுகளுக்கு முன்னால் திருப்பாதிரிப்புலியூர் சிவாலயத்தில் கடியாபட்டி நகரத்தார் செய்த அறப்பணிகளின் மொத்த மதிப்பு இருபத்தைந்து லட்சத்திற்கும் மேலானதாகும். இது கடியாபட்டி நகரத்தார் தவப்பயனாகும்.

(திருப்பணிகள் தொடரும்)

# 2024-ஆம் ஆண்டின் சிறந்த தொழில் முனைவோராக திரு.வெள்ளையன் சுப்பையா தேர்வு




Indian Business Leader Award - IBLA - 2024: முருகப்பா குழுமத்தின் செயல் தலைவர் திரு. வெள்ளையன் சுப்பையா அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. முருகப்பா குழுமத்தின் நான்காம் தலைமுறைத் தலைவரான வெள்ளையன் சுப்பையா அவர்கள். ஐஐடி சென்னையில் சிவில் இன்ஜினியரிங் பட்டம் மற்றும் மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் எம்பிஏ பட்டம் பெற்றவர். இவர் 2010-இல் சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் & ஃபைனான்ஸ் நிறுவனத் தலைவராகப் பொறுப்பேற்றார். இந் நிறுவனத்தை இந்தியாவின் முன்னணி வாகன நிதி நிறுவனமாக உயர்த்தினார். பின்னர் டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆப் இந்தியாவின் தலைமைப் பொறுப்பை ஏற்றார், அதன் செயல்பாடுகளை பன்முகப்படுத்தினார். அவரது தலைமையின் கீழ், முருகப்பா குழுமம் 2024ஆம் நிதியாண்டில் பல ஆயிரம் கோடிக்கு லாபகரமாக வர்த்தகம் செய்து சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. புதுமை, நிலையான வளர்ச்சி மற்றும் தொலைநோக்கு பார்வையுடன் தொழில் துறையில் அவரது சிறந்த சாதனைக்காக, CNBC-TV18 இந்தியா பிசினஸ் லீடர் விருதுகள் 2024-இன் நடுவர் குழு திரு. வெள்ளையன் சுப்பையா அவர்களை 2024-ஆம் ஆண்டின் இந்தியாவின் சிறந்த தொழில் முனைவோர் என்ற பட்டத்திற்கு தேர்வு செய்து விருது வழங்கி உள்ளது. திரு.வெள்ளையன் சுப்பையா அவர்கள் தொழில் மற்றும் வர்த்தகத் துறையில் மேலும் சாதனைகள் படைக்க நமது செட்டிநாடு வாழ்த்துகிறது.


VALATHI Since 2005

திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.
வளத்தி ஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி)லிட்.
ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி)லிட்.

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு ரூ.1,00,000/- முதல் ரூ.25,00,000/- வரை

அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை

இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.

துவக்கம் 2005

TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.
VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,
SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6-வது கிராஸ் - கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட்,
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093.
Cell : 91235 71029

எண்.1, முதல் தளம்,
ஆதி சொக்கநாதர் கோவில் தெரு,
மதுரை - 625 001.
Cell : 89034 90064

0431-2760064,80 3569950,7968005. 94439 86143 ★ வாய்மையே வெல்லும் ★ tvcfpl@gmail.com valathichitfunds.com


Chettinad
Academy
of Research and Education
(Deemed to be University)
Experience Your
Natural Holistic Healing
Treat the ill with
a sweet pill
@ Chettinad Premium
Homoeopathy Wellness
Clinic
BOOK YOUR APPOINTMENTS NOW!
98417 36000 | 95512 97000
044 474 11000




# திருவிண்ண நகர் என்னும் ஒப்பிலியப்பன் கோயில் - [13]



நா. சௌரிராஜன், கோட்டையூர்

மார்க்கண்டேய முனிவர், திருமகள் தனக்கு மகளாகவும், திருமால் தனது மாப்பிள்ளையாகவும் வர வேண்டும் என்று எண்ணி பேராவல் கொண்டு, அதற்காக இவ்விடத்தில் வந்து திருமாலைக் குறித்து 1000 ஆண்டுகள் தவமிருந்தார். பூமி தேவியான இலட்சுமி செண்பக வனத்தில் மழலைக் குழந்தையாகத் தோன்றிட, தாம் எண்ணியிருக்கும் லட்சுமி இவளே என்றுணர்ந்து எடுத்து வளர்த்து வர, பருவத்தின் எல்லையில் திருமகள் நிற்கும் ஓர் நாள், திருமால் கிழப் பிராமணன் வேடம் பூண்டு வந்து பெண் கேட்டார்.

“நீரோ, முதியவர். என் மகளோ சின்னஞ்சிறியவள். இவ்விதம் கேட்பது உனக்கு அழகல்ல” என்றார் மார்க்கண்டேயர். “முதுமை உடம்புக்குத் தானேயன்றி உள்ளத்தில் இல்லை. எனக்கு எல்லாம் தெரியும்” என்று கிழப்பிராமணன் கூறிட, ‘என் மகள் சமைக்கக் கூடத் தெரியாதவள். மறந்து போய் உணவில் உப்பு சேர்க்கத் தவறினால் கூட நீங்கள் சினம் கொண்டு சபிக்கக்கூடும். இது ஒத்து வராது. போம்” என முனிவர் அவரை விரட்ட, “உம் மகள் சமைக்கும் உப்பில்லாப் பண்டமே எமக்கு உகந்தது. உவகை தரும் அது! நான் இப்பெண் வசுந்தரையை மணந்து கொள்ளாமல் இவ்விடம் விட்டு நகரமாட்டேன்” என்று கூறி பெருமாள் அமர்ந்து விட்டார். செய்வதறியாது திகைத்த மார்க்கண்டேயர் பரந்தாமனை வேண்டி வணங்கிட, தன் தவ வலிமையால் வந்திருப்பவர் திருமாலே என உணர்ந்து கண் திறந்த வேளையில், சங்கு சக்கரதாரியாக பெருமாள் காட்சியளிக்க, தண்டனிட்டு வணங்கிய மார்க்கண்டேயர் மகளை மணமுடித்து வைத்துப் பெருமாளைத் தன் மாப்பிள்ளையாக ஏற்றுக் கொண்டார் என்பது வரலாறு.

உப்பில்லா பண்டத்தை உகந்து நாம் ஏற்போம் என்று பெருமாள் சொன்னதாலேயே, இன்றும் உப்பில்லாத நிவேதனமே பெருமாளுக்குப் படையலாகச் சமர்ப்பிக்கப்படுகிறது. இதனால்தான் இப்பெருமானுக்கு உப்பிலியப்பன் எனும் திருநாமம் அமைந்தது. உப்பிலியப்பன் உப்பில்லாத் திண்பண்டம் ஏற்பவன். ஒப்பிலியப்பன் – ஒப்பற்றவன். திருப்பதி வெங்கடாசலபதி போன்ற பெரிய நின்ற திருக்கோலம்.

பூமி நாச்சியார் எனும் வசுந்தரை பூமிதேவி பெருமாளின் கீழே மண்டியிட்டு வணங்கிடும் திருக்கல்யாணத் திருக்கோலத்தில் உள்ளார். இறைவனுக்கு இடப்பக்கம் அமர்ந்து வணங்கும் நிலையில் மார்க்கண்டேயர் காட்சி தருகின்றார்.

108 திவ்ய தேசங்களில் இங்கு மட்டுமே உப்பில்லா நிவேதனம். வடமொழியில் இத்தலம் வைகுண்டத்திற்குச் சமமானதாகப் பேசப்படுகிறது. எனவே, இதனை ஆகாசநகரி என்றே வடநூல்கள் கூறுகின்றன.

மூலவர்: ஒப்பிலியப்பன். தாயார்: பூமிதேவி (பூமி நாச்சியார்) வசுந்தரை. இங்கு பெருமாள் மட்டும் தனியே புறப்பாடு ஆவதே இல்லை. எப்போதும் பிராட்டியுடன் இணைந்து சேர்ந்தே செல்வார்.

*****



திருவிண்ண நகரப் பெருமாளே போற்றி!
ஒப்பில்லா அப்பனே போற்றி!
உப்பில்லா உணவு உண்டாய் போற்றி!
வசுந்தரை நாயகா போற்றி!
மார்க்கண்டேய முனி மாப்பிள்ளையே போற்றி!
பூதேவி மணவாளா போற்றி! போற்றி!

*****

திருநாகேஸ்வரம் என்பது ஊரின் பெயர். கும்பகோணத்தில் இருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ளது. திருவிண்ணநகர், மார்க்கண்டேய க்ஷேத்திரம், தென் திருப்பதி, ஒப்பிலியப்பன் கோவில் ஆகிய பெயர்களும் உண்டு.

# திருநறையூர் என்னும் நாச்சியார் கோவில் - (14)

நாச்சியார் கோயில் நாயகனே போற்றி!
வஞ்சுளவல்லி உறை சீனிவாசா போற்றி!
நம்பிக்கை நாச்சியாரே போற்றி! போற்றி!

*****

கும்பகோணத்தில் இருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள இந்த ஊர் நாச்சியார் கோயில் என்றே பிரதானமாக அழைக்கப்படுகின்றது.

திரு + நறையூர் என்ற இச்சொல்லில் திருவாகிய திருமகள். நறை என்றால் தமிழில் தேன், மணம் எனப் பொருள். தேன் நிறைந்த பூக்களும், மணம் கமழும் பொய்கையும் சூழ்ந்து சுகந்தமான மணம் வீசும் சுகந்தகிரி எனும் இவ்விடம் தேவிக்குத் தேன் போல இனிக்கும் இருப்பிடமாயிற்று. இவ்வூரில் புராண காலத்தில் மேதாவி என்னும் முனிவர். திருமகளே தனக்கு மகளாக வந்து வாய்க்க வேண்டும் எனக் கடுந்தவத்தை ஆற்றங் கரையோரம் மேற்கொண்டார். இவரின் தவத்தை மெச்சிய திருமகள் அந்த ஆற்றங்கரையில் இருந்த வஞ்சுள மரத்தின் கீழ் குழந்தையாய் வந்துதிக்க, தன் தவ வலிமையால் இவளே திருமகள் என மகிழ்ந்த முனிவர் தம் குடிலுக்கு எடுத்து வந்து வஞ்சுள மரத்தடியில் இருந்த மகவு என்பதால் வஞ்சுள வல்லி எனப் பெயரிட்டு வளர்த்தார்.

திருமகளை நீங்கி தனித்துயிலில் இருந்த எம்பெருமான் தேவியைச் சேரும் தருணம் வர, பூவுலகிற்கு எழுந்தருளி தனது சகல சக்திகளையும் தேவிக்கே அளித்து மணந்து கொண்டார் என்பது வரலாறு. பெருமாள் தாயாரின் இத்தலத் திருமண நிகழ்வில் கருடனின் பங்கு முக்கியமானது. இந்த இடத்தில்தான் வஞ்சளவல்லித் தாயார் இருப்பதாக - இங்கே ஆகாயத்தின் மேல் பறந்த கருடன் அறிந்து கொண்டு அதை வைகுண்டத்தில் இருந்த பெருமானிடம் கூறி, அவரை இங்கு அழைத்து வந்து தாயாருடன் சேர்த்து வைத்ததாக வரலாறு.

அனுமன், இராமயணத்தில் சீதாப்பிராட்டியைத் தேடிக் கண்டுபிடித்து, இராமபிரானிடம் சேர்த்து வைத்த பெருமை போலத், தமக்கும் வேண்டும் எனக் கருடன் கேட்டுக் கொண்டதற்கிணங்க, பெருமாள் இப்பெருமையைக் கருடனுக்குத் தந்தார்.

இங்கு முதல் மரியாதை தாயாருக்குத்தான். அதனால்தான் இத்தலம் நாச்சியார் கோவில் எனப் பெயர் பெற்றது. பெண்ணிற்குப் பெருமை, தாயே நம் பசி தீர்ப்பவள், தாயாருக்குத்தான் முதல் பூஜை, மரியாதை எல்லாம் என்று பெருமாளே தாயாருக்குப் பெருமதிப்புத் தந்த இடம் இது.

இங்கு தாயார் இட்ட நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு எம்பெருமான் வீட்டு மாப்பிள்ளையாகவே இருக்க சம்மதம் தெரிவித்து இங்கேயே இருக்கிறார். இங்கு தாயாரும் பெருமாளும் தினமும் திருமணக் கோலத்திலேயே காட்சி தருகிறார்கள்.

இந்த ஊரில் கருடன் கோயில் என்றால்தான் சிலருக்குத் தெரியும் என்ற வகையில் கருடாழ்வார் தனிச் சிறப்புடன் திகழும் தலமாகும். இங்கு உள்ள கருடாழ்வார் மிகுந்த கீர்த்தியும், மிகப்பெரும் சக்தியும் கொண்டவர் மற்ற திவ்ய தேசத்து கருடாழ்வார்களை விட இவருக்கு மகத்துவம் அதிகம்.

ஒரு சமயம், ஒரு ஊரில், ஒரு சிற்பி ஆகம விதிகட்குட்பட்ட முறையில் ஒரு கருடனைச் செதுக்கி வந்தார். சிற்பம் முடியும் தருவாயில், கருடனுக்கு இரண்டு புறமும் சிறகுகளைச் செதுக்கி அதற்கு உயிரூட்டும் வகையில் இறுதி வடிவம் கொடுத்தாராம். அந்த நிலையில் திடீரென்று உயிர் பெற்ற கருடன்



மேல் நோக்கிப் பறக்க ஆரம்பிக்கவே, இது கண்டு திகைப்பும், அச்சமும் கொண்ட சிற்பி தன் கையில் இருந்த உளியை எடுத்து கருடன் மீது எறிந்தாராம். மூக்கில் அடிபட்ட கருடன் இந்த நாச்சியார் கோயிலில் இறங்கி விட்டாராம். அதன்பின் பெருமாள் அருளால் இத்தலத்திலேயே இருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். இவருக்கு இங்கு 6 வேளைக்கு அமுது படைக்கப்படுகிறது.


எல்லாத் தலங்களுக்கும் மாறாக, இங்கே மட்டும் கருடன் கல் கருடனாக இருக்கிறார். இவர் முதலில் நான்கு பேரால் தாங்கித் தூக்கி வரப்பட்டுப் பின் 4, 8, 16, 32, 64, 128 என்று கடைசியாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தாங்கிவர, கருடன் மீது எம்பெருமான் திருவீதி உலா வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். பக்தியோடு இவரிடம் வேண்டிக் கொள்ளும் வேண்டுதல்கள் யாவும் நிறைவேறும் என்பது இங்குள்ள பக்தர்களின் நம்பிக்கை.

நாச்சியார் கோவில் என்றாலே நினைவுக்கு வரும் இக்கல் கருடனை வணங்கி வெளிவரும் பக்தர்களுக்கு இந்த ஊரில் பிரபலமான பித்தளை விளக்குகளும் - இந்த ஊருக்குப் புகழ் சேர்க்கின்றன. பித்தளை விளக்குகளின் தயாரிப்புக்குப் பெயர் போனது இந்த நாச்சியார் கோவில்.

என்றும் - எல்லா நாட்களும் நித்ய கல்யாணத் திருக்கோலத்தில் உள்ள தெய்வீகத் தம்பதியர்களான நம்பிக்கை நாச்சியார் எனும் வஞ்சுளவல்லித் தாயாரையும், திருநறையூர் நம்பி ஸ்ரீனிவாசன் எனும் சுகந்த வனநாதனையும் இதயப்பூர்வமாக வணங்கி எழுந்து, உலக நலனுக்காக வேண்டிக் கொண்டு, அடுத்த திவ்ய தேசமான திருச்சேறைக்குச் செல்வோம்.

(பயணம் தொடரும்)

# "உறையூர் பஞ்சவர்ணேசுவரர் கோயில்"



## நகரத்தார் திருப்பணி



பழ.கைலாஷ்

உறையூர் பஞ்சவர்ணேசுவரர் கோயில் திருச்சி நகரின் உறையூர் பகுதியில் அமைந்துள்ளது. இந்த கோயிலில் குறிப்பிடத்தக்க சிறந்த கற்சிற்பங்கள் பல உள்ளன. சமீபத்தில் அவற்றுள் ஒரு சிற்பம் இணையத்தில் பேசுபொருளானது. அது அம்மன் கருவறை பின்புறச்சுவரில் உள்ள 'மிதிவண்டி சிற்பம்' – ஒரு வாலிபர் மிதிவண்டி ஓட்டுவது போல் சிற்பம் அமைந்துள்ளது. 'ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் மிதிவண்டியை கண்டுபிடித்துவிட்டான்' என்று இணையத்தில் பலர் பரப்பி கொண்டிருந்தனர். சில செய்தி ஊடகங்களும் இதையே பரப்பினர்.

சில யூ டியூப்பர்கள் தங்களை பெரிய சிற்பவியலாளராக கருதிக்கொண்டு 'இந்த சிற்பம் நிச்சயமாக சமீபத்தில் செதுக்கப்பட்டிருக்காது ஏனென்றால் இந்த அம்மன் சன்னதி மிகப் பழமையானது. இதில் புதிய சிற்பத்தை செதுக்கினால் கோயிலே சிதைந்து இடிந்துவிழும். ஆகையால் இது கோயில் கட்டிய காலத்தில் அதாவது சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் செதுக்கப்பட்ட சைக்கிள் சிற்பம்' என்று கூறினர். உண்மை என்னவென்றால் அந்த அம்மன் சன்னதி உட்பட கோயிலின் பெரும் பகுதி சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் நகரத்தாரால் கட்டப்பெற்றது தான். அங்குள்ள சிற்பங்களும் அப்போது உருவாக்கப்பட்டது தான்.இக்கட்டுரையில் உறையூர் பஞ் சவர்ணேசுவரர் கோயிலில் நகரத்தார் செய்த திருப்பணிகளை பற்றி தெரிந்துகொள்வோம். அதற்கு முன், பஞ்சவர்ணேசுவரர் கோயில் புராண வரலாற்றை பற்றி பார்ப்போம்.







'ஊரெனப்படுவது உறையூரே' என்று போற்றப்பெரும் உறையூருக்கு நடுவே அமைந்துள்ளது இத்திருக்கோயில். இதற்கு 'திருமூக்கீச்சுரம்' என்ற பெயரும் உண்டு. இங்குள்ள மூலவர் சுயம்பு லிங்கமாக உள்ளார்.இது திருஞான சம்பந்தரால் தேவாரப் பாடல் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் ஐந்தாவது தலமாகும்.

மூலவர் பெயர் 'மூக்கீச்சுரத்தடிகள்' என திருஞானசம்பந்த பெருமான் தாம் பாடிய பதிகத்தில் உள்ள பதினொறு பாடல்களிலும் குறிப்பிட்டுள்ளார். சேரர்,சோழர்,பாண்டியர் ஆகிய மூவேந்தர்களையும் இணைய நிறுத்தி அவர்களை வாழவைக்கும் மூலப்பேரரசாக மும்முடி மன்னர்களின் மன்னராக விளங்குபவரே 'மூக்கீச்சுரம்' கோயிலில் இருக்கும் 'மூக்கீச்சுரத்தடிகள்' என்று விளக்கம் அமைத்துள்ளார் திருஞானசம்பந்த பெருமான். இத்தலத்தில் உதங்க முனிவருக்கு இறைவன் ஐந்து காலங்களில் ஐந்து வண்ணங்களாக காட்சியளித்ததால் 'பஞ்சவர்ணேசுவரர்' என்று சமஸ்கிருதத்திலும் 'ஐவண்ணநாதர்' என்று தமிழிலும் அழைக்கப்படுகிறார். அம்மையின் பெயர் காந்திமதியம்மை.

வீரவாதித்தன் என்னும் சோழ அரசன் ஒரு நாள் பட்டத்து யானை மீது உலா வந்தபோது, யானைக்கு மதம் பிடித்தது, அரசனும் பாகனும் திகைத்திருந்தனர். அப்போது இறைவன் அருளால் கோழியொன்று வந்து பட்டத்துயானையின் மீது ஏறி யானையின் தலையின் மீது தன் மூக்கால் கொத்தியது. அதன் பின்பு யானை மதம் நீங்கி இயல்பு நிலைக்கு வந்தது என்பதால் இத்தலத்திற்கு கோழியூர் என்ற பெயரும் உண்டு. பின்னர் அக்கோழியானது ஒரு வில்வ மரத்தடியில் சென்று மறைந்தது, வில்வ மரத்தடியில்











தேடிப்பார்த்தபோது சிவலிங்கமொன்று இருப்பதைக் கண்டு அங்கே சோழன் கோயில் எழுப்பினான் என்கிறது தலபுராண நூல். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான புகழ்சோழ நாயனார் இத்தலத்தில் பிறந்தவர். இவருக்கு இச்சிவாலயத்தில் தனி சன்னதி உள்ளது. ஆதியில் சோழர்களால் கட்டப்பட்ட இந்த சிவாலயமானது காலப்போக்கில் சிதிலமடைந்தது.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உறையூர்வாசிகள் சிதிலமடைந்திருந்த கோயிலை சீரமைக்க முடிவு செய்தனர், அக்காலகட்டத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பாடல் பெற்ற தலங்களை தேடித் தேடித் திருப்பணிகள் செய்துவந்தனர், இதனால் உறையூர் வாசிகள் செட்டிநாட்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார் அதிக அளவில் வசிக்கும் ஊரான தேவகோட்டைக்கு சென்று முறையிட்டனர். தேவகோட்டை நகரத்தாரும் சம்மதம் தெரிவிக்க, கீழவீட்டைச் சேர்ந்த வீர.இராம. சித.முரு. முருகப்ப செட்டியார் கோவில் கட்டும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஆலயத் திருப்பணி கி.பி.1910வாக்கில் தொடங்கப்பெற்றது.

சிதைந்திருந்த சிவன் சன்னதியை பிரித்து புதிய கருங்கல்லால் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், சண்டிகேசுவரர் சன்னதி ஆகியன கட்டப்பெற்றன. அந்த சமயத்தில் சிவலிங்கத்தை பெயர்த்தெடுத்து வேறு இடத்தில் வைத்துவிட்டு, கருவறை திருப்பணி முடிந்த பின் பிரதிஷ்டை செய்யலாம் என எண்ணி லிங்கத்தை எடுப்பதற்காக சுற்றி பதினான்கு அடி வரை தோண்டியும் அசைக்க முடியவில்லை, நிலத்தடி நீர் பெருகி வந்துவிட்டது. சுயம்பு லிங்கத்தை அசைக்க முடியாது என்று உணர்ந்து, லிங்கத்தை எடுக்காமல் அதைச் சுற்றி திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளது. சுயம்பு லிங்கம் என்பதால் கருவறை முகப்பு மேல் பகுதியில் ஸ்ரீ சக்கரம் அமைக்கப்பெற்றுள்ளது. அர்த்தமண்டபம் மற்றும் கருவறை தேவகோட்டங்களில் முறையே நர்த்தன விநாயகர், தெட்சிணாமூர்த்தி, அடிமுடிகாணா அண்ணல், நான்முகன், துர்க்கை ஆகியன சோழர் கால சிலைகளாகவே அமைந்துள்ளன.

சிவன் சன்னதியின் இடப்புறம், தெற்கு முகமாக காந்திமதி அம்மைக்கு புதிய சன்னதி - கருவறை மற்றும் அர்த்தமண்டபத்துடன் கட்டப்பெற்றுள்ளது. அதன் அருகே பள்ளியறையும் இவை அனைத்தையும் இணைக்கும் படி முன் மண்டபமும் கட்டப்பெற்றுள்ளது. காந்திமதி அம்மை சன்னதியில் தான் ‘மிதிவண்டி சிற்பம்’ உள்ளது. மேலும் இந்த சன்னதியின் மேல்புறச் சுவரில் உதங்கமுனிவர் சிவபூசைச் சிற்பமும், கீழ்ப்புறச் சுவரில் யானையை அடக்கிய கோழிச் சிற்பமும் கோயில் புராணத்தை பாமர மக்களுக்கு கொண்டு சேர்க்கும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளது.

முற்காலத்தில் கோயில் நுழைவு வாயில் அருகே காந்திமதி அம்மை சன்னதி இருந்துள்ளது. நகரத்தாரால் சிவன் சன்னதி அருகே புதிய அம்மன் சன்னதி கட்டப்பட்ட பின், காந்திமதி அம்மை சிலை பெயர்த்துவந்து புதிய சன்னதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தற்போதும் நுழைவு வாயில் அருகே அந்த பழைய அம்மன் சன்னதி உள்ளது, ஆனால் சிலை ஏதும் இல்லை, வழிபாட்டிலும் இல்லை. சோழர் காலத்தில் கட்டப்பெற்ற கன்னிமூல கணபதி, முருகன், லெட்சுமி, சரஸ்வதி உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கான சன்னதிகள் நல்ல நிலையில் இருந்ததால் அவற்றை மாற்றாமல், பழுது பார்த்துள்ளனர்.

அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய பெரிய தூண்களை கொண்டு துவஜஸ்தம்ப மண்டபமும் புதிதாக பெரிய உற்சவ மண்டபமும் மடப்பள்ளியும் கட்டப்பெற்றுள்ளது. மேலே கூறிய அனைத்து சன்னதியையும் இணைக்கும்படி, இறைவன் இறைவியை மக்கள் வளம் வந்து வழிபட பெரிய திருச்சுற்று மாளிகை கட்டப்பெற்று அதில் அறுபத்து மூவர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளன. திருச்சுற்று தூண்களில் உள்ள ஊர்த்துவ தாண்டமூர்த்தி, கரியுரி தாண்டமூர்த்தி, ஏகபாத மூர்த்தி உள்ளிட்ட சிற்பங்களும் துவஜஸ்தம்ப மண்டப சிற்பங்களும் நகரத்தார் சிற்பக்கலைக்கு சான்றாக திகழ்கின்றன. இத்தல தீர்த்தமாக விளங்கும் ‘சிவதீர்த்தம்‘ கல்திருப்பணி செய்யப்பெற்றுள்ளது.

வனப்புமிக்க வண்ண சுதைச் சிற்பங்களுடன் மூன்று நிலை புதிய இராஜகோபுரமும் மதில் சுவரும் என கோயிலில் பெரும் பகுதி(90%) நகரத்தார் திருப்பணியே. இவை அனைத்தும் நாட்டுக்கோட்டை நகரத்தாருள் மாத்தூர் கோயில் உறையூர் வகுப்பைச் சேர்ந்த தேவகோட்டை கீழவீட்டு வீர.இராம.சித.முரு. முருகப்ப செட்டியாரால் அன்றைய மதிப்பில் நான்கு லட்சம் ரூபாய் (4,00,000) பொருட்செலவில் திருப்பணி செய்யப்பெற்று, துந்துபி வருடம் சித்திரை மாதம் 21-ஆம் நாள்(03/05/1922) திருக்குட நன்னீராட்டு பெருவிழா நடைபெற்றுள்ளது. உறையூர் ஐவண்ணநாதர் ஆலயம் அழியாப்பெருமை வாய்ந்த சிற்பங்களின் திருக்கூடமாக இன்று திகழ்வதற்குக் காரணம் நகரத்தார் திருப்பணியே. ♦

# வாங்க... வாங்க... வியட்நாமுக்கு வாங்க...



சோமலெ சோமசுந்தரம்

## 9 வியட்நாமில் இந்து மதம்

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
தென்னாட்டவர்க்கு சிவனே போற்றி!

என்ற சொற்றொடர் தென் இந்தியாவில் சைவ சமயத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட இன்றும் நம் ஆலய வழிபாடுகளில் கூறப்பட்டு வருகிறது. தென் இந்தியாவிற்கு அப்பால், தென் கிழக்காசிய நாடுகளான கம்போடியா, வியட்நாம், தாய்லாந்து. மலேசியா, இந்தோனேசியா போன்ற பல நாடுகளில் சைவமும், இந்து மதமும் பரவியுள்ளன.

அந்த வரலாறு இந்நாடுகளில் சுற்றுப்பயணம் செய்யும் போது பெரும்பாலாக வெளிச்சத்திற்கு வருவதில்லை. மலேசியாவிலும், இந்தோனேசியாவின் பாலி மாகாணத்திலும் இந்து மதம் தற்போதும் பரவலாகக் கடைப்பிடிக்கப்படுவதால் அப்பகுதிகள் இதற்குச் சற்று விதிவிலக்காக உள்ளன. கம்போடியாவில் உள்ள உலகின் மிகப்பெரிய கோவிலான ‘அங்கோர் வாட்’ விஷ்ணு கோவில் பிற்காலத்தில் புத்தர் கோவிலாக மாறி தற்போது மிகப் பாழடைந்த நிலையில், வழி படும் ஆலயமாக இல்லாமல், தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று சுற்றுலா மையமாகவே உள்ளது. அந்த நிலையே, மலேசியா, சிங்கப்பூர் தவிர, மற்ற தென் கிழக்காசிய நாடுகளில் உள்ள பல இந்துக் கோவில்களிலும் உள்ளது.

### இந்து நாடு

ஹோ சி மின் சிட்டியில் உள்ள இந்துக் கோவில்கள் கடந்த 150 ஆண்டுகளில் புலம் பெயர்ந்த தமிழர்களால் கட்டப்பட்டவை. அதற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பேயே வியட்நாமில் கட்டப்பட்ட இந்துக் கோவில்களின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால் வியட்நாமின் மத்திய மற்றும் தென் கிழக்கு கடற்கரைப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டும்.

தொன்மை வாய்ந்த “ஹோய் யேன்” பகுதிக்கு கடல் வணிகம் மூலம் மலேசியா



மற்றும் இந்தோனேசியாவில் இருந்து வந்த சாம் (Cham) என அழைக்கப்படும் மலாயா-பாலினேசியா இனத்தினர், 2-ஆம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதியை தனி நாடாக ஆண்டு வந்தனர். அமராவதி என இப்பகுதியை அவர்கள் குறிப்பிட்டு, இந்து மதத்தைப் பின்பற்றினர். அதன் காரணமாக அவர்கள் மொழியிலும் தமிழ், சமஸ்கிருதம் ஆகியவற்றின் தாக்கம் இருந்தது. தற்போது இப்பகுதியிலும், அருகே உள்ள நின்ஹ் துஹான், பிங் துஹான் மாகாணங்களிலும் வாழ்கின்ற 70,000 சாம் இனத்தினரே வியட்நாம் நாட்டின் சிறுபான்மை இந்துக்கள்.

‘போ நகர்’ போன்ற ஒரு சில கோவில்கள் மட்டுமே நன்கு பராமரிக்கப்பட்டு வழிபடும் நிலையில் உள்ளன. வழிபாடு என்றால் அபிஷேகம், ஆராதனை எல்லாம் கிடையாது. ஊதுபத்தி, பழங்களை சமர்ப்பித்து பக்தர்கள் அமைதியாக பிரார்த்தனை செய்கின்றனர்.

### புதுப்பொலிவு பெறும் ஆலயங்கள்

டநாங் நகரின் தென் மேற்கே உள்ள ‘குவாங் நம்’ மாநிலத்தில் உள்ள பல பாழடைந்த மை சான் ("My So'n") குழும இந்து ஆலயங்களை யுனெஸ்கோ பாரம்பரியத் தளமாக அறிவித்துள்ளது. அவற்றை



மறுசீரமைக்கும் பணியில் இந்திய அரசும் வியட்நாம் அரசும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இசைந்து, இந்திய தொல்லியல் ஆய்வு அமைப்பின் பணிகள் தொடர்கின்றன.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, நான் கங்கை கொண்ட சோழபுரம் சென்றபோது வரலாற்றுப் புகழ்மிக்க அக்கோவிலைப் பாழடைந்த நிலையில் பார்த்து வருத்தப்பட்டுள்ளேன். 2024-இல் சென்றபோது அக்கோவில் சீரமைக்கப்பட்டு அதன் பிரமிக்கத்தக்க கட்டிடக்கலையுடன், தினமும் நூற்றுக்கணக்கானோர் வழிபடும் ஆலயமாக, புதுப்பிக்கப்பட்டுள்ளதைப் பார்த்து மகிழ்ந்தேன். அது போன்றே வியட்நாம், கம்போடியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் உள்ள மிகப் பழமையான இந்து ஆலயங்கள் புதுப்பிக்கப்பட வேண்டுமென்ற ஏக்கம் மனதில் வந்தது.

### கேட் டியன்

ஹோ சி மின் சிட்டியில் இருந்து 150 கி.மீ. தூரத்தில் வடக்கில் உள்ள கேட் டியன் (Cat Tien) நகரம் லாம் டோங் மாகாணத்தில் உள்ளது.






இங்கு நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் 2.27 மீட்டர் உயரமுள்ள சிவலிங்கம் மற்றும் விநாயகர், பிரம்மா. விஷ்ணு சிலைகள். சமஸ்கிருத கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கு கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை இந்துக்கள் வாழ்ந்ததை தொல்லியல் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

### ‘ஆயிரம் லிங்க’ தரிசனம்

வியட்நாமின் அண்டை நாடான கம்போடியாவில் உலகின் மிகப் பெரிய கோவிலான ‘அங்கோர் வாட்’ அமைந்துள்ள சியாம் ரீப் நகருக்கு சென்றபோது, அப்பகுதியின் வட கிழக்கில் உள்ள ஆயிரம் லிங்கங்களைப் பார்க்க போகலாம் என எங்கள் சுற்றுலா வழிகாட்டி கூறியபோது எனக்கு வியப்பாகவே இருந்தது.



ஒரே இடத்தில் ஆயிரம் லிங்கங்களா? அந்தக் காட்சி எப்படி இருக்கும் என்ற கற்பனை உணர்வுகளோடு ஆயிரம் லிங்கம் (கிபல் ஸ்பீன்) ஆற்றின் கரையை அடைந்தோம். ஓடை போன்று தண்ணீர் சென்ற அந்தப் பகுதியில் ஆற்றுக்குள் எண்ணற்ற (ஆயிரம் என்கிறார்கள் உள்ளூர் மக்கள்) லிங்கங்களின் மீது ஆற்று நீர் செல்வதை பார்த்த போது இந்த ஆயிரம் லிங்கங்களுக்கும் எப்போதும் அபிஷேகம் என்ற தெய்வீக உணர்வு வந்தது.

கற்பாறைகளில் அழகாக செதுக்கப்பட்டுள்ள அந்த லிங்கங்கள் பெரும்பாலும் சிறிதாகவே இருந்தன. ஆங்காங்கே சில லிங்கங்கள் பெரிதாக நம் கண்ணைக் கவர்ந்தன. ஆற்றின் மற்ற பகுதிகளில் அனந்த சயன நிலையில் விஷ்ணு சிற்பமும், லட்சுமி போன்ற மற்ற சிற்பங்களும் இப்பகுதியின் சிறப்புக்களாகவும்.



பதினொன்றாம் நூற்றாண்டில் முதலாம் சூர்யவர்மன் ஆட்சியில் தொடங்கப்பட்ட இத்திருப்பணியை பின்னர் அவர் மகன் இரண்டாம் சூர்யவர்மன் நிறைவு செய்தாராம். ‘எறும்பு ஊர கல்லும் தேயும்’ என்ற பழமொழிக்கு இந்த லிங்கங்களே சாட்சி! பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து ஆற்று நீர் செல்வதால் பெரும்பாலான லிங்கங்கள் தண்ணீரில் தேய்ந்து தற்போது வட்டம் போல் தெரிகின்றன! கர்நாடக மாநிலத்தில் சிர்சி நகரில் உள்ள ஷர்மலா ஆற்றங்கரையில் இது போன்றே தண்ணீரில் சஹஸ்ரலிங்கங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)


Innovative Homes & Developers Pvt. Ltd.
Creating Values & Lifestyles
"உங்கள் மண்ணை பொன்னாக்குவோம்
Inviting Land Owners for Joint Development"
Together we can build a great future!
LUXURY 2&3 BHK
BOOKINGS OPEN
FROM 1.6 Cr ONWARDS
RERA NO.TN/29/Building/077/2023
Virugambakkam
innovativehomes.in
Call Now : 98410 12145
7/11,1-A, Bharathi Nagar 2nd Street,T.Nagar, Chennai - 17
இன்னோவேடிவ் அண்ணாமலை



# தொழில் தொடங்கலாம் வாங்க 72

சேதுராமன் சாத்தப்பன்

## ஸ்டார்ட் அப் உலகம்

## விரிவடையும் வீடியோ உலகம் சாதனை படைக்கும் ஸ்டார்ட் அப்

வீடியோ உலகம் வெகுவாக விரிவடைந்து வருகிறது. சாதாரணமாக ஒரு விஷயத்தை ஆடியோவாக சொல்வதற்கும், வீடியோவாக சொல்வதற்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. வீடியோவாக சொல்லும் போது மக்களிடம் ரீச் பல மடங்கு அதிகமாக இருக்கிறது. வீடியோ எடுப்பதற்கு அதிக செலவாகும். மேலும் அதை எடிட்டிங் செய்து கொண்டு வருவதற்கு பல நாட்கள் ஆகும் என்ற நிலைமை இருக்கிறது. ஆனால் ஒரு வீடியோவை எப்படி சிறப்பாக, எளிதாக கொண்டு வருவது, ஒரு போட்டோவை எப்படி வீடியோவாக மாற்றுவது என்று பல வகைகளிலும் பல ஸ்டார்ட் அப் கம்பெனிகள் ரூம் போட்டு யோசித்து கொண்டிருக்கின்றன.




ஆர்ட்டிபிஷியல் இண்டெலிஜெண்ட் ஸ்டார்ட் அப் Unscript, வீடியோ உருவாக்கத்தை அனைவரும் அணுகக்கூடியதாகவும் எளிதாகவும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ரித்விகா சௌத்ரி, அகில் மேனன் மற்றும் அபூர்வ் ஜெயின் ஆகியோரால் 2021இல் நிறுவப்பட்ட Unscript விலையுயர்ந்த உபகரணங்கள் அல்லது நேரத்தைச் செலவழிக்கும் எடிட்டிங் செயல்முறைகளின் தேவைகளை நீக்கி, வீடியோ தயாரிப்பை எளிமைப்படுத்தியிருக்கிறது.

பெங்களூரு மற்றும் சான் பிரான்சிஸ்கோவை தளமாகக் கொண்ட AI ஸ்டார்ட்அப் Unscript சமீபத்தில் இந்த துறையில் சாதனைகள் படைத்து வருகிறது. ஒரு புகைப்படத்தை முழு அளவிலான வீடியோவாக மாற்றுகிறது, தலை அசைவுகள், கண் அசைவுகள், முகபாவனைகள், குரல் மாடுலேஷன்கள் மற்றும் உடல் மொழி ஆகியவற்றை உருவாக்கி, 2 நிமிடங்களுக்குள் தருகிறது. ஸ்டுடியோ-தரமான முடிவுகளை அடைந்து, நேரத்தைக் கணிசமாகக் குறைக்கிறது. கைகளினால் செய்யப்படும் எடிட்டிங் முயற்சிகளை கணிசமாகக் குறைத்து தரமான வீடியோவைக் கொடுக்கிறது.

இந்த ஸ்டார்ட் அப் கம்பெனி புதிய அப்கிரேட் Google Vlogger, Microsoft-ன் VASA-1 மற்றும் Alibaba-வின் EMO ஆகிய சாப்ட்வேர்களுக்கு போட்டியாக உள்ளது, இது பிராண்டுகள், மார்க்கெட்டிங் ஏஜென்சிகள் மற்றும் இன்புளுயன்சர்களுக்கு ஏற்றதாக உள்ளது. 50 க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் இதன் செலவு குறைந்த, மேம்படுத்தக்கூடிய வீடியோ தயாரிப்பு திறன்களால் பயனடைகின்றன.

தற்போது, Unscript, ஹெல்த்ஃபைமீ, அமேசின் கிரேஸ், ஃப்ளோவொர்க்ஸ், ரேடியோசிட்டி, HUL மற்றும் பாம்பே ஷேவிங் கம்பெனி போன்ற முன்னணி பிராண்டுகளுடன் கூட்டு சேர்ந்து பல்வேறு தொழில்துறை தேவைகளை பூர்த்தி செய்யும் AI தீர்வுகளை வழங்குகிறது.

இவர்களின் பர்சனலைஸ்டு வீடியோக்கள் HealthifyMe-க்கான இணையதள வருகையில் 2.8X அதிகரிப்புக்கு வழிவகுத்தது, Floworks க்கான வருகையில் 4X கூடியிருக்கிறது மற்றும் Amazin Graze என்ற தளத்தில் அவர்களின் ஆன்லைன் தளத்திற்கு வந்து வாங்குவதை கைவிடப்படுவதை 20% ஆகக் குறைத்திருக்கிறது. வாடிக்கையாளர்களின் சிஸ்டத்துடன் எளிதாக ஒருங்கிணைத்து ஈர்க்கக்கூடிய வீடியோ உள்ளடக்கத்தை உருவாக்குவதில் இவர்கள் நிபுணத்துவம் பெற்றுள்ளார்கள். வாடிக்கையாளர்களின் மார்க்கெட்டிங் மற்றும் மேலாண்மை முயற்சிகளை மேம்படுத்துகிறார்கள்.

### வீடியோக்களை பல மொழிகளில் டப் செய்யலாம்

மேலும், இவர்களின் சிறப்பு என்னவென்றால் வீடியோக்களை சிரமமின்றி பல மொழிகளில் டப் செய்து மொழிபெயர்க்கலாம். டெக்ஸ்ட் ஸ்கிரிப்ட்களில் இருந்து உருவாக்கப்படும் லைஃப் லைக் AI அவதார்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களையும் உருவாக்க உதவுகிறது.

"Unscript" தனிநபர்கள், வணிகங்கள் மற்றும் உள்ளடக்க படைப்பாளர்களுக்கு வலுவூட்டும் வீடியோக்களை விரைவாகவும் மலிவாகவும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தகவல் தொடர்பு மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான முக்கிய ஊடகமாக வீடியோ மாறிவருவதால், இந்த அத்தியாவசிய கருவியை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதில் இந்த ஸ்டார்ட் அப் முன்னணியில் உள்ளது.


இவர்களின் இணையதளம் www.unscript.ai சென்று பாருங்கள், உங்கள் வணிகத்தை மேம்படுத்த தொடர்பு கொள்ளலாம்.

# இந்த மாத வழிகாட்டி ஆத்தங்குடி முத்துப்பட்டிணம் ஸ்மார்ட் டைமண்ட்ஸ் அருணாச்சலம், ராம்நாத் (சென்னை)



ஒவ்வொரு மாதமும் வழிகாட்டிகளை இளைஞர்களுக்கு அறிமுகம் செய்வதால் பலருக்கு தொழில் செய்யும் ஆர்வம் வந்திருப்பது நமக்கு வரும் தொலைபேசி அழைப்புகளில் இருந்து தெரிய வருகிறது. இதில் இரண்டு நன்மைகள் இருக்கின்றன. ஒன்று திறமை வாய்ந்தவர்கள் நமக்கு வழிகாட்டிகளாக கிடைப்பது. இரண்டாவது அந்த வழிகாட்டிகளை இளைஞர்கள் சரிவர பயன்படுத்திக் கொள்வதால் அவர்கள் தொழிலதிபர்களாக உயர்வது.

குறைந்த அளவு மக்கள் தொகை உடைய நகரத்தார்கள் அதிக அளவில் முதலீடு செய்வது வைரத்தில் என்றால் நாம் எல்லோருக்கும் ஆச்சரியமாக இருக்கும். அந்த அளவிற்கு வைரத்தின் மீது நம்மவர்கள் பிரியம் வைத்திருக்கிறார்கள். நமது ஐயாக்கள் வைரத்தை உழக்கால் அளப்பார்கள் என்பார்கள். அந்த அளவிற்கு நம் ஐயாக்கள் வைரத்தை சேமித்து வைத்திருந்தார்கள், அதுவும் மதிப்புமிக்க பெல்ஜியம் வைரங்கள். ஆனால் அந்தக் காலத்தில் வைரத்தை ஒரு வியாபாரமாக நம்மில் பலர் நினைக்கவில்லை. ஆதலால் குஜராத்திகள், ராஜஸ்தானிகள் நம்மவர்களிடையே வைர வியாபாரத்தில் மிகவும் பிரபலமாகி விட்டார்கள். நம்மவர்கள் இந்த வியாபாரத்தில் மிகவும் குறைவு. கடந்த 20 வருடங்களாக வைர நகைகள் வியாபாரத்தில் சிறந்து விளங்கி வரும் ஆத்தங்குடி முத்துபட்டிணத்தைச் சேர்ந்த அருணாச்சலம் அவரது மகன் ராம்நாத் ஆகியோரை நமது செட்டிநாடு இதழுக்காகப் பேட்டி கண்டோம். வங்கியாளர் ஒருவர் வைர வியாபாரி ஆனது ஒரு சுவாரசியமான கதை. அப்பா, மகன் இருவரிடமும் பேட்டி கண்டோம். பேட்டி மிகவும் விறுவிறுப்பாக இருந்தது.



**எப்படி வைரத் தொழிலை தேர்ந்தெடுத்தீர்கள்?**

(அருணாச்சலம்) அடிப்படையில் நான் ஒரு வங்கியாளர். பேங்க் ஆப் மதுராவில் சுமார் 24 ஆண்டுகள் பணிபுரிந்தேன். மும்பையில் பணிபுரியும் போது சில வைர வியாபாரிகள் உடன் தொடர்பு கிடைத்தது. அந்த தொடர்பில் ஊரில் இருக்கும் நமது நகரத்தார்களின் தேவைகளுக்கு வைரங்கள் வாங்கி கொடுப்பதை சிறிய அளவில் செய்து வந்தேன். அது வைரங்களைப் பற்றி தெரிந்து கொள்ள நிறைய உதவியது. பேங்க் ஆஃப் மதுரா, ஐசிஐசிஐ பேங்க் உடன் இணைந்த பிறகு, ஐசிஐசிஐ வங்கி ஒரு விஆர்எஸ் ஸ்கீமை 2003-ஆம் ஆண்டு கொண்டு வந்தது. அதை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு பணி ஓய்வு பெற்றேன். பணி ஓய்விற்குப் பிறகு எனக்கும் முழுநேரமாக வைரத் தொழிலில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. எனது மனைவியும் என்னை மிகவும் ஊக்கப்படுத்தினார். ஆதலால் இருவரும் மும்பையில் ஜவேரி பஜாரில் அவ்வப்போது நடக்கும் வைரம் சம்பந்தமான வகுப்புக்களில் கலந்து கொள்வோம். பின்னர் சூரத் சென்று சில மாதங்கள் வைரங்கள் பற்றி படித்தோம்.

பின்னர் சென்னைக்கு வந்து செட்டில் ஆனோம். அப்போது வைரங்களை, வைர நகைகளை விற்பதற்கு எனது பழைய பேங்க் ஆப் மதுரா நண்பர்கள் மிகவும் உதவினார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இரவு பகல் பாராமல் இருவரும் கடினமாக உழைத்தோம். அந்த உழைப்பின் பயன் தான் இன்று வைர வியாபாரத்தில் எங்களுக்கு என்று ஒரு இடத்தை பிடித்து இருக்கிறோம்.

**மகன் ராம்நாத் எப்போது உங்களுடன் பிசினஸில் இணைந்தார்?**

(ராம்நாத்) எனது எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் படிப்பை முடித்தவுடன் 2008-ஆம் ஆண்டு அமெரிக்காவிற்கு வேலை நிமித்தமாகச் சென்றேன். கிட்டத்தட்ட ஒரு வருடம் அங்கு வேலை பார்த்தேன். மனது என்னவோ வியாபாரத்தில் தான் நாட்டமாக இருந்தது. ஆதலால் 2009-இல் இந்தியாவிற்கு திரும்பி வந்துவிட்டேன். என்ன வியாபாரம் செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது தந்தையார் எங்களுடன் வைர வியாபாரத்தில் இணைந்து பணியாற்ற விருப்பமா என்று கேட்டார்கள். அது எனக்கு ஒரு நல்ல யோசனையாகப்பட்டது. பின்னர் மறுபடி மும்பை வந்து Full Time Gemology Course படித்தேன். அது எனக்கு வைரங்களைப் பற்றியும், கிரேடிங் பற்றியும் நன்கு அறிந்து கொள்ள உதவியது. என் மனைவி சித்ராவும் Diamond Grading படித்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. குடும்பத்தில் அனைவரும் இந்தத் தொழிலில் விருப்பமாக ஈடுபட்டிருப்பதால் வியாபாரத்தில் எங்களால் வெற்றி பெற அது உதவியது.

**வைரங்களை எங்கிருந்து வாங்குகிறீர்கள்? எங்கு நகைகளை செய்து வருகிறீர்கள்?**

இந்தியாவின் சிறப்பான இரண்டு வைர மார்க்கெட்டுகள் என்றால் அது மும்பை மற்றும் சூரத் தான். கடந்த 20, 25 வருடங்களாக இந்த மார்க்கெட்டுகளில் குறிப்பிடவர்களிடமிருந்து தரமான வைரங்களைப் பெற்று

## 2025 நகரத்தார் வண்ண காலண்டர் இன்றே ஆர்டர் செய்யுங்கள்



கடந்த ஆண்டைப் போலவே 2025-ஆம் ஆண்டு வண்ணக் காலண்டர், நகரத்தார் கோவில்களின் இறைவன் இறைவியர் படங்களுடன் ஐந்தாவது ஆண்டாக வெளிவர இருக்கிறது. நமது நகரத்தார் பெருமையை நிலைநாட்டும் இந்த காலண்டர் வேண்டுவோர், முன்கூட்டியே பதிவு செய்து, தபால் மூலம் வீட்டிற்கே வரவழைத்துக் கொள்ளலாம். காலண்டர் விலை தங்கள் இல்லத்திற்கே தபாலில் பெற ₹90. ஐந்து காலண்டர்களாக வாங்கும்போது தபால் செலவு சேர்த்து விலை ₹300 மட்டும்.

மற்றும் குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்களுக்கு புது வருட அன்பளிப்பாக கொடுக்க விரும்புபவர்களும் தொடர்பு கொண்டு வாங்கிக் கொள்ளலாம். இந்த காலண்டர் விற்பனை செய்ய முகவர்கள் தேவை.

மேலும் 15.12.2024 - ஞாயிற்றுக் கிழமை (10 AM - 8 PM) YMCA - பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னையில் நடைபெறவிருக்கும் "காரைக்குடி சந்தை"யில் "வள்ளி ஆர்ட்ஸ்" ஸ்டாலிலும் காலண்டர்கள் கிடைக்கும். எங்களது முயற்சி மேலும் தொடர உங்களது ஒத்துழைப்பும் தேவை. வாழ்க நகரத்தார் புகழ்.

**கண்ணம்மாள் பழநியப்பன், அருள்மிகு தில்லை சிவா புக்ஸ்**

Plot No. 5, Newry Sanctum, Thirumullaivoyal, Avadi, Chennai, 600062

WhatsApp 9381201678. G pay Cell No 9345087356

**ARULMIGU TILLAI SIVAA BOOKS**

**CITY UNION BANK**, T.Nagar. A/C NO: 510909010152632 IFSC CODE: CIUB0000001 MICR CODE: 600054003


வருகிறோம். வைர நகைகளை சென்னையிலே செய்து வருகிறோம். தற்போது பலர் தங்களுடைய டிசைனில் வைர நகைகளை செய்து பார்க்க ஆசைப்படுகிறார்கள். அவர்களுக்கு எங்களுடைய CAD டிசைன் சென்டரில் அவர்கள் விரும்பும் நகைகளை மாடல் செய்து காண்பித்து, அவர்களுக்கு திருப்தி ஏற்பட்டால் அந்த மாடலிலேயே செய்து தருகிறோம்.

வைரம் விற்பது என்பது எங்களுக்கு 15 நிமிடம் வேலையாக இருந்தாலும், அதை எப்படி நீண்ட காலத்திற்கு பாதுகாப்பாக வைத்துக் கொள்வது என்பதை அரை மணி நேரம் அவர்களுக்கு விளக்கமாக சொல்லுகிறோம். அது வைர நகைகளை பத்திரமாக நீண்டகாலம் பாதுகாப்பதற்கு அவர்களுக்கு உதவுகிறது.

மேலும் தற்போது தமிழ்நாட்டில் நகைக் கடைகளில் முக்கிய இடமாக உள்ள தி.நகரில் எங்களது வைர நகைகள் ஷோரூம் திறக்க ஏற்பாடுகள் செய்து வருகிறோம்.

எங்களுடைய வாடிக்கையாளர்களில் 50 சதவீதம் வெளிநாட்டில் வசிப்பவர்கள் என்பதில் எங்களுக்கு பெருமை. அடிக்கடி வெளிநாடுகளில் குறிப்பாக அமெரிக்காவில் வைர நகைக் கண்காட்சிகள் நடத்தி வருகிறோம்.

### குடும்பம் பற்றி....

(அருணாச்சலம்) அப்பா திரு ராமநாதன் செட்டியார், அம்மா தெய்வானை ஆச்சி. மாமனார் சொக்கலிங்கம் புதூரை சேர்ந்த திரு. AR. முருகப்ப செட்டியார். தற்போது இவர்களுக்கு 91 வயது ஆகிறது. மாமியார் மறைந்த திருமதி நாச்சம்மை ஆச்சி. மனைவி திருமதி சௌந்தரம், வைர வியாபாரத்தில் ஆர்வம் மிகவும் அதிகம். எங்களுடைய வியாபார வளர்ச்சியில் இவருக்கு முக்கிய பங்குண்டு. எனக்கு இரண்டு மகன்கள். மூத்தவர் ராம்நாத். என்னுடன் இணைந்து வைர வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறார். அவரது மனைவி சித்ரா ராம்நாத். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள். பேரன் சச்சின் அருணாச்சலம் ஏழாவது வகுப்பு படித்து வருகிறார். கிரிக்கெட்டில் மிகவும் ஆர்வம் அதிகம். பேத்தி சௌந்தர்யா நான்காவது வகுப்பு படித்து வருகிறார். இரண்டாவது மகன் முருகப்பன். அமெரிக்காவில் எம்எஸ் படித்துவிட்டு அங்கேயே டெக்ஸாசில் வேலை செய்து வருகிறார். மனைவி திவ்யா முருகப்பன். பேத்தி கீர்த்தனா, 2 வயதாகிறது.

### தொழிலில் ஈடுபட விரும்பும் நம் இளைஞர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

இன்றைய இளைஞர்கள் ஊக்கமுடன் சுயமாகத் தொழில் செய்ய பல வாய்ப்புகள் பெருகி இருக்கின்றன. ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் என்றில்லாமல் துணிந்து செயல்பட வேண்டும்.

இதற்கு தக்கதொரு வழிகாட்டியாக திரு சேதுராமன் சாத்தப்பன் போன்றவர்கள் இருப்பதை பயன்படுத்திக்கொண்டு முன்னேறலாம்.


ஈமெயில் Sethuraman.sathappan@gmail.com,
மொபைல் 9820451259,
இணையதளம் www.startupandbusinessnews.com


நேசங்களோடு வளர்ந்த பந்தம்...
காலங்களோடு கலந்த பாரம்பரியம்...!
மகன்லால்
வைரம் & தங்கம்
We Offer Diamonds Grade by
GIA
Authorised Forevermark Jeweller
FOREVERMARK


Maganlal
a precious legacy
Desire meets
a New Style.
MAGANLAL MEHTA & CO
Diamond & Gold Jewellery Private Limited
#51, AVM Building, Kallukatti
North, Karaikudi - 630 001
# 27/43, North Usman Road,
T.Nagar, Chennai - 600 017
we@maganlalmehta.com
www.maganlaldiamonds.com
87 YEARS
CUSTOMER CARE
+91 888 111 5555
+91 888 111 4555

# இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு – 14



லெ. முத்து
இணை இயக்குனர்
(ஓய்வு) இஸ்ரோ.

## சுப. சொக்கலிங்கம்



இஸ்ரோ நகரத்தார்களைப் பற்றி நான் எழுதி வரும் தொடர் கட்டுரைகளின் அடுத்த பகுதியாக நமது செயற்கைகோள்களின் வெற்றியில் முக்கிய பங்கேற்கும் ஒரு துறையில் அரும்பணியாற்றிய நகரத்தாரான திரு. சுப. சொக்கலிங்கத்தை குறித்து இந்த இதழில் எழுத விழைகிறேன். திரு. சொக்கலிங்கம் தேவகோட்டை மண்ணில் பிறந்த பெருமைக்குரியவர். விண்வெளித்துறையில் தர உறுதிப்பாடு பணியில் ஒரு முன்னோடி.

விண்வெளித் துறையில் தர உறுதிப்பாட்டின் முக்கியத்துவம் குறித்து சில வரிகள். எந்த சாதனத்தையும் வடிவமைக்கும் முன்னர் அதில் இணைக்கப்படும் சாதனங்கள் அனைத்தும் தரமானவையாக இருக்கின்றனவா என்பதை நிர்ணயிப்பது மிக அவசியமாகிறது. அதுவும் விண்ணில் பல கிலோ மீட்டர் உயரத்தில் பல தட்ப வெப்ப நிலைகளுக்கு உட்பட்டு வலம் வரும் விண்வெளி சாதனங்கள் பழுதடைந்தால் அவைகளை பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையில் அவைகளில் இணைக்கப்படும் அனைத்து சாதனங்களின் தரத்தை அவைகளை விண்வெளிக்கு அனுப்பும் முன்னரே உறுதி செய்வது மிக அவசியமான பணியாகிறது. இது சம்பந்தப்பட்ட துறையை தர உறுதிப்பாடு (Quality Assurance) என்று நாம் அழைக்கிறோம்.

ராக்கெட்களிலோ செயற்கை கோள்களிலோ உபயோகப்படுத்தும் பலவிதமான சாதனங்களும் தம் பணிகளை செவ்வனே செய்வதோடு மற்ற சாதனங்களோடு இணைந்து பணியாற்றினால் தான் விண்வெளிப் பயணம் வெற்றிகரமாக அமையும். இதை உறுதி செய்யும் வேலையையே தர உறுதிப்பாடு பிரிவுகள் செய்கின்றன.

தர உறுதிப்பாடு என்பது இரண்டு வகைப்படும். 1. தரக்கட்டுப்பாடு (Quality Control) 2. தர உறுதிப்பாடு (Quality Assurance). தரக்கட்டுப்பாடு என்பது ஒவ்வொரு சாதனமும் அதன் பாகங்களும் உருவாக்கப்படும் போது அது நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு ஏற்ப செய்யப்பட்டிருக்கிறதா என்பதை உறுதி செய்து அப்படி இல்லாதவைகளை திரும்ப சரி செய்வதோ அல்லது உபயோகத்திலிருந்து நீக்கி விடுவதோ (Rework or Rejection) ஆகும். தர உறுதிப்பாடு என்பது சாதனங்கள் மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட ராக்கெட் அல்லது செயற்கை கோளின் சோதனை முடிவுகள் (Performance of parts and integrated Rockets and Satellites) நிர்ணயிக்கப்பட்ட முடிவுகளோடு (Specified Performance results) ஒத்துப்போகிறதா என்பதை சரி பார்த்து இவை விண்ணில் குறிப்பிட்ட பணியை நிறைவேற்றும் என்ற உறுதி (Assurance) வழங்கும் செயலாகும். இதன் அடிப்படையிலேயே ராக்கெட் மற்றும் செயற்கை கோள்கள் விண்ணில் செலுத்த அனுமதிக்கப்படுகின்றன. இதனால் தான் இந்தப்பணி விண்வெளி சாதனங்களின் வெற்றியை உறுதி செய்யும் பணி என்று நான் குறிப்பிடக்காரணம்.

இந்த அதிமுக்கியமான பணியில், இஸ்ரோவின் செயற்கை கோள்களுக்கான தரக்கட்டுப்பாட்டு விதிகளை (Procedures for Quality Assurance of Satellites) நிர்ணயித்து இதன் முன்னோடியாக திகழ்ந்தவர் திரு. சொக்கலிங்கம் அவர்கள்.

- திரு. சொக்கலிங்கம் தனது பள்ளிப்படிப்பை சேலம் லிட்டில் ஃபிளவர் உயர்நிலைப் பள்ளியிலும், பொறியியல் படிப்பை Coimbatore Institute of Technology -யிலும் நிறைவு செய்துள்ளார்.
- 1972-ம் வருடம் பெங்களூரு பீன்யாவில் தொடங்கப்பட்ட இஸ்ரோ செயற்கை கோள் மையத்தில் (ISRO Satellite Centre) செயற்கை கோள்களுக்கான தர உறுதிப்பாட்டு துறையை (Quality Assurance Group) துவங்கி இருக்கிறார்.
- மின்னணு உதிரி பாகங்கள் (Electronic components) விண்வெளியில் பழுது படாமல் செயல்பட வேண்டும். அதற்காக அவைகளை பல தர சோதனைகளுக்கு உட்படுத்தி தரமுள்ள பாகங்களை பிரித்தெடுக்க வேண்டும். இதற்கு ஸ்கிரினிங் என்று பெயர். (Screening Space Quality Electronic Parts). இதற்கான தர வரைமுறைகளை (Standards & Procedures) உருவாக்கி, ஸ்கிரினிங் பணிகளை துவக்கி உள்ளார்.
- விண்வெளி தரமுள்ள மின்னணு இணைப்புகளுக்கான தரவரை



சிவகாமி – சொக்கலிங்கம்



ஆதித்யா சோலையப்பன், ராமசாமி, சத்யா என்ற மீனா, வருண் மெய்யப்பன்

முறைகளை (Standards for Space Quality Soldering) உருவாக்கி, பணியாளர்களை பயிற்றுவித்து, அவர்களது திறமைக்கு சான்றளித்து, பணியை ஆய்வு செய்து விண்கலத்தில் பொருத்த அனுமதி அளிக்கும் முக்கியமான பணியும் இவர் பொறுப்பில் இருந்தது.

- விண்கல பாகங்களை விண்வெளி சுற்றுச்சூழல் சோதனைகளுக்கு (Environmental Testing) உட்படுத்தி அவைகளை விண்கலத்தில் பொருத்த ஒப்புதல் அளிக்கும் முக்கிய பொறுப்பையும் திறம்பட நிர்வகித்துள்ளார்.
- இவர் உருவாக்கிய மேற்குறிப்பிட்ட மூன்று வரைமுறைகளும் இன்றுவரை இஸ்ரோவின் மிக முக்கியமான சந்திரயான், மங்கள்யான் போன்ற அனைத்து விண்கலன்களிலும் உபயோகப்படுத்தப்பட்டு, அவைகளின் வெற்றிக்கு அடித்தளமாக அமைந்து வருகின்றன என்றால் அது மிகையாகாது.
- இந்தியாவின் முதல் செயற்கை கோள் ஆர்யபட்டா, இரண்டாவது செயற்கை கோள் பாஸ்கரா மற்றும் முதல் சோதனை தகவல் தொடர்பு சேயற்கை கோள் ஆப்பிள் (First Experimental Communication Satellite Apple) ஆகிய மூன்று செயற்கை கோள்களில் 1984 வரை 12 ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் கார்ப்பரேட் துறைக்கு மாறியிருக்கிறார்.
- இஸ்ரோவில் கற்றுக்கொண்ட தர உறுதிப்பாடு தொழில் நுட்பத்தை நாட்டின் மற்ற துறைகளில் பரப்புவதற்கு முற்பட்டார். பிலிப்ஸ் இந்தியா, எச்.சி.எல், ஹர்மன் இண்டர்நேஷனல் (JBL Speakers/AKG Accoustics), NIITன் துணை நிறுவனமான இன்ஸ்டிட்யூட் ஆப் குவாலிட்டி போன்ற பெரு நிறுவனங்களில்



பிரியா என்ற மீனாட்சி, லக்ஷ்மி அனன்யா, அக்ஷ்ரா உமையாள், மீனாட்சிசுந்தரம்

**குடும்பம்**

| | |
|---|---|
| பெயர்: | அரு.ச.சுப.அரு. சுப. சொக்கலிங்கம் |
| வயது: | 74 |
| தகுதி: | B E., (Electronics & Communications) from Coimbatore Institute of Technology. |
| ஊர்: | தேவகோட்டை |
| வீடு: | எழுவன்கோட்டையார் வீடு |
| கோயில்: | இலுப்பக்குடி |
| தகப்பனார்: | சுப்ரமணியன் செட்டியார் |
| தாயார்: | லெட்சுமி ஆச்சி |
| மனைவி: | சிவகாமி |
| தகப்பனார்: | சுப்ரமணியன் செட்டியார் |
| தாயார்: | உமையாள் ஆச்சி |
| ஊர்: | தேவகோட்டை |
| வீடு: | கருவூரார் வீடு |
| மகன்: | மீனாட்சிசுந்தரம், MS., மேனேஜிங் டைரக்டர், அலிக்ஸ் பார்ட்னர்ஸ் (மேனேஜ்மென்ட் கன்சல்டண்ட்ஸ்) USA. |
| மருமகள்: | பிரியா என்ற மீனாட்சி, MS., (மைக்ரோபயாலஜி, ஆஸ்திரேலியா). |
| பேத்தி: | லக்ஷ்மி அனன்யா வயது 10 |
| பேத்தி: | அக்ஷ்ரா உமையாள் வயது 6 |
| மகள்: | சத்யா என்ற மீனா B.Sc |
| மருமகன்: | மெ. ராமசாமி, MS., Schlumberger Oil, Houston, USA |
| பேரன்: | ஆதித்யா சோலையப்பன் வயது 18 |
| பேரன்: | வருண் மெய்யப்பன் வயது 14 |

ஜெனரல் மானேஜர், வைஸ்பிரசிடண்ட், சீஃப் கன்ஸல்டெண்ட் ஆகிய உயர் பதவிகளில் பணியாற்றி இருக்கிறார்.

- பின்னர், பழுதுகளை மிகவும் குறைக்க, 10 லட்சம் பொருள்களுள் 3-க்கு மேல் பழுது வராமல் பார்த்து கொள்வதற்கு பயன் படுத்தப்படுகிற புதிய தர மேலாண்மை முறை (Quality Assurance Methodology) ஆகிய சிக்ஸ் சிக்மா (Six Sigma) என்ற துறையில் TAFE Tractors, ESCORTS Tractors, MAX Life Insurance, Reliance Petroleum Marketing, TATA Companies, VOLTAS, Indigo Airlines, American Express, ACC Cements, DCM Sriram, Steel Authority of India (SAIL), Oil India போன்ற பெரு நிறுவனங்களுக்கு தனிப்பட்ட ஆலோசகராக (Independent Consultant) தில்லியில் பணியாற்றி இருக்கிறார்.
- தற்சமயம் ஓய்வு பெற்று சென்னையில் ஏக்காட்டூரிலும் தேவகோட்டையிலுமாக தனது துணைவியாரோடு வசித்து வருகிறார்.
- நமது நாட்டில் உருவாக்கப்படும் பொருள்களின் தரம் உலக அளவுக்கு உயர வேண்டும் என்றால் அனைவருக்கும் தரத்தின் முக்கியத்தைப் பற்றிய உணர்வு இருக்க வேண்டும். இந்த நோக்கத்துடன் அந்த உணர்வை இள வயதிலேயே ஊட்டும் பொருட்டு, தமிழ்நாட்டில் உள்ள பல கல்லூரிகளின் அழைப்பிற்கேற்ப தர மேலாண்மை (Quality Management) குறித்து உரையாற்றி வருகிறார். ♦

# நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 41



## 1400 முதல் 1500 ஆம் ஆண்டு வரை நகரத்தார்கள்: ஒரு பறவைப் பார்வை:



மா.இளங்கோ, குழிபிறை, 9842260955

நமக்கு அருகில் இருக்கும் ஊர்கள், அந்த ஊர்களை நாம் மேலெழுந்தவாரியாக அறிந்திருப்போம். ஆனால், அந்தச் சின்னஞ்சிறு ஊர்களில் இத்தனை சிறப்புகளா என்பதை கூர்ந்து நோக்கும் பொழுது தான் தெரியும். நகரத்தார்களின் வேர்களைத் தேடி நான் சென்ற இடங்கள் எல்லாமே சின்னஞ்சிறு கிராமங்கள் தான். சில இடங்களில் ஆட்களே இருக்க மாட்டார்கள். தனிமைதான் நமக்குத் துணை. தனித்த இடத்தில் நான் மிகச்சிறந்த கல்வெட்டுகளைப் பார்த்திருக்கிறேன். கண்டுபிடித்தும் இருக்கிறேன். அப்பொழுது அந்தத் தனிமை எனக்கு இனிய நினைவுகளைத் தந்தன. காற்றின் ஒலியைக் கேட்க முடியும், அவ்வளவு அமைதி. அந்த அமைதியான இடங்களில் தான் நகரத்தார்களின் ஒப்பற்ற நாகரீகம் தவழ்ந்திருக்கிறது. அதை அந்தக் காலத்திற்கே சென்று நான் உணர்ந்தேன். அந்த உணர்வுகளை முடிந்த வரையில் எழுத்துகளாக அன்பர்களுக்குத் தர முயல்கிறேன். அதன் ஒரு பகுதிதான் இந்த இதழில் 15-ஆம் நூற்றாண்டு வரையிலான காலமாகும். இந்த இதழில் 15-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நகரத்தார்களின் வாழ்க்கை எவ்வாறு அமைந்திருந்தது என்பதைக் காணலாம்.

### நாட்டுக்கோட்டையும் சுந்தரசோழபுரமும் - பதிவுகள் இலம்பலக்குடியில்:

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், இலம்பலக்குடியில் உள்ளது மதவீரவிநாயகர் கோயில். இக்கோயிலில் சுந்தரசோழபுரத்தில் இருந்த நகரத்தார்கள் செய்த அறப்பணிகளும், அவர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன. கலவையூருடையான், மருதாந்திரபுரமுடையான், கூடலூருடையான் மற்றும் மாத்தூருடையான் என அப்பெயர்கள் அமைந்துள்ளன. இந்த நான்கு பெயர்களும் ஊர்ப்பெயர்களை அடிப்படையாகக் கொண்டவை. இந்த நான்கு ஊர்களில் மாத்தூர், கூடலூர் தவிர மற்ற இரு ஊர்களை இன்று அடையாளம் காண முடியவில்லை. கூடலூர், பனையப்பட்டியில் இருந்து கொடும்பாளூர் செல்லும் வழியில் சிறிய கிராமமாக உள்ளது. மாத்தூர் நமது நகரக்கோயில்.

வயிரவன் கோயில் மருதேந்திரமுடையான் பிரிவைச் சேர்ந்தவர்களும், மாத்தூர் கோயிலைச் சேர்ந்தவர்களும் சுந்தரத்தில் வசித்துள்ளனர் என்பதற்கு இக்கல்வெட்டுகள் சான்றுகளாக உள்ளன. வயிரவன் கோயில் உட்பிரிவுகளில் ஒன்று 'மருதேந்திரபுரமுடையார்'ஆகும். அப்பெயர் இக்கல்வெட்டுகளில் மருதாந்திரபுரமுடையான் எனக் குறிப்பிடப்படுகிறது.

அந்த வரிகளை மட்டும் பார்க்கலாம்.

கல்வெட்டு எண் 97 இ - சுந்தரசோழபுரத்து மருதாந்திர புரமுடையான் வம்பலத்தாடுவார் வணித்திபாகர் தன்மம்.

க.எண் 97 ஒ - இப்பாக்கல்லு சுந்தர சோழபுரத்து மருதாந்திர புரமுடையான் தன்மம்.

க.எண். 97 எ மற்றும் 97 ஏ - 'இப்பாக்கல்லு சுந்தர சோழபுத்து மாத்தூருடையான் குருநாதர் ஆவுடையார் தன்மம்'

(இராசேந்திரன். கரு., புதுக்கோட்டை வட்டாரக் கல்வெட்டுகள், பக்.105, கல்.எண்.97, பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம், மதுரை, 2017) தர்மம் என்ற சொல் கல்வெட்டில் தன்மம் எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

### சுந்தரசோழபுரத்து நகரத்தார்கள் - பதிவுகள்:

செவலூர் பூமீசுவரர் கோயிலில் பழமை மிகுந்த செவலூர் பூமீசுவரர் கோயில் சுந்தரசோழபுரத்து நகரத்தார்களின் திருப்பணிகளால் மீண்டும் பொலிவு பெற்றதை அறிய முடிகிறது. இளையாத்தங்குடி நகரத்தார்களின் திருப்பணிகளும் நடந்திருக்கின்றன. 15-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சுமார் 12 கல்வெட்டுகள் கல்வெட்டுக் கலைஞர் கரு.இராசேந்திரன் அவர்களால் படி எடுக்கப்பட்டது.

இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் பெயர்களும் ஊர்களும் கீழே தரப்பட்டுள்ளன.மருதாந்தபுரமுடையான், கண்ணனூருடையான், பெருமங்கலமுடையான், மாத்தூர், கலசமங்கலமுடையான், கூடலு(ரு)டையான் ஆகியன. இக்கோயிலில் உள்ள 12 தூண்களையும் செய்து கொடுத்தவர்கள் பெயர்கள் இந்தத் தூண்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இப்பெயர்களில் கண்ணனூர், இராங்கியத்திற்கு அருகில் உள்ளது. இவ்வூர் நகரத்தார்களின் ஆதி வாழ்விடமே.

மருதாந்திரபுரமுடையான் மற்றும் மாத்தூர் இவை இரண்டும் நகரக்கோயில்களின் உட்பிரிவுகள் ஆகும். செவலூர் நகரத்தார்களின் ஆதி வாழ்விடம் என்பதற்கு இக்கல்வெட்டுகள் சான்றுகளாக உள்ளன.

### வணிகக் குழுக்களின் பெயர் மங்கிய 100 ஆண்டுகள் (1400 முதல் 1500 வரை):

கி.பி.1400 முதல் 1500 வரையிலுள்ள காலம் நகரத்தார்களின் வரலாற்றில் முக்கியமான காலமாக

இருக்கலாம் எனக் கருதுகிறேன். இந்த நூற்றாண்டில் ஐநூற்றுவர் என்ற பெயர் பொறித்த கல்வெட்டுகள் அதிகம் காணப்படவில்லை. ஆனால், பதினெண்விசயத்தார் தொடர்பான வரி விதிப்புத் தொடர்பான கல்வெட்டு ஒன்றை மட்டுமே காண முடிகிறது. நூற்றாண்டின் தொடக்கத்தில் வெட்டப்பட்ட கல்வெட்டாக இது இருக்க வேண்டும். ஆட்சியில் இருந்த மன்னர்கள் ஆட்சியாண்டு போன்ற குறிப்புகள் இல்லாமலேயே இந்த நூற்றாண்டின் கல்வெட்டுகள் உள்ளன. மன்னர்கள் வலிமை நிறைந்தவர்களாகவும், பரந்துபட்ட நிலப்பரப்பை ஆட்சி செய்யாதவர்களாகவும் இருந்திருக்க வேண்டும்.

வலுவான வணிகக் குழுக்கள் மறைந்து விட்டன. சோழ, பாண்டிய அரசுகள் மறைந்து போனதும் காரணமாக இருக்கலாம். உறுதியான தலைமை இல்லாத நிலையில் தமிழகம் இருந்தது. அரசியல் சூழ்நிலை எப்படி இருந்த போதிலும் கால வெள்ளத்தில் நகரத்தார்கள் கரைந்து போய்விடவில்லை. சுழலில் சிக்கவில்லை மீண்டெழுந்தார்கள் என்பதையே பிற்கால வரலாறுகள் நமக்கு உணர்த்துகின்றன.

கி.பி.1300-ல் இருந்து 1500 வரையிலான காலம், மாற்றங்களுக்குக் குறைவில்லாத காலமாக நாம் பார்க்க முடிகிறது. தமிழகத்தில் இசுலாமிய வணிகர்கள் இருந்தனர் என்றாலும் அவர்கள் இங்குள்ள மக்களோடு இணக்கமாகத்தான் இருந்திருக்கின்றனர். ஆனால் இந்நாட்டைக் கொள்ளையிட வேண்டும் என்றும், ஆளுமை செலுத்த வேண்டும் என்றும் வந்தவர்கள் டெல்லியை ஆண்ட சுல்தான்கள். அவர்களின் படைத் தலைவனான மாலிக்காபூர் 1311-ல் தமிழகம் வந்தான். அவனால் சீரழிவுகள் நிகழ்ந்தன. அவனால் பாதிக்கப்பட்ட முக்கியமான பகுதிகளாக மதுரையும் செட்டிநாடும் உள்ளன. மதுரை இசுலாமியர் ஆட்சியையும் நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம்.

மாலிக்காபூரின் படையெடுப்பு தமிழகத்தைப் புரட்டிப் போட்டு விட்டது. எனவே, அதன் பின்னணியிலேயே நகரத்தார் வரலாற்றினை இந்தக் குறிப்பிட்டக் காலப் பகுதியை நாம் அணுக வேண்டும்.

- இந்த நூற்றாண்டிற்குரிய கல்வெட்டுகளின் எண்ணிக்கைகள் குறைவாகவே உள்ளன. 18 கல்வெட்டுகள் மட்டுமே தரப்பட்டுள்ளன. எனினும் நகரத்தார்களின் வாழ்வு எவ்விதமாக இருந்திருக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. சில கேள்விகளும் எழத்தான் செய்கின்றன .
- அருவியூர் நகரத்தார்கள், சுந்தரசோழபுரத்து நகரத்தார்கள் ஆகியோருடன் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுடன் ஆன உறவுகள் எப்படி இருந்தன? ஒரே பகுதியில் தான் வாழ்ந்திருக்கின்றனர். அப்படியானால் இச்சமூகங்கள் பிரிவுகளைச் சந்தித்தது எப்போது?
- சுந்தரசோழபுரம், செவலூர், மலையடிப்பட்டி, மேலப்பனையூர், குலமங்களம் உள்ளிட்ட பல ஊர்களில் இருந்து வணிகச் சமூகத்தினர் வெளியேறி விட்டனர். அனைவருமே இடமாற்றம் செய்ததற்கு அடிப்படியான வலுவான காரணம் இருக்க வேண்டும். அது எது?
- இச்சமூகங்களிடையே கொள்வினை கொடுப்பினை போன்ற மண உறவுகள் இருந்தனவா?
- ஒன்றாக ஒரே ஊரில் வாழ்ந்தவர்கள், இடப்பெயர்வுக்குப் பிறகு தனிச் சமூகமாக பிரிந்து விட்டார்களா?
- 1213-ல் சுந்தர சோழபுரத்தில் நகரத்தார்களின் இருப்பு குறித்த கல்வெட்டு உள்ளது. 1697-ஆம் ஆண்டிற்குப் பிறகு கல்வெட்டுகள் இல்லை.
- கி.பி. 1050-ல் மேலப்பனையூர் கோயிலில் நகரத்தார் தொடர்பான செய்திகள் கிடைக்கின்றன. 1500-ம் ஆண்டிற்குப் பின்னர் பதிவுகள் இல்லை.
- செவலூரில் 1210-ல் – நகரத்தார் குறிப்புகள் கொண்ட முதல் கல்வெட்டு. 1500-க்குப் பின் நகரத்தார் குறிப்புகள் இல்லை.
- நார்த்தாமலையில் நகரத்தார் உள்ளிட்ட வணிகச் சமூகத்தினரின் பதிவுகள் 1450-க்குப்பின் கிடைக்கவில்லை. நார்த்தாமலையை விட்டு வெளியேறியிருக்க வேண்டும் என ஊகிக்க வேண்டியிருக்கிறது. ஆக இடமாற்றம் நிகழ்ந்தது 1500-ஆம் ஆண்டளவில் என்பதை அறிகிறோம். ஆனால் காரணத்தை அறுதியிட்டுக் கூறமுடியவில்லை.
- செட்டிநாட்டுப் பகுதியில் 1400 முதல் 1500 வரையிலான காலம் சிறப்பானதாக இருக்கவில்லை. அதன் தொடர்ச்சியாக, 1500 முதல் 1700 வரையிலான இருநூறு ஆண்டுகள் வரலாற்றில் நகரத்தார்கள் தொடர்பான கல்வெட்டுகள் மிகச் சிலவாகவே உள்ளன. இக்காலப் பகுதியையும் பின்னர் ஆய்வு செய்ய இருக்கிறோம்.
- 1400 -1500 – இந்தக் காலப் பகுதியில் நகரத்தார்களின் வாழ்க்கை முறை எவ்வாறிருந்தது என்பதை நுணுக்கமாக ஆய்வு செய்ய இயலவில்லை. ஓரளவே முடிகிறது.
- நகரத்தார்களின் உள்நாட்டு வணிகம், வெளிநாட்டு வணிகம் எவ்வாறு நடந்தது என்பதற்கான குறிப்பு ஒன்றிரண்டு மட்டுமே உள்ளது. வணிகம் தொடர்பான விரிவான கல்வெட்டுகள் இல்லை.

உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்
**செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்**
எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (கரிவடகம்), பிரண்ட (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல், கேரட் வத்தல், பீட்ரூட் வத்தல், தக்காளி வத்தல், கறிவேப்பிலை வத்தல் ஆகிய சுவைமிகு வத்தல்களும், எல்லா வகை பொடி வகைகளும், வேங்கரிசி மாவு, உப்புக்கண்டம், மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.
தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி
8508392087 / 8778527165 / 8760742590
ADVT

- 14-ஆம் நூற்றாண்டின் முடிவிலும் 1500-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்திலும் உள்ள காலப்பகுதியில் தான் வணிகக் குழுக்கள் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. அதன்பின் உள்ள காலத்தில்தான் இன்றைய நகரத்தார்கள் 'இளையாத்தங்குடி நகரத்தார்கள்' என ஊர்ப்பெயர் அடிப்படையில் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.
- இசுலாமியர் படையெடுப்பால் அழிந்த காளையார் கோயில் 133 ஆண்டுகளுக்குப் பின்னர் 1511-ல் தான் எடுத்துக் கட்டப்பட்டது. அப்பணியைச் செய்தவர்கள் நகரத்தார்கள். இச்செய்தியையும் பின்னர் விரிவாகப் பார்க்க இருக்கிறோம்.
- வணிகக் குழுக்களின் பெயர்கள் ஏறத்தாழ மறைந்து விட்டன. ஆனால் வேறு பெயர்களில் அதாவது ஊர்ப் பெயர்களின் அடிப்படையில் சமூகங்களின் பெயர்கள், மாற்றம் பெறுகின்றன. தொடர்ந்து வசித்து வந்த ஊர்களை விட்டு வெளியேறுகின்றனர். புதிய ஊர்களை அடைகின்றனர் என்றால், அவர்களின் வாழ்க்கை ஒரு போராட்டமாகத்தான் இருந்திருக்கும். புதிய ஊர்களில் வாழ்க்கையைத் தொடங்கியவர்கள் இன்றும் அதே ஊர்களில் தொடர்கின்றனர். இது வெற்றிதானே? இந்த நூற்றாண்டு நகரத்தார்களுக்கு தடுமாற்றத்திலும் எழுச்சியைத் தந்தது எனச் சொல்லலாம்.
- நகரத்தார்களின் வரலாற்றுச் சான்றுகளை தேடும் பொழுது குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே முதன்மைச் சான்றுகள் எனப்படும் கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன. செட்டிநாட்டின் மற்ற பகுதிகளில் கிடைக்கவில்லை.

செட்டிநாட்டில் உள்ள ஊர்கள் அனைத்தும் மிகப் பழமையான ஊர்களே. இருந்த போதிலும் சான்றுகள் இல்லாத நிலையே உள்ளது. சான்றுகளைப் பாதுகாக்கத் தவறியதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

(வரலாறு வளரும்)

# மாரத்தான் 100




செட்டிநாடு பில்டர்ஸ் சென்னையில் பணியாற்றும் லிங்கேஸ்வரன் 2013 ஆண்டுசென்னைமாரத்தான் போட்டியில் முதல் முதலாக கலந்து கொண்டு, தொடர்ந்து சென்னை, ஹைதராபாத், பெங்களூர், மும்பை மற்றும் டெல்லி ஆகிய நகரங்களில் நடைபெற்ற மாரத்தான் போட்டிகளில் பங்கேற்ற இவர் 2017 இல் கோவையில் நடைபெற்ற 21.1 கி.மீ தூர மாரத்தானை 1.52.04 மணி நேரத்தில் முடித்துள்ளார். இவரின் நூறாவது மாரத்தான் போட்டி 19-10-2024 அன்று டெல்லியில் நடைபெற்ற வேதாந்தா டெல்லி ஆப் மாரத்தான் போட்டியாகும். இவர் இதுவரை 10 கி.மீ-24லும், 16 கி.மீ-2ம், 21.1 கி.மீ-64ம், 25 கி.மீ-1 ம், 32.2 கி.மீ-1 ம், 42.195 கி.மீ-8ம் என மொத்தம் 100 போட்டிகளில் கலந்து கொண்டு சதம் அடித்துள்ள லிங்கேஸ்வரன் ஊட்டியில் பிறந்து வளர்ந்தவர். கல்லூரி காலத்தில் கால்பந்து விளையாட்டு வீரராகத் திகழ்ந்தவர். மாரத்தான் வீரராக மேலும் சாதனைகள் புரிய நமது செட்டிநாடு சார்பாக வாழ்த்துகிறோம்.



Dr.மணிஸ் பல் மருத்துவமனை

No: 315/24 MAM பில்டிங் பூரணி மருத்துவமனை எதிரில்
(மீனாட்சி பேன் ஹவுஸ் காம்ப்ளக்ஸ் மாடி)
செக்காலை ரோடு - காரைக்குடி
வார நாட்கள் காலை 9.30 முதல் 1.30 வரை
மாலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு-முன்-பதிவு-செய்தவர்களுக்கு-மட்டும்

இலவச பல் பரிசோதனை செய்யப்படும்

பல் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற Dr.மணிஸ் பல் மருத்தவமனைக்கு வருகை தாருங்கள்.

பல் பாதுகாப்பிற்கு காலை மற்றும் இரவு இருவேளையும் பல் துலக்குங்கள்

Dr.S.மணிகண்டன், BDS., MBA(HM)
9551624126 / 7904079923

# அரவிந்த் சிதம்பரம் சூப்பர் கிராண்ட் மாஸ்டர் - 2024 பட்டம் வென்றார்




சென்னையில் நடைபெற்ற சூப்பர் கிராண்ட் மாஸ்டர் 2024 சதுரங்க விளையாட்டுப் போட்டியில் காரைக்குடியைச் சேர்ந்த அரவிந்த் சிதம்பரம் தன்னை எதிர்கொண்ட பர்ஹாம் மக்சூட்லூ மற்றும் லெவோன் அரோனியன் ஆகியோரை வென்று, சூப்பர் கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை மாண்புமிகு தமிழக துணை முதல்வர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களிடமிருந்து பெறுகிறார். உடன் சர்வதேச சதுரங்க விளையாட்டு வீரர் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா இ.ஆ.ப., உள்ளிட்டோர் உள்ளனர். அரவிந்தின் அற்புதமான ஆட்டம் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது. அரவிந்த் சிதம்பரம் சதுரங்க விளையாட்டில் மென் மேலும் பல விருதுகள் பெற நமது செட்டிநாடு வாழ்த்துகிறது.

# நூல் வெளியீடு



திருச்சி இந்திய மேலாண்மை நிறுவன (IIM, Trichy) வளாகத்தில் அதன் இயக்குநர் முனைவர் பவன்குமார் சிங், திரு. சோம.வீரப்பன் அவர்கள் திருக்குறளில் மேலாண்மைக் கருத்துகள் குறித்து எழுதிய ‘யெஸ் பாஸ்’ எனும் ஆங்கில நூலின் இந்தி மொழி பெயர்ப்பு நூலை 12-11-2024 அன்று வெளியிட்டார். புகழ்பெற்ற இந்தி எழுத்தாளர் முனைவர் திலிப் திங் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். விழாவில் நூலாசிரியர் சோம வீரப்பன் மற்றும் இந்தி மொழிபெயர்ப்பாளர் ரோஹித் சர்மா ஆகியோர் பாராட்டப்பட்டனர். திருக்குறளில் பண்டைய காலத்து அரசர்களுக்கும் அமைச்சர்களுக்கும் சொல்லப்பட்டவை தற்கால நிறுவன முதன்மை அதிகாரிகளுக்கும் மேலாளர்களுக்கும் சாலப் பொருந்தும் என்று நூலாசிரியர் சோம. வீரப்பன் தனது உரையில் குறிப்பிட்டார். இந்தி பேசும் மக்களிடையே வள்ளுவத்தில் உள்ள மேலாண்மை கருத்துக்களை இந்நூல் கொண்டு செல்லும் என்று மொழிபெயர்ப்பாளர் சர்மா தனது உரையில் குறிப்பிட்டார். விழாவில் பஞ்சாப் நேஷனல் வங்கியின் கோட்ட மேலாளர், மற்ற கல்வி நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், தொழிலதிபர்கள், திருச்சி நகரத்தார் சங்க மற்றும் மகளிர் சங்க உறுப்பினர்கள், பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த இந்தி அதிகாரிகள், இந்திய மேலாண்மை நிறுவன பேராசிரியர்கள் மற்றும் மேலாண்மையியல் பயிலும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# இராம காவியம்



தேவகோட்டை அரு.லெட்சுமணன்
(அலெக்ஸ்)

## மாய மான் - (7)

அரக்கனாய் இருந்தவன் மனம் மாறி
இறைவனை நினைத்தே தவமிருந்த
மாமன் மாரிசன் உதவி நாடி
மைத்துனன் ராவணன் வந்து நின்றான்
தங்கை சொல்லால் மதி இழந்து
காணாத சீதை மேல் காமமுற்று
அவளை அடையவே வழி தேடி
அவனின் குடில் முன் அமர்ந்திருந்தான்
மன்னனை வணங்கி மாரிசன் சொன்னான்
ராமன் வீரம் நான் அறிவேன்
நல்லவன் அவனை நீ அறியாய்
தாடகை வதைத்த தருணம் தன்னில்
அவனின் அம்பால் எறிய ப்பட்டேன்
என்னை வதைக்காது விட்ட கதை
ஏனோ இன்னும் புரியவில்லை
நானோ தவமுனி தவறு செய்யேன்
தங்கை செய்ததை நீ அறிவாய்
தண்டனை பெற்றது சரி என்றான்
வீணாய் இதனை நினைக்காது
விதியே என்று மறந்து விடு
அரக்க இனத்தை வாழ விடு
அதுவே உமக்கு உகந்த தென்றான்
கோபம் கொண்டு வெகுண்ட ராவணன்
சொன்னதை செய்வது உன் கடமை
செய்யாது இருப்பின் செயல் இழப்பாய்
எந்தன் கையால் உயிர் இழப்பாய்
என்ற உண்மையை புரிய சொன்னான்.

இலங்கை வேந்தே இன்னலை நாடினீர்
உங்கள் இச்சையை உளமாற செய்வேன்
ராமன்அருளால்முக்தியும் பெருவேன்!
என்றவன் பொன் மானாய் உருவெடுத்து
பெண் மான் முன்னே ஒளிவீசி.
சீதையை கவர புறப்பட்டான்
காடும் மேடும் நடந்தனர் கடந்தனர்
அண்ணன் அண்ணியை காப்பதே தவமாய்
கண்ணின் மணியாய் காத்தான் கடமையாய்.
யாரை காப்பது யாரென்று அவர்க்கே
தெரிந்த ஒன்றாய் சீதை அயர்ந்தாள்
பொன்மான் ஒன்று புதரிடை துள்ள
மின்னும் வைரமாய் கண்ணில் தெரிய
அடையவே நினைத்தால் ஆசைப் பட்டாள்
இராமன் பற்றித் தரவே கேட்டாள்
இராமன் எழுந்தான் மானை தொடர்ந்தான்
மனது தடுமாற தடுத்தான் இலக்குவன்
பொன் மான் தனைத் தேடி
புறப்பட்டான் ராமன் சீதையை நினைத்தே
சூது இருப்பதை உணர்ந்து கொண்டான்.
இங்கும் அங்குமாய் இளவல் நடந்தான்
படபடக்கும் மனதில் பயம் கொண்டான்.
ராமன் அம்பு காலை தாக்க
தந்திரம் செய்தான் தன்னை காக்க
சீதே! இலக்குவா! குரல் கெடுத்தான்
குரல் கேட்டு இளவல் சிலையாக
மிரண்டு சீதை இலக்குவனை
போகச்சொன்னாள்
இராமரை காக்க ஓடச் சொன்னாள்
மாயமான் செய்யும் வேலை இது
மாதவன் வீரம் நாம் அறிந்ததே
உம்மை தனியேவிடல் சரியில்லை
உண்மை அறிவாய் தாயே என்றான்
சீதை தீயாய் நாவில் சுட்டாள்
காட்டுத் தீயில் நான் குதிப்பேன்
கடவுளை வேண்டி உயிர் துறப்பேன்
இருப்பது போவது உன் முடிவு
எதுவோ செய் என்றாள் சீதை
விதியின் விதியை உணர்ந்தான் இலக்குவன்.
அண்ணன் சொன்னது புரிய வர
அனைத்தும் அறிந்தேபுறப்பட்டான்.

## சீதையை கவர்ந்து எடுத்தல் - (8)


மானைத் தொடர்ந்து ராமன் செல்ல
ராமனைத் தொடர்ந்து இளவல் செல்ல
ராவணன் சூழ்ச்சி பலித்த தனால்
சீதை தனியே இருக்கக் கண்டான்
சிறு புத்தி ஓங்கி விட்டால்
சிந்தனை புரண்டு போகும்
உருமாறும் தன்மை கொண்ட தனால்
அந்தணனாய் மாறி குடில் சென்றான்
தேவியை தொட்டால் தலை தெறிக்கும்
சாபம் இருப்பதை அவன் அறிந்தான்
எண்ணமும் கண்களும் இலங்கையை நோக்க
உள்மனம் அன்னையை எண்ணியே உருக
கிட்டே போக முடியாமல் இலக்குவன்
மண்ணில் இட்ட ரேகை தடுத்த தனால்
கெட்டி தயிரை அகப் பையிலே
வெட்டி அழகாய் எடுப்பது போல்
பூமியோடு பெயர்த்தெடுத்து
புறப்பட்டான் ராவணன்
விமானம் குனிந்து இருக்கையை விரிக்க
அன்னையை வைத்தான் அவன் பறந்தான்
அன்னை போராடி பயனும் இல்லை
எனினும் செல்லும் வழி யதனை
மன்னவன் அறிய எண்ணம் கொண்டு
தன்னிடம் இருந்த நகைகள் தன்னை
போகும் வழியில் போட்டு சென்றாள்
முனி பத்தினி இதற்கென்றே
மூட்டை நகையை கொடுத்தாளோ.
பொன் பொருள்கள் மட்டுமா
பூமியில் விழுந்தன
பொடி பொடியா அவள் மனமும்
பூமி தனில் விழுந்து கலந்தன
என்ன செய்வாள்
இளவல் சொன்னதை ஏற்கவில்லை
பொன் மானை பார்த்து மயங்கியதால்
அனுபவிக்க தானே வேண்டும்
அன்னையும் தவறு செய்தாள்
அதுவே விதி யென்றும் ஆகும்.

(தொடரும்)



# உடல் தானம்

ஸ்ரீரங்கம் லயன் சுப. சிதம்பரம் (கானாடுகாத்தான்) அவர்கள் மனைவி திருமதி சி.சாந்தி அவர்கள் உடல்தானம் செய்ய விரும்பி பதிவு செய்ததுடன், உடல்தானம் செய்ய விரும்புவர்களுக்கு “அரசு உரிய அங்கீகாரம் தர வேண்டும்” என்று வற்புறுத்திவந்தார், அது இப்பொழுது நடைமுறைக்கு வந்துள்ளது. தற்செயலாக சில நாட்கள் முன் மறைந்த திருமதி சி.சாந்தி அவர்களின் உடலை திருச்சி அரசு மருத்துவ கல்லூரி உயர் அதிகாரிகள் பெற்றுக்கொண்டு பாராட்டி சான்றிதழ் வழங்கியுள்ளார்கள். தகவல் : சுப.சிதம்பரம், ஸ்ரீரங்கம்.


Chettinad
Academy
of Research and Education
(Deemed to be University)
Chettinad Premium
Ayurveda Wellness Clinic
Forget the anxiety of
tablets & injection,
Heal your body
& soul - the
natural way
Book your
slots now!
98417 36000 | 95512 97000
044 474 11000



# குறள் பாட்டு

குழந்தைக் கவிஞர் செல்ல கணபதி

அதிகாரம் – 37 (அவா அறுத்தல்)

366) அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா.
ஒருவன் தளர்ந்தால் அவனை வீழ்த்த
உள்ளம் நினைப்பது அவாவால் வருவது
மருகி அவாவை மனதில் வீழ்த்தினால்
வளரும் ஆசைகள் மனம்விட்டு அகலும்
அவாவிற்கு அஞ்சி ஒதுங்கி விலகும்
ஆண்மையைப் பெறுவதே அறம்எனச் சொல்லலாம்
அவாவை அழித்தால் யாரையும் வீழ்த்தும்
ஆசை வராது அறங்கள் பெருகும்.

370) ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.
ஒருபோதும் அடைந்தறியா அவாவைக் கைவிட்டால்
உடனேயே அவாஇன்மை பேரின்ப வாழ்வுதரும்
ஒருபோதும் வந்தடையா ஆசைகளைத் துறந்திடுவோம்
உள்ளத்தில் பேரமைதி பெருகிவரும் அக்கணமே
இயல்பாகப் பேரமைதி இருக்குமனம் யாருக்கு
எள்ளளவும் பேராசை கொள்ளாத மனிதர்க்கு
மயக்கமில்லா தெளிவுபெற வழியென்ன என்பீரேல்
மனம்தேடும் ஆசைகளை வளராமல் தடுப்பதுதான்.

அதிகாரம் – 38 (ஊழ்)

371) ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்று மடி.
ஆவதற்கு உரிய விதிவரு மாயின்
ஆகும் எதுவும் அவனவன் முயற்சியால்
போவதற்கு உரிய விதிவரும் மாயின்
பொல்லாச் சோம்பல் நமைவந்து சூழும்.
சோம்பல் மிகுந்தால் தோல்வியே மிஞ்சும்
சோம்பல் யார்க்கும் போங்கா லத்தால்
சோம்பலை வீழ்த்தி முயற்சி வெல்வது
சுடர்மணி விளக்காய் வரும்கா லத்தால்.

372) பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை.
இழக்கதற் கான விதியே ஒருவனை
ஏதிலாப் பேதையாய் துணுக்குறச் செய்யும்
வளர்வதற் கான விதியே ஒருவனை
வாய்க்கும் அறிவினால் பலன்பெறச் செய்யும்.
அறிவில் சிறந்தவன் பேதை ஆகலாம்
யாரையும் ஊழ்தான் அப்படி மாற்றும்
அறிவற் றவனும் அறிஞன் ஆகலாம்
அதுவும் ஊழின் வலிமையால் அறிக.

# திருமந்திரச் சுவை – 41

## கல்வி



பூங்குன்றம் இராமசாமி

எது கல்வி?

அனைவருமே கற்கின்றோம்! இன்று கல்லாதவர் யாருமிலர்!

இருப்பினும், நாம் அனைவரும் 'பணம் வரும் வழி தேடியே' கற்கின்றோம்!

ஆகப் பணத்தைக் கொட்டி, அதனையே முதலாக்கிப் படித்து, அக் கல்வியையே தொழிலாக்கி விடுகின்றோம்!

இவ்வாறு கல்வி என்பதே ஒரு வணிகமாகிப் போனது இன்று... !

இது கல்வி அல்ல.. !

ஆதலால், 'எது கல்வி?' என்று இன்று புகட்ட வேண்டியுள்ளது.. !

கற்க வேண்டியவற்றைக் கற்க வேண்டும். அவை, 'ஞான நூல்கள், இறையை அடைவிக்கும் நுணுக்கமான வழிகள், நற்குருவைச் சேரல், அகப்பயிற்சி, இவை சார்ந்த அனுபவக் கல்வி'. இவையே கல்வி.

இக் கல்வியைப் பெறுவதே அரிய ஒன்று! இதுவே நாம் பெற்ற பேறு!

ஆக, 'உயிரை, உலகை, இறையை உள்ளபடி உணர்த்துகிற கல்வியே கல்வி.

இதையே திருமூலர் சொல்கிறார். அவர் வாக்காக இதனைக் காணலாம்.

துணையது வாய்வரும் தூயநற் சோதி
துணையது வாய்வரும் தூயநற் சொல்லாம்
துணையது வாய்வரும் தூயநற் கந்தம்
துணையது வாய்வரும் தூயநற் கல்வியே (10.294)

'தூய ஒளிவடிவாகிய இறையே' நம் துணையாய் வருவான். அவனது தூய சொல்லாகிய 'திருவைந்தெழுத்தே' நமக்குத் துணையென நிற்கும். அந்நேரம், அது மலரோடு நறுமணம் போன்ற துணையாகும். அந்தச் சிவஞானமாகிய தூய நற் கல்வியே நம் உயிர்த் துணையாய் வரும்.

ஆக, நம் கல்வி ஒன்றே நமக்கு என்றும் துணை நிற்கும்.

மேலும்,

கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே (10.1421)

கற்கத் தக்கன கற்க வேண்டும். பின், பதினாறு கலைகள் பொருந்திய உண்மைச் சிவயோகம் முதலான பதஞானங்களை முறையாக அடைய வேண்டும். அவ்விதம், மலவாதனை (ஆணவம்) அற்று, மேலான பரம்பொருளைக் கண்டு, நித்தியராக விளங்க வேண்டும். அவரே சைவசித்தாந்தர் ஆவார்.

ஆகச் சாத்திரத்தோடு அனுபவ ஞானம் பெற்று, ஆண்டவன் உடைமை ஆகி, ஆன்மபோதம் (ஆணவம்) அழிந்து, சிவஞானம் மிக்கோரே சைவசித்தாந்தர் ஆவார்.

எனவே, சித்தாந்தக் கல்வியே கல்வி. அதுதான் நமக்கு வழித்துணையாய் வரும். எதைக் கற்பினும் தெளிவைத் தருவது சிவஞானமே! ★

27 கிளைகள், 36 வருட அனுபவம்



சுற்றுலாவா யோசிக்கவே வேண்டாம்

## ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி

Incredible India

RECOGNIZED GOVT. OF INDIA TOURISM

98421 62416
97918 48265
98424 47305
98421 62265



H.O. 10, வடக்கு ஆவணி மூல வீதி. மதுரை-1

## SPECIAL TOURS 2024

www.srimurugantravel.com

| நாள் | சுற்றுலா | புறப்பாடு | கட்டணம் |
|---|---|---|---|
| 10 நாள் | ஆக்ரா-காசி அயோத்தியா | மாதந்தோறும் 9,21 | Rs. 13500/- |
| 13 நாள் | டெல்லி-ஆக்ரா அயோத்தியா | மாதந்தோறும் 6,18,27 | Rs. 17500/- |
| 6 நாள் | ஸ்ரீரடி பண்டரிபுரம் | மாதந்தோறும் 1,8,15,22 | Rs. 8000/- |
| 10 நாள் | குஜராத்-துவாரகா பட்டேல்சிலை | மாதந்தோறும் 17 | Rs. 17000/- |
| 17 நாள் | பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி | மாதந்தோறும் 10,20 மே முதல் | Rs. 30000/- |
| 13 நாள் | பத்ரிநாத் கேதார்நாத் | மாதந்தோறும் 10,20 மே முதல் | Rs. 25000/- |
| 14 நாள் | முக்திநாத்-நேபாள் கொல்கத்தா | மாதந்தோறும் 18 | Rs. 27000/- |
| 15 நாள் | நவஜோதிர்லிங்கம் | மாதந்தோறும் 18 | Rs. 20000/- |
| 10 நாள் | சிம்லா-மணாலி ஆக்ரா | ஏப் 1,8,15,22,29 மே. 1,8,20,27 | Rs. 18000/- |
| 13 நாள் | அமர்நாத் | ஜுலை முதல் | Rs. 16000/- |
| 2 நாள் | மும்பை-ஸ்ரீரடி | தினந்தோறும் | Rs. 14990/- |
| 4 நாள் | கோவா SPL | | Rs. 24990/- |
| 4 நாள் | டெல்லி-ஆக்ரா ஜெய்ப்பூர் | வாரந்தோறும் வியாழன் | Rs. 26990/- |
| 5 நாள் | அந்தமான் ஹேவலோக் | தினந்தோறும் | Rs. 29990/- |
| 5 நாள் | காஷ்மீர் குல்மார்க் | வாரந்தோறும் புதன் | Rs. 44990/- |
| 5 நாள் | டார்ஜலிங் கேங்டாக் | வாரந்தோறும் புதன் | Rs. 39990/- |
| 7 நாள் | NORTH EAST | வாரந்தோறும் திங்கள் | Rs. 44990/- |
| 3 நாள் | பூரி புவனேஸ்வர் | வாரந்தோறும் வெள்ளி | Rs. 24990/- |
| 7 நாள் | குஜராத் துவாரகா | வாரந்தோறும் செவ்வாய் | Rs. 35990/- |
| 6 நாள் | காசி அயோத்தியா | | Rs. 34990/- |
| 8 நாள் | பத்ரி-கேதார் | வாரந்தோறும் ஞாயிறு | Rs. 44990/- |
| 12 நாள் | பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி | வாரந்தோறும் திங்கள் | Rs. 54990/- |
| 6 நாள் | முக்திநாத் நேபாள் | ஏப்ரல் 1,18 மே 1,10,18 | Rs. 29990/- |
| 6 நாள் | பூடான் SPL | வாரந்தோறும் செவ்வாய் | Rs. 44990/- |
| 8 நாள் | காஷ்மீர் லே-லடாக் | வாரந்தோறும் ஞாயிறு | Rs. 64990/- |
| 5 நாள் | சிம்லா-குளு மணாலி | வாரந்தோறும் புதன் | Rs. 27990/- |
| 5 நாள் | லே-லடாக் | வாரந்தோறும் | Rs. 54990/- |
| 6 நாள் | நைனிட்டால் முசௌரி-கார்பெட் | வாரந்தோறும் புதன் | Rs. 34990/- |
| 6 நாள் | சிங்கப்பூர் மலேசியா | | Rs. 84,990/- |
| 5 நாள் | சிங்கப்பூர் மலேசியா | | Rs. 74,990/- |
| 10 நாள் | சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து | | Rs. 1,34,990/- |
| 8 நாள் | சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து | | Rs. 94,990/- |
| 5 நாள் | பாங்காக் பட்டாயா Standard | | Rs. 52,000/- |
| 4 நாள் | பாங்காக் பட்டாயா Basic | | Rs. 37,990/- |
| 5 நாள் | புக்கட் கராபி | | Rs. 64,990/- |
| 8 நாள் | Exclusive தாய்லாந்து | | Rs. 94,990/- |
| 4 நாள் | மாலத்தீவு Special | | Rs. 59,990/- |
| 5 நாள் | ஸ்ரீலங்கா Special | | Rs. 44,990/- |
| 8 நாள் | Exclusive ஸ்ரீலங்கா | | Rs. 64,990/- |
| 5 நாள் | இந்தோனேசியா பாலி | | Rs. 64,990/- |
| 6 நாள் | வியட்நாம் கம்போடியோ கலாங் விரிகுடா | | Rs. 94,990/- |
| 7 நாள் | Exclusive சீனா | | Rs. 1,54,000/- |
| 10 நாள் | ஹாங்காங் மக்காவ் | | Rs. 1,34,990/- |
| 6 நாள் | ரஷ்யா Special | | Rs. 1,34,990/- |
| 4 நாள் | எகிப்து Special | | Rs. 1,29,990/- |
| 8 நாள் | எகிப்து Cruise | | Rs. 1,65,990/- |
| 5 நாள் | துபாய் அபுதாபி | | Rs. 74,990/- |
| 7 நாள் | சௌத்கொரியா | | Rs. 1,69,990/- |
| 7 நாள் | கென்யா | | Rs. 1,59,990/- |
| 9 நாள் | ஆஸ்திரேலியா | | Rs. 2,94,990/- |
| 11 நாள் | ஆஸ்திரேலியா நியூசிலாந்து | | Rs. 5,29,990/- |
| 9 நாள் | ஜப்பான் | | Rs. 2,94,990/- |
| 12 நாள் | ஈரோப் Special | | Rs. 2,74,990/- |
| 4 நாள் | உஸ்பெகிஸ்தான் | | Rs. 54,990/- |
| 4 நாள் | கஜகஸ்தான் அல்மைட்டி | | Rs. 74,990/- |

## தைப்பூசம் ஸ்பெஷல் 2025

**சிங்கப்பூர் - மலேசியா பினாங்கு**

6-2-2025 ரூ. 79,990 முதல்



## தைப்பூசம் ஸ்பெஷல் 2025

**மலேசியா-ஜென்டிங்**

8-2-2025 ரூ. 37,990 முதல்

இது தவிர மேலும் பல சுற்றுலாக்கள் மற்றும் குரூப் சுற்றுலா, தனி நபர் சுற்றுலா, கல்வி, கம்பெனி குரூப் சுற்றுலாக்களுக்கு 97918 48265 / 98421 62416

கிளைகள் : சென்னை, வடபழனி, பெரியமேடு, மாம்பழம், மைலாப்பூர், காஞ்சிபுரம், பாண்டிச்சேரி, காரைக்குடி, கோவை, திருச்சி, பழநி, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருப்பூர், இராஜபாளையம்

24x7 Calling Mobile : 98424 47305

# ஆர்ப்பரிக்கும் நூலாலயம்




அரியக்குடி " ஸ்ரீ" – சபாரத்தினம்
(garudasaba@gmail.com)



ஒரு சிற்றழகிய கிராமம். வயலும் வயல் சார்ந்த இடம். ஒரு ஊரணி. வாசலில் கோயில். வடகரையில் ஒரு அழகிய கட்டுமானத்தில் ஆச்சரியமாக ஒரு அரசு – நூலகம்.

உள்ளே சென்றால் நன்கு பராமரிக்கப் பெற்ற வளாகம். நல்ல வெளிச்சம் காற்றோட்டம். மேசை நிறைய நான் என் வாழ்நாளில் பார்த்தேயிராத வார, மாத, ஆங்கிலம் மற்றும் தமிழிதழ்கள் அழகாக வரிசையாக அடுக்கப்பட்டிருக்கின்றன. புத்தகங்கள் ஒன்றை ஒன்று பார்த்த வண்ணம் நூலகத்தோடு சேர்த்து மௌனமாக இருக்கின்றன.

எத்தனை நூல்கள் இருக்கும் என யோசிக்கையில் சுமார் 34000 என்று பதிலளித்தார் நூலகர். ஐயா, "இது அரசு நூலகம் தானே?"என வியப்பு மேலிடக் கேட்டேன், நூலகரிடம். அச்சு அசலாக இது அரசு நூலகம் தான். 3232 பேர் நூலக உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 214 புரவலர்கள் இருக்கிறார்கள். இது நூலகம் மட்டுமில்ல... அதையும் தாண்டி... குழந்தைகளுக்காக நிர்மாணிக்கப் பெற்ற ஞானத் திருக்கோயில் என்றார் நூலகர்.

ஆலயக் கருவறையில் இருப்பது போல நடுநாயகமாக ஒரு சிலை. அன்றலர்ந்த தாமரையில் மாலை. மணம் பரப்பும் ஊதுபத்தி, அருகில் ஒளிரும் ஞானச்சுடர் விளக்கு, அதன் கீழ் கவிஞர் தாரா பாரதி அவர்கள் எழுதிய "சீர்மிகுந்த தமிழறிஞர் உலகம் சுற்றிச் சிறப்படைந்த தென்னாட்டு மார்க்கோபோலோ" எனும் பாடல் வரிகள் கல்வெட்டாக இருக்கிறது. இந்த ஆலயத்தில் எத்தனை காலப் பூஜை? எப்போது பிரசாதங்கள் வழங்குவார்கள் என்று கேட்கத் தோன்றியது.

நூலகத்திற்குள், ஒரு பள்ளியிலிருந்து கொத்தாக ஒரு வகுப்புப் பிள்ளைகளை ஒரு ஆசிரியர் அழைத்துக் கொண்டு வருகிறார். அனைத்துக் குழந்தைகளுக்கும் நான் எதிர்பார்த்த பிரசாதம் நல்ல விலையுயர்ந்த "பிஸ்கட்டுகளாக" வழங்கப் பெற்றது. குழந்தைகள் தாங்கள் பலநாட்கள் பழகிய இடத்தில் புழங்குவது போல ஒரு குழுவினர் சிறுவர் நூல்கள் பிரிவில் அமர்ந்தனர். ஒரு குழு கைவினைப் பொருட்கள் செய்வது, அறிவுப் பூர்வமான விளையாட்டுப் பொருட்களைக் கொண்டு விளையாடுவது என தொடர்ந்தனர்.

மலைத்துப் போய் நின்ற என்னை "ஐயா, இங்கே வாங்க" என ஜீவிதா எனும் நூலகத்தில் இயங்கி வரும் கணினி பாடம் போதிக்கும் ஆசிரியர் அழைத்தார். அங்கு ஏற்கனவே வந்த மாணவர்களில் ஒரு குழு 3 கணினிகளில் கூகுளில் எதையோ தேடுவதையும், ஓவியம் வரைவதிலும், "எம் எஸ் வேர்டு டைப்" செய்வதிலுமாக இருந்தனர். கணினி நல்ல வேகத்தில் இயங்கும் "இன்டெர்நெட்டில்" இணைக்கப் பெற்றிருக்கிறது. ஒரு ஸ்கேனர் – பிரிண்டர் இணைப்பில் இருக்கிறது. அனைத்தும் அரசு அலுவலகமாக

இருந்தாலும் "இயங்குகிறது". மிகச் சுத்தமாகப் பராமரிக்கப் பெற்றிருக்கிறது,

இந்தப் பிள்ளைகள் விளையாடும் விளையாட்டுக்களை Youth online exchange எனும் வகுப்புகளை அமெரிக்காவில் இயங்கும் தமிழ்நாடு அறக்கட்டளை சார்பாக 15 நாட்களுக்கு ஒரு முறை இணையம் வழியில் நடத்தி வருகிறார்கள்.

அமெரிக்காவில் இருக்கும் குழந்தைகள் அதன் ஒத்த வயதில் இந்தக் கிராமத்தில் இருக்கும் குழந்தைகளோடு கலந்து பேசுவதும், விளையாடுவதும், புதிர்கள் போட்டு விடையளிப்பதுமாகத் தொடர்கிறது.

வேறு என்ன என்னவெல்லாம நடக்கிறது என வியப்பு மேலிடக் கேட்டால், வாரத்திற்கு ஒரு முறை செஸ் பயிற்சி குழந்தைகளுக்கு அளிக்கப் பெறுகிறது. செஸ் போட்டிகளில் கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை வென்ற இந்த ஊரைச் சார்ந்த சேதுராமன் அவர்களின் தந்தை பனையப்பன் அவர்கள் நேரில் வந்தும், கணினி வழியிலும் பயிற்றுவிக்கிறார்கள் என்றது நூலகர் குரல்.

வாசகர் கூட்டம் வாரந்தோறும் நடக்கிறது. "நல்வாசகர் விருது" இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பொருளாதார நிபுணர் மும்பையில் வசிக்கும் சேதுராமன் சாத்தப்பன் அவர்களால் வழங்கப் பெறுகிறது.

கோடை விடுமுறை காலங்கள் முழுவதும் தினந்தோறும் திருவிழாவாக நூலகம் திக்குமுக்காடுகிறது. பரத நாட்டியம், யோகா, சங்கீதம், ஆங்கிலத்தில் பேச்சுப் பயிற்சி, மேடைப் பேச்சுக் கலைப் பயிற்சி எனக் குழந்தைகள் கொண்டாடும் வித்தியாச ஆலயமாக இருக்கிறது இந்த நூலகம், என அடுக்கிக் கொண்டே சென்றனர் நூலகப் பணியாளர்கள் .

கவிக்கோ அப்துல் ரகுமான் சொல்வது போல குழந்தைகள் தினத்தை மட்டும் கொண்டாடாமல் குழந்தைகளைக் கொண்டாடுகிறது இந்த ஊர் நூலகம்.

சரி, இது எங்கு இருக்கிறது. எப்படி இப்படிச் சுத்தமாகவும், தொய்வின்றி தனியார் அலுவலகம் போல இயங்கும் நிறுவனமாகவும் ஒரு அரசு இயக்கும் நிறுவனம் இயங்குகிறது என்ற பின்னணியைச் சொல்ல வேண்டாமா.

குழந்தைகளைக் கொண்டாடும் இந்த ஆலயம் தமிழ்ப் பயண இலக்கியத் தந்தை என அறியப்படுகிற அறிஞர் சோமலெ, தமிழாகரர் தமிழண்ணல், தினமணி மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களின் மேனாள் ஆசிரியர் இராம. தி. சம்பந்தம் என ஒரு பெரிய அறிஞர்கள் பட்டாளத்தைப் பிரசவித்த தாய் நெற்குப்பை என்பவளே.

உலகம் சுற்றிய தமிழர் சோமலெ உயரப் பறந்தாலும், தான் பிறந்த ஊரை ஒவ்வொரு முறையும் தரையிறங்கிப் பார்த்து ஒவ்வொரு அடியாக உயர்த்தவும் திட்டமிட்டிருக்கிறார்கள். எழுத்து ஒரு கண்ணாக வைத்து சுமார் 130 நூல்களை எழுதிக் குவித்திருக்கிறார்கள், தனது ஊரின் உயர்வை ஒரு கண்ணாக வைத்து ஒவ்வொரு அடியாக உயர்த்தியிருக்கிறார்கள்.

பயண இலக்கியப் பிதாமகன் சோம.லெ. அவர்களின் எழுத்துப் பொக்கிஷங்களை நூற்றுக்கும் அதிகமான நூல்களை தமிழகம் 2022-இல் நாட்டுடைமையாக்கிக் கொண்டது. உழைப்பின் பலனை ஊர் சொந்தமாக்கிக் கொண்டது. தன் அப்பாவின் கனவுகளை அவரது மகன் அமெரிக்க வாழ் விஞ்ஞானி சோம.லெ. சோமசுந்தரம் சுமந்து கொண்டு உலகத்தில் நிகழும் நல்லவற்றை நமது ஊருக்கு கொண்டு வந்து நமது பிள்ளைகளுக்கு சேர்த்துவிட வேண்டும் எனும் உயரிய நோக்கில் ஒரு ராஜாளிப் பறவையாக பறந்து வருகிறார்கள்.

இந்த அழகிய நூலக வளாகத்தை 2007-இல் வடிவமைத்து தனது தந்தையார் பெயரில் "உலகம் சுற்றிய தமிழர் சோம.லெ. நினைவு கிளை நூலகம், நெற்குப்பை" என்று பெயரிட்டு தமிழ்ச்சுடர் சோம.லெ. சோமசுந்தரம் அவர்கள் கொடையாக வழங்கியிருக்கிறார்கள். ஒரு கட்டடித்தைக் கட்டிக் கொடுத்தோம், அத்தோடு நமது கடமை நிறைவடைந்தது என இல்லாமல், நூலகத்தின் ஒவ்வொரு அசைவிலும் தனது பொருளால், நேரத்தால் நிறைத்துக் கொண்டுமிருக்கிறார்கள்.

நமது ஊர்ப் பிள்ளைகள் படிக்க வேண்டும். அப்பாவின் பறந்து விரிந்த கனவுகளை இந்த மண் பயனுறச் செய்து விட வேண்டும் என திரும்பும் திசையெல்லாம், நல்ல அறுவடையை நோக்கி விதைத்துக் கொண்டே செல்கிற சோ.லெ. சோமசுந்தரத்திற்கு, தமிழ் கூறும் நல்லுலகம் திருப்பித்தர வேண்டியது இன்னும் பல நூறு சோம. லெ.-க்களை, தமிழாகரர் தமிழண்ணல்களை, தினமணி ஆசிரியர் ராம.தி. சம்பந்தங்களை.

நான் இந்த நூலகத்திற்குச் சென்ற நாள் 04.11.2024. சோம.லெ. ஐயா அவர்களின் நினைவு நாள். அன்றே அவர்கள் இறந்த திதியும் என்றார்கள் சோம. லெ. சோமசுந்தரம் அவர்கள்.

ஆச்சரியம் பாருங்கள். சோம.லெ. ஐயா ஆதர்சனக் குருவாகக் கொண்ட உலகம் சுற்றிய தமிழர் கோட்டையூர் ஏ.கே. செட்டியார் அவர்களின் பிறந்த தினமும் அதே நாளில்தான்.

மதுரையில் அழகர் ஆற்றில் இறங்கும் திருவிழாவில், பிள்ளைகளை அப்பாக்கள் தோள் மீது உயர்த்தி, இந்த வயதில் நான் பார்த்த மதுரையை உன் இளைய வயதிலேயே நீ பார்த்துவிட வேண்டும் என சுற்றிக் காட்டுவார்களாம். ஐயா சோம.லெ. 65 அகவை வாழ்ந்து காட்டிய உலகத்தை, மகன் அமெரிக்காவில் வாழும் வேளாண் விஞ்ஞானி சோம.லெ. சோமசுந்தரம் இன்னும் உயர்த்திப் பிடித்து இந்த மக்களுக்கு காட்டுவது வியப்புக்கள் நிறைந்ததாக உள்ளது. வாழ்க அறிஞர் சோம லெ ஐயாவின் புகழ்.

# வெல்லலாம் வாருங்கள் 2



எம். சிதம்பரம்

ரிச்சர்டு ஹேட்லி என்ற Newzealand-ஐ சேர்ந்த உலகின் ஒரு மிகச்சிறந்த All rounder பந்தை வீசும் போது கண்ணை மூடிக்கொண்டு வீசுவாராம். என்ன வேடிக்கையாய் இருக்கிறதா. அது நூற்றுக்கு நூறு உண்மை.



ஆனால் கண்ணை மூடிக்கொண்டு பந்தை போட்டி நடக்கும் போது வீச மாட்டார். போட்டி நடக்கும் முன் கண்ணை மூடிக் கொள்வார். பந்தை தன் கால் சட்டையில் வேகமாக தேய்ப்பார்... தேய்ப்பார். பின் வேகமாக ஓடி வருவார். பந்தை வீசுவார். பந்து அவர் கையிலிருந்து ஏவுகணையாய்ப் பாய்ந்து. மட்டை வீச்சாளர் (Batsman) பின்னால் ஸ்டம்ப்ஸ் மேல் உள்ள bails-ல் பட்டு அந்த bails க்ளிங் என சப்தம் எழுப்பி திசைக்கு ஒன்றாய் பறக்கும். அந்த க்ளிங் சத்தம் மிக துல்லியமாக அவர் செவிகளில் கேட்கும். பூ பூக்கும் ஓசையே ஒரு கவிஞனுக்கு கேட்கும் போது எகிறி பறக்கும் ஓசை கேட்க கூடாதா என்ன. மேலே நாம் விவரித்த காட்சியை போட்டி நடக்கும் முன் தன் மனத் திரையில் அப்படியே ஓட விடுவார். காட்சி படுத்துவார். மறுநாள் போட்டியில் அவர் மனதில் காட்சி படுத்தியவை அப்படியே நிகழ்ந்ததாம். இதிலிருந்து நாம் அறிய வேண்டியவை இரண்டு. 1.ஆழ்மனதின் அபூர்வமான ஆற்றல் 2.ஆக்கபூர்வமான காட்சிப் படுத்துதலின் (Creative Visualisation) சக்தியும், வலிமையும்.

டிஸ்னி உலகம் (Disney World) நிறுவனர் வால்ட் டிஸ்னி. தன் இளம் பிராயத்தில் மிக சிரமப்பட்டார். அவரிடம் ஒரு எலி Mouse இருந்து. அவர் ஆசையோடு வளர்த்த எலி அது. அந்த எலிக்கு உணவு அளிக்க கூட அவரால் இயலவில்லை. என்ன செய்வது எனத் தெரியவில்லை. தன்னிடமிருந்து, பட்டினியால் மடிவதை விட வெளியே சென்று பிழைத்துக் கொள்ளட்டும் என நினைத்து அதை அடைத்து வைத்திருந்த கூண்டை திறந்து விட்டார். அந்த எலி கூண்டை விட்டு வாசல் வரை ஓடியது. பின் அங்கிருந்து தன் எஜமானன் Walt Disney-ஐ பார்த்தது. அதன் விழியோரங்களில் இருந்து இரண்டு சொட்டு கண்ணீர். வந்ததாம். அல்லது வந்தது போன்ற பிரம்மை. அது அவர் ஆசையோடு வளர்த்த எலியாயிற்றே.

உடனே அவர் உன் கண்ணில் நீர் வழிந்தால், என் நெஞ்சில் உதிரம்.

எனப் பாடவில்லை. மாறாக கண்ணீரோடு நிற்கும் அந்த எலியினை அப்படியே மனதில் காட்சிப்படுத்தினார் Freeze செய்தார். பின் யோசித்தார். ஒரு எலியால் அழ முடியுமென்றால் அது ஏன் பாடக் கூடாது, ஆடக்கூடாது என யோசித்தார். அந்த எலியை தன் மனதிலேயே பாட வைத்து ஆட வைத்துப் பார்த்தார். animate செய்தார். அப்படி உருவானது தான் உலகப் பிரசித்தி பெற்ற கார்ட்டூன் character Micky Mouse.



மேலே கூறியது போல் நீங்கள் எந்த வெற்றிக் கனியை அடைய வேண்டும் என நினைக்கிறீர்களோ... அதை அப்படியே உங்கள் மனதில் காட்சிப்படுத்தி பாருங்கள். அடிக்கடி பாருங்கள். முடிந்தால் தினமும் பாருங்கள். உங்கள் ஆழ் மனது அக்காட்சியை அப்படியே நம்பும். ஏற்றுக்கொள்ளும். நீங்கள் அடைய நினைத்த வெற்றியை அடைவீர்கள். வெற்றி மேல் வெற்றி பெறுவீர்கள்.

இப்படியே உங்கள் லட்சியங்கள் ஒவ்வொன்றையும் அடைவீர்கள். சிகரம் செல்வீர்கள்.

நீங்கள் சிறந்த தொழில் முனைவோர் ஆக, சிறந்த பேச்சாளர் ஆக, சிறந்த தலைவராக, சிறந்த விளையாட்டு வீரராக யாராக வேண்டுமென நினைக்கிறீர்களோ. அவராகவே மாறுவீர்கள்.

– எம்.சிதம்பரம்
பயிற்சியில் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றவர்

# ஹைதராபாத் நகரத்தார் சங்க ஆண்டு விழா சங்கமம் 2024



சுற்றுலா செல்வதன் மூலம் நமக்கு கிடைக்கும் பயண அனுபவங்களும், நம்முடன் பயணிப்பவர்களோடு நாம் பகிர்ந்து கொள்ளும் நட்பும், நேசமும், மகிழ்ச்சியும் என்றும் நம் நினைவில் அழியாமல் நிற்பவை. உலக சுற்றுலா தினம் செப்டம்பர் 27-ஆம் தேதி கொண்டாடப்படும் நிலையில், இந்தியாவில் தேசிய சுற்றுலா தினம் ஜனவரி 25-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இந்தியா சுதந்திரம் அடைந்த ஒரு வருடத்திற்குப் பிறகு 1948-ஆம் ஆண்டில் இது அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் ஹைதராபாத் நகரத்தார் சங்கம், தங்களது ஆண்டு விழாவினை “சங்கமம்” என்று தலைப்பிட்டு, கொண்டாடுவது வழக்கம். இந்த வருடம் தங்களது நான்காவது சங்கமத்தினை ஒரு வித்தியாசமான முறையில் கொண்டாட விழைந்தனர். எப்பொழுதும், ஆடல், பாடல், விளையாட்டு, போட்டிகள், பரிசுகள், அறுசுவை உணவு என கொண்டாடப்படுவது வழக்கம். முதல் முறையாக ஒரு நாள் சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்து, சுமார் 61 சங்க உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து, கடந்த அக்டோபர் 13, 2024 அன்று இரு குளிரூட்டப்பட்ட பேருந்துகளில் வாரங்கல் சென்று வந்தனர்.

தெலுங்கானாவின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள வாரங்கல் கிராமப்புற மாவட்டம் பல வரலாற்றுக்கு முந்தைய வாழ்விடங்களை கொண்டுள்ளது. காகதீயா வம்சத்தின் தலைநகராக விளங்கியது. காலையில் சிகந்திராபாத்திலிருந்து கிளம்பின பேருந்துகள். இந்து கட்டிடக்கலைக்கு ஒரு அழகிய உதாரணமும், 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கலை நுட்பம் மிகுந்த ஆயிரம் தூண்கள் கோவில், சாளுக்கிய வம்சத்தின் போது பாலம்பேட்டையில் ராமப்பா ஆட்சியின் போது கட்டப்பட்ட ராமப்பா கோவில், பத்ரகாளி அம்மன் கோவில் மற்றும் நான்கு பக்கங்களிலும் நான்கு ராஜகோபுரங்கள் கொண்ட, திராவிட கட்டிடக்கலை பாணியில் கட்டப்பட்டுள்ள, 12 அடி உயரமுள்ள வெங்கடேஸ்வரர் எழுந்தருளியிருக்கும் ஸ்வர்ணகிரி கோவில் சென்று, தரிசனம் முடித்து, இரவு சிகந்திராபாத் வந்தடைந்தனர். மழையின் காரணமாக வாரங்கல் கோட்டை மட்டும் செல்ல முடியாமல் போனாலும், பேருந்தில் அமர்ந்தபடியே கோட்டையின் பகுதிகளை பார்க்கும் வாய்ப்பு கிடைத்ததில் அனைவருக்கும் மகிழ்ச்சி. காலையும், மாலையும் சுவையான சிற்றுண்டி பேருந்திலேயே வழங்கப்பட, மதியம் வாரங்கலில் உள்ள உணவ கூடமொன்றில் முன்பதிவு செய்யப்பட்டு,அறுசுவை உணவு பரிமாறப்பட்டது. உணவுடன் சிறு கேளிக்கை விளையாட்டும் நடத்தப்பட்டது. அதனுடன் அனைத்து உறுப்பினர்களும் தங்களது பெயர், ஊர், கோவில், குடும்ப விவரங்களைப் பகிர்ந்து, தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். இதில் ஹைதராபாத்தில் தங்கி வேலை பார்க்கும், திருமணமாகாத இளைஞர்கள் உற்சாகத்துடன் பங்கு கொண்டது மிகவும் சிறப்பான அம்சம். சிரிப்பு, மகிழ்ச்சி, குதூகலம் என மிகச் சிறப்பாக அமைந்தது இந்தப் பயணம். இது போன்ற இன்னும் பல சுற்றுலா பயணங்களை ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதே அனைவரின் திண்ணமான எண்ணமாக இருந்தது.

– லட்சுமி நாச்சியப்பன்

# நகரத்தார் சிகரத்தார் 109



காரைக்குடி நாராயணன்



ஆச்சி வழக்கம் போல மொட்டைமாடிக்கு அதிகாலையில் சென்று காக்காய்களுக்குச் சாதமும், அரிசியும் போட்டு வந்தார்.

நகரத்தார்களைப் பற்றிக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்த ராஜ்மோகன் ஆச்சர்யத்துடன் ஆச்சியிடம் கேட்டார்.

ஆச்சி, நானும் இங்கே வந்த பல மாதங்களாப் பாக்குறேன். பொழுது விடியுற முன்னே தினமும் மொட்டைமாடிக்குப் போய் அரிசி சாதமெல்லாம் வச்சிட்டு வர்றீங்களே.

தம்பி. பறவைகள்ல காக்காய்க்கு ஒரு சிறப்பு உண்டு. சனீஸ்வரனோட வாகனம் காக்காதான். அது சாயங்காலம் ஆனாக் குளிச்சிட்டுத்தான் கூட்டுக்கே வரும். தன் முட்டை இல்லேன்னு தெரிஞ்சும் குயில் முட்டையை அடைகாக்கும். இப்போ நம்ம சொல்ற வாடகைத்தாய்க்கு ஆதாரமே காக்காதான். காக்கா ரூபத்திலதான் பிதுர்கள் 9 தலைமுறைக்கும் வருவார்கள். எமதர்மனும், சனீஸ்வரனும் காக்காய் ரூபத்திலதான் குடும்பத்துக்கு நன்மை செய்வாங்க.

இப்போது பல மாதங்களுக்குப் பிறகு வேர்க்க விறுவிறுக்க முருகப்பன் வந்தான். அவனை ராஜ்மோகன் சிரித்தபடி வரவேற்றார்.

வாங்க மூனாரூனா லேனா சோவன்னா மானா.

என்ன டைரக்டர் சார், நீங்க செட்டியார் ஆயிட்டீங்களா? மூனா ரூனான்னு விலாசத்தோட கூப்பிடுறீங்க.

செட்டிநாட்டுச் சாப்பாடும், உபசரிப்பும் ஒரு நாள் இருந்தாப் பத்தாதா? நான் கிட்டத்தட்ட ஒரு வருஷம்ல இருந்திருக்கேன். என் ரத்தத்தோட ஊறி ஒட்டிக்கிடுச்சு.

முருகப்பன் வேர்வையைத் துடைத்துக் கொண்டு காளிமுத்துவைக் கூப்பிட்டுக் காபி கொண்டு வரச் சொன்னான்.

சீனி போட வேண்டாம். எனக்குச் சக்கரை வியாதி.

ஆச்சி சிரித்துக் கொண்டே சொன்னார்.

சீனிச்சக்கரை டப்பா கொஞ்சம் வழிச்சுப் போடு குப்பான்னானாம்..

குப்பான்னதும் ஞாபகத்துக்கு வருது. குப்பான் செட்டி வீட்டுல பகவத்கீதைப் புத்தகத்தை இங்கேருந்து வாங்கிட்டுப போனாங்களாமே. மறந்திடாமக் கொடுக்கச் சொன்னாங்க.

முருகப்பன் அவன் வைத்திருந்த துணிப்பையிலிருந்து எடுத்துக் கொடுத்தான். அதை வாங்கி ஆச்சி கண்ணில் ஒற்றிக்கொண்டு பூஜை அறையில் வைத்து விட்டு வந்தார்.

முருகப்பனுக்குக் காபி சூடாக வந்தது. அதைக் குடித்தபடியே குப்பான் செட்டி வீட்டுக்கு, மொஃபைலில் பகவத்கீதையை ஆச்சியிடம் கொடுத்து விட்டதாகக் கூறினான்.

அப்பா, நான் வர்றதுக்குள்ள பத்துத் தடவை கேட்டுட்டாரு. பகவத்கீதையைக் கொடுத்திட்டியா, கொடுத்திட்டியான்னு. இதென்ன பவளமா? தங்கமா? வைரமா?

நீ சொன்ன பவளம், தங்கம், வைரம் எல்லாம் வெறும் வெளிப்பகட்டு. பகவத்கீதை நம்ம ஆத்மா.

அப்படியா?

ஆமாடா. இந்துக்களுக்கு பகவத்கீதை, முஸ்லீம்களுக்கு குர்ரான், கிறிஸ்துவர்களுக்குப் பைபிள். கோர்ட்ல இந்தப் புனித நூல்களில்தான் சத்தியம் வாங்குறாங்க. இந்தப் பகவத்கீதையில கிருஷ்ணன், நான் பசுக்களில் காமதேனுவா இருக்குறேங்குறாரு.

இப்போது ஆச்சி வீட்டுத் தோட்டத்திலிருந்த பசு மாடு 'அம்மா' என்று கத்தி அதை ஆமோதித்தது.

செட்டியார் அவர் பங்குக்குச் சொன்னார்.

முருகப்பா. இப்போ நடந்த அமெரிக்கத் தேர்தல்ல துளசி சப்பார்ட்ங்குற பெண்மணி வெற்றி பெற்றதும், பகவத்கீதை மீது தான் சத்யப்பிரமாணம் செஞ்சிருக்காங்க.

சரி. அய்யா. நான் என் மகளைப் பாக்க சிங்கப்பூர் போய்ட்டு வர்ரேன். சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன். டைரக்டர் சார் நான் திரும்பி வர்ரதுக்குள்ள நகரத்தார் சிகரத்தார் வரலாற்றை ஆவணப்படம் எடுத்திடாதீங்க. மத்தியில எவனோ புகுந்திடுவான். எனக்கு வர்ற வருமானம் போயிடும். நான் உங்க படப்பிடிப்புக்கு வேண்டிய வீடு, வாசல், தோட்டம், கோயில், குளம், ஆடு, மாடு எல்லாம் இப்பவே பேசி வச்சிருக்கேன். ஷூட்டிங்கு எடுக்குற போது நானும் நடிக்குறேன். அதுக்குத் தனியாப் பணம் கொடுத்திடுங்க. என்னை மறந்திடாதீங்க.

அதுல குறைச்சலில்லை. ஆட்டுடா பூசாரின்னானாம்.

முருகப்பா நீ சிங்கப்பூர் போய்ட்டு அப்படியே பினாங்குக்கும் போயி தண்ணீர்மலையான் தைப்பூசத்தை அவசியம் பாத்திட்டு வா.

அதுக்கெல்லாம் பணம் வேண்டாமா? பிளேனுக்கே என் மக தான் டிக்கெட் அனுப்பியிருக்கா.

நான் தர்ரேன். வாங்கிட்டுப் போ. நீ தண்டாயுதபாணியைத் தரிசனம் பண்ணுனா அந்தப் புண்ணியத்தில எனக்குக் கொஞ்சம் சேரட்டும். நம்ம செட்டியார்களோட அயல்நாட்டுக் கோயில்கள்ல முக்கியமான கோயில்பா.

ராஜ்மோகன் புரியாமல் கேட்டார்.

ஆச்சி. தண்டாயுதபாணிங்குறீங்க, தண்ணீர்மலையாலன்ங்குறீங்க, ரெண்டுல எது.

எல்லாம் ஒன்னுதான். வேல் இருந்தா வேல்முருகன். தண்டமிருந்தா தண்டாயுதபாணி. குன்றுதோறும் இருக்குற குமரன், முருகன், சரவணன், பாலசுப்பிரமணியம் எல்லாம் ஒன்னுதான். மனுஷனாப் பொறந்த நம்ம எல்லாரும் தவழ்ந்து, நடந்து அப்புறம்தான் ஓட முடியும். படிப்படியா முன்னேறுனாத்தான் வாழ்க்கை நிம்மதியாவும், சந்தோஷமாவும் இருக்கும். குன்றுதோறும் இருக்குற முருகன் அடையாளமே அதுதான்.


உ ஸ்ரீ ராமஜெயம்

## சுவீகாரம்

நாட்டரசன் கோட்டை, இளையாத்தங்குடி கோவில் – கழனி வாசல் பிரிவு
6 மாதம் அல்லது 1 வயதிற்குள் உள்ள ஆண் குழந்தை வேண்டும்.
சுவீகாரம் விட விரும்புவோர்.
தொடர்புக்கு : 9486905906


ஓதிமலை – 1880 படிகள், சென்னிமலை – 1320 படிகள், மருதமலை – 837 படிகள், பழனி மலை – 689 படிகள், அனுபாவிமலை – 500 படிகள், சிவன் மலை – 496 படிகள், திருத்தணி மலை – 365 படிகள், விராலிமலை – 207 படிகள், பவளமலை – 200 படிகள், பொன் மலை – 200 படிகள், பச்சைமலை – 180 படிகள், திண்டல்மலை – 150 படிகள், கரட்டுமேடு மலை – 150 படிகள், குருந்தமலை – 60 படிகள், திருப்பரங்குன்றம் – 50 படிகள்.

ஆச்சி, மூச்சு விடாமல் படிப்படியாக முன்னேற வேண்டும் என்பதைச் சொன்ன விதம் ராஜ்மோகனை ஆச்சர்யப்படுத்தியது.

ஆச்சி.... எல்லா மலையையும் சொன்னீங்க. பினாங்குல உள்ள தண்ணீர்மலையானைப் பத்திச் சொல்லுங்க. அங்கேயும் போயி என் படப்பிடிப்பை நடத்திடுறேன்.

ஆச்சி, குளித்து விட்டுப் பூஜை முடித்த பின் சொல்வதாகச் சொன்னார். (தொடரும்)

## வாழ்த்துகள்



உயர்ந்த வாழ்க்கைக்குத் தேவையான கருத்தாழம் மிக்க செய்திகளை **“நாளும் ஒரு நற்கருத்து”** என்ற தலைப்பில் புலனத்தில் தினசரி எழுதிவரும் அரிமழம் ப.செல்லப்பா அவர்கள் 09-12-2024 அன்று தனது 3000 நாட்களை நிறைவு செய்துள்ளார். அவரது சமூகப் பணி பாராட்டுக்குரியது. இவரது **“நாளும் ஒரு நற்கருத்து”** ஏற்கனவே இரண்டு பாகங்களாக நூல் வடிவில் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அரிமழம் ப.செல்லப்பா அவர்கள் தொடர்ந்து நற்கருத்துக்களை தினசரி வழங்கி மேலும் சாதனை படைக்க நமது செட்டிநாடு வாழ்த்துகிறது.

## வேலை தேவை

| | |
|---|---|
| பெயர்: | S. சிதம்பரம் |
| கோவில், ஊர்: | நேமம் கோவில், ராங்கியம் |
| பிறந்த தேதி: | 29.09.2001 |
| படிப்பு: | B E., (ECE) அண்ணா பல்கலைக்கழகம். |
| மதிப்பெண்: | 9.07 பாயின்ட்ஸ் |
| கல்லூரி ஆண்டு: | 2019-2023 |
| Project: | e shaped antenna for montoring pacemaker; Antenna used in pumping the heart in monitoring pacemaker |
| அறிந்த மொழிகள்: | ஆங்கிலம், தமிழ் |

சென்ற இதழ் தொடர்ச்சி

# வாழையடி வாழை



சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன்




## உளவியல் காரணங்கள்:

ஆண்மக்களுக்கு, பதவியாலும், பணியாலும் கிடைத்த பொறுப்புகளும், அதிகாரங்களும் சுய கௌரவத்தையும், சுய மதிப்பையும் அள்ளித் தந்திருந்தன. நிரந்தர ஓய்வு என்பது அவற்றைக் குறைத்து விட்டதாக அவர்கள் உணர்கிறார்கள். அது மட்டுமல்ல, அலுவலகத்தில் அவருக்கு அமைந்திருந்த நண்பர்கள் கட்டமைப்பு விலகி, தான் தனித்து விடப்பட்டதாகவும் நினைக்கிறார்கள். தங்களுடைய அனுபவ அறிவும், திறமையும் தங்களுடனே தங்கி இருப்பதை அவர்கள் உணரத் தவறுகிறார்கள். இவற்றைச் சரியாகப் பயன்படுத்தத் தெரிந்து கொண்டால் ஓய்வு காலத்திலும் புதிய கட்டமைப்பை உருவாக்கிக் கொள்ள அவர்களால் இயலும்.

இதை விட மனதில் தாக்கம் ஏற்படுத்தும் இன்னொரு விஷயம் இருக்கிறது. தன் சம வயதில் உள்ள உறவினரோ, நண்பரோ இறந்து விட்டால் அவர் நெஞ்சில் எழும் துக்கம் ஆழமாகப் பதிந்து பல நாட்கள், பல மாதங்கள் அகலுவதில்லை. அதிலும் பெரியவர்களின் வாழ்க்கை இணையை அவர்கள் இழக்க நேரிட்டால், எழும் துயரத்தின் ஆழம் அளவிட முடியாதது. நெஞ்சை விட்டுப் பல காலம் அகலாதது. இந்தத் துக்கங்களைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளவும் மாட்டார்கள். இப்படித் தனிமையில் சஞ்சலப்படும் மனங்களில் –மன அழுத்தம் –Mental Depression மற்றும் நினைவாற்றல் இழப்பு(ஞாபக மறதி) –Dementia நோய்கள் குடியேறுகின்றன.

### 1.மன அழுத்தம் – Mental Depression:

மன அழுத்தம் அல்லது மனச் சோர்வுடன் இருப்பவர்கள் வாழ்க்கையின் எந்த நிகழ்விலும் ஆர்வம் இல்லாமல் இருப்பார்கள். இதனால் அவர்களுக்கு உடலிலும் ஒரு விதமான சோர்வு அல்லது களைப்பு இருக்கும். இதன் காரணமாக, அவர்களுக்கு டயபெடிஸ், ரத்த அழுத்தம் போன்ற நோய்கள் இருந்தாலும், விபத்துகளால் காயம் ஏற்பட்டாலும் அதன் தீவிரம் வழக்கத்தைவிட அதிகமாக இருக்கும். மருத்துவ சிகிச்சையின்போது அவர்களின் ஒத்துழைப்பு குறைவாகவே இருக்கும்.

### 2. நினைவாற்றல் இழப்பு (ஞாபக மறதி) – Dementia:

மூளையின் செல்கள் சிதைந்து நினைவாற்றல் மங்கும். பேசும் போது சரியான வார்த்தைகள் கிடைக்காமல் தடுமாறுவார்கள். அன்றாடம் சின்னச் சின்னப் பிரச்னைகள் வந்தாலும் தீர்வு கிடைக்காமல் குழம்புவார்கள். நோய் முற்றினால் மூளை நரம்புகள் சிதைவது, மூளையின் ரத்தக் குழாய்களில் அடைப்பு, மூளையில் ரத்தக் கசிவு போன்றவை ஏற்பட வாய்ப்புண்டு. டிமென்ஷியா வருவதற்குப் பெரும் காரணமாக இருப்பது அல்சைமர் (Alzheimer's disease). இது ஒரு மூளைக் கோளாறு. முதலில் மூளையில் சில புரதச் சத்துக்கள் படியும். அடுத்து மூளை சுருங்கும். பிற்பாடு மூளையின் செல்கள் இறந்து விடும். தொடர்ந்து நினைவாற்றல், அறிவாற்றல் எல்லாம் குறையும்.

## உடல் ரீதியான காரணங்கள்:

ஒரு மனிதரின் வயது 60–ஐத் தாண்டும் போது அவர் உடலில் முதுமையின் காரணமாகவே கீழ்க்கண்ட நோய்கள் அரும்பக் கூடிய வாய்ப்புகள் உருவாகின்றன:

### 1. நுரையீரல் கோளாறு:

முதுமை வந்த காலத்திலும் நுரையீரல் அதைக் கண்டு கொள்ளாமல் தன் தினசரி வேலையை ஒழுங்காகச் செய்கிறது. முதுமைக் காலத்தில் மூச்சடைப்பு, மூச்சுத் திணறல் என்று வந்தால் அதற்கு முதுமை காரணமல்ல, வேறு ஏதோ நோயின் அறிகுறி.

### 2.இதயக் குழாய்:

முதுமை இதயக் குழாயை (artery) நேரடியாகப் பாதிக்கிறது. ஆர்டெரியின் சுவர்கள் இறுக்கம் அடைகின்றன. அதன் சுருங்கி விரியும் தன்மை வேகம் குறைகிறது. ஆகவே ரத்தத்தை ஆர்டெரிக் குழாய்க்குள் தள்ளிவிடும் இடது வென்ரிக்கிளின் வேலைப் பளு அதிகமாகிச் சோர்வடைகிறது.



3. உணவுப் பாதை:

வாய்க்குள் தசை பலவீனம், பற்கள் விழுதல், நா வறட்சி, தொண்டையில் தசை பலவீனம், உணவுக் குழாயின் சுருங்கி விரியும் தன்மை குறைவது இவையெல்லாம் முதுமையின் அறிகுறிகள்.

4. கல்லீரல்:

வயது ஆக ஆக, கல்லீரலில் ரத்த ஓட்டம் குறைகிறது.

5. மூளை:

85 வயதான ஒருவருக்கு மூளையின் அளவில் 20% சுருங்கி விடுகிறது.

6. சிறுநீரகம்:

முதுமையின் காரணமாக, சிறுநீரகத்தில் வடிகட்டிகளாகச் செயல்படும் நெஃப்ரான்கள் உருவத்திலும் சுருங்கி எண்ணிக்கையும் குறைந்து விடுகிறது.

7. தோல்:

மூப்படையும் போது, மேல்தோல் லேசாகும். அடித் தோலில் திசுக்கள் குறையும். அதனால் தோலில் வெட்டுக்கள் ஏற்படும். தோலில் அரிப்பு எடுக்கும்.

வீட்டில் ஒரு புதிய குழந்தையின் வருகைக்கு தயார் செய்து கொள்வதைப் போல் ஒரு முதுமையின் வருகைக்கும் தயார் செய்து கொள்ள அது பற்றிய புரிதல் அவசியம் ஆகின்றது.

பெரியவர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ளல்:

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்" – திருக்குறள்.

வாழ்க்கையின் இறுதி 'மூன்றில் ஒரு பகுதி' முதுமையில் கழிக்க வேண்டும் என்பது இயற்கையின் விதி. அந்தப் பகுதிக்கும் சேர்த்துப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே திட்டமிடுதல் தன்னையும், தன் அறிவையும் நம்பி வாழும் ஒவ்வொருவரின் கடமை.

முதலில், நீங்கள் சார்ந்திருக்கும் சமூக வழக்கங்களின்படி, உங்கள் குடும்பத்தாரிடமிருந்தும், உங்கள் சமூகத்தாரிடமிருந்தும், உங்களைச் சுற்றி உள்ள உலகத்தாரிடமிருந்தும் உங்களுக்கு என்னென்ன உதவிகள் அல்லது சேவைகள் கிடைக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

ஒவ்வொரு உதவி அல்லது சேவைக்கும் ஒரு விலை உண்டு. அது என்ன என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்களுக்கும், உங்கள் மனைவிக்கும் உடம்பைத் தொற்றி உள்ள நீண்ட கால நோய்கள் அல்லது குறைபாடுகள் என்னென்ன என்பதைச் சிந்தியுங்கள். அவை முதுமையில் உங்கள் வாழ்க்கையை அதிகம் பாதிக்காதவாறு காப்பீடு செய்து கொள்வதைப் பற்றி, காப்பீட்டு சேவையாளர்கள், உறவினர், நண்பர்களோடு விவாதித்துத் திட்டமிடுங்கள்.

உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு அதிக இம்சை தராமல், முதுமையில் உங்கள் உடல் நலன், அன்றாடத் தேவைகள், விரும்பும் வசதிகளுடன் உங்களை நீங்களே பேணிக் கொள்வதற்கான திட்டங்களை ஒவ்வொன்றாகச் செயல்படுத்துங்கள்.

வீட்டின் உள்கட்டமைப்பிற்குச் சில ஆலோசனைகள்:

வீட்டுக்குள் சிறு படிக்கட்டுகள் அமைப்பதைத் தவிருங்கள். பதிலாக, சிறு சாய்வுதளங்களை(Ramp) அமைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் அமைதியைக் குலைக்காத, மற்றவர்கள் நடமாட்டம் அதிகமில்லாத, படுக்கை அறை, தொலைக் காட்சி, கணினி, புத்தகங்கள் கொண்ட கட்டமைப்பை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

மறந்து விடாதீர்கள், உட்கார்ந்த இடத்தில் இருந்து பார்த்தால் வெளி உலகத்தை அல்லது ஒரு பூந்தோட்டத்தைப் பார்த்து நீங்கள் ரசிக்கும்படியாக இருக்க வேண்டும்.

அறைகளுக்கும், ஜன்னல்களுக்கும் கதவுகளுக்குக் கீல் அமைப்பதைவிடத் தள்ளு கதவுகளாக இருத்தல் நலம்.

குளியல் அறையில் சறுக்கல் இல்லாத தரை, சக்கர நாற்காலி நுழைந்து திரும்பும் அளவுக்கு அகலமான இடம், பக்க வாட்டுச் சுவரிலும், உட்கார்ந்து குளிக்கும் இடத்துக்கு அருகே உள்ள சுவரிலும் கைப்பிடிக் கம்பிகள் பொருத்திக் கொள்ளுங்கள்.



மனைவிக்குச் சிரமம் இல்லாத வசதியான சமையல் அறையை அமைத்துக் கொடுத்து விடுங்கள்.


சமையல் மேடை 34 அங்குல உயரத்தில் இருக்கட்டும். சக்கர நாற்காலி இயங்குவதற்கு 5 அடி அகல இடம் இருக்கட்டும். சக்கர நாற்காலியில் அமர்ந்து பாதம் தரையில் பதித்துக் கொள்ளத் தரையிலிருந்து 9 அங்குல உயரத்தில் பாதம் தாங்கிக் கட்டைகள் இருக்கட்டும்.

கழுவு நீர்த் தொட்டியில், கையை நீட்டினால் தண்ணீர் கொட்டும் சென்சார் உள்ள நீர்க் குழாய் அமைப்பது பெரியவர்களுக்கு உகந்தது.

கணவன் - மனைவி இருவரின் சொத்துகளையும், சேமிப்புகளையும் வாழ்நாளின் இறுதிவரை பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளுதல் உறுதுணையாக இருக்கும். முதியோர்க்கான சேமிப்புத் திட்டங்கள், Reverse Mortgage கடன் திட்டமெல்லாம் பெரியவர்களின் நன்மைக்காகத்தான்.

### பெரியோரை மதித்தல்:

வீட்டில் உள்ள மூத்த தலைமுறையை மதித்துக் கொண்டாடுவது மற்றவர்களின் கடமை அல்ல, பெருமை. ஆல மரத்துக்கும், வாழை மரத்துக்கும் ஆறாவது அறிவு இல்லை. ஆனால் அவை தங்கள் தலைமுறையை வஞ்சிப்பதில்லை.




விருந்தினரை உபசரிப்பது நம் பாரம்பரியப் பண்பாடு என்று மார்தட்டிக் கொள்பவர்கள் நாம்.

“மோப்பக் குழையும் அனிச்சம்; முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து” – திருக்குறள்.

விருந்தினர்களே முகம் திரிந்து நோக்கினால் வாடி விடுவார்கள் என்றால், வீட்டில் இருக்கும் பெரியவர்களின் நிலைமை என்ன என்பதை நம்மால் உணர முடியாதா! அவர்களைப் புறந்தள்ள நமக்கு எப்படி மனம் வரும்? நாம் பெற்ற பிள்ளைகளின் மரபணுவுக்கு அவர்கள்தானே சொந்தக்காரர்கள்!

### பெரியோரைக் கடிதல்:

தம்மைச் சார்ந்து வாழ்வதை மனத்தில் வைத்து, தாம் பெற்ற பிள்ளைகளைக் கடிந்து கொள்வதற்குத் தமக்கு உரிமை இருப்பதாக நினைப்பது போல், பெரியவர்களின் இயலாமையை மனத்தில் வைத்து அவர்களைக் கடிந்து கொள்வதும், அவர்கள் மீது எரிச்சல் படுவதும், அலட்சியமாகவும், கவனக் குறைவாகவும் நடந்து கொள்வதும், பேச்சிலும், செயலிலும் சிறிது வன்முறையைக் கையாள்வதும் நம்மிடையே வழக்கமாக இருந்து வருகிறது. சில மேலைராடுகளில் பெரியோரைக் கடிதலுக்கு(Elders Abuse) எதிரான சமூகச் சட்டங்கள் தீவிரமாக அமல்படுத்தப்படுவதால் முதியவர்களுக்குக் கொஞ்சம் பாதுகாப்பு கிடைக்கிறது.

### பெரியவர்களோடு பேசுங்கள்:

வீட்டில் இருக்கும் கோழிக் குஞ்சுகளோடும், குட்டி பப்பிகளோடும் கூடப் பேச விரும்புவோம். ஆனால் கட்டிலில் படுத்திருக்கும் வயதான பெரியவர்களைக் கண்டால், ‘இவர்களிடம் பேச என்ன இருக்கிறது!’ என்று ஒதுங்கிப் போவோம்.

ஆனால் இளைய வயதினரே, ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள், செயற்கை நுண்ணறிவும் (AI), Programming Algorithm-மும் வேண்டுமானால் கணினி முன் அமர்ந்து நீங்கள் கற்றுக் கொள்ளலாம். நீங்கள் மேன்மையாக வாழும் வழிமுறைகளை பெரியவர்களிடம்தான் நிறையக் கற்றுக் கொள்ள முடியும். ஏனென்றால் அவர்கள் ஆண்டாண்டுகளாய் வாழ்ந்த அனுபவங்களின் வழியாக வாழ்க்கையை ஆழமாகக் கற்றவர்கள். (தொடரும்)

# நாகை நகரத்தார் சங்க ஆண்டு விழா

நாகப்பட்டினம் நகரத்தார் சங்கத்தின் 34-ஆம் ஆண்டு விழா 03.11.2024, ஞாயிற்றுக் கிழமை அன்று நகரத்தார் சங்கக் கட்டிடத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு திருச்சி நகரத்தார் சங்கத் தலைவர் திரு.SP. சுப்பிரமணியன் தலைமை ஏற்க, கொப்பனாபட்டி திருமதி மலர்விழி பழனியப்பன் சிறப்புரையாற்றினார். KVB-யின் DGM தேவகோட்டை திரு. L. லெட்சுமணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். வலையபட்டி திரு.T. மீனாட்சி சுந்தரம் அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க நாகை நகரத்தார் சங்க உறுப்பினர்களால் ஏகமனதாக தலைவராக பொறுப்பு ஏற்றுக் கொண்டார். தலைவர் - T. மீனாட்சி சுந்தரம், வலையபட்டி, செயலாளர் - M. வெங்கடாசலம், தேவகோட்டை, துணைச் செயலாளர் - PL.S. மெய்யப்பன், கல்லுப்பட்டி, பொருளாளர் - A. விஸ்வநாதன், வேந்தன்பட்டி ஆகியோர் விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்கள். திருச்சி மற்றும் காரைக்கால் நகரத்தார் சங்க பொறுப்பாளர்கள், சங்க உறுப்பினர்கள் மற்றும் ஆச்சிமார்களும் கலந்து கொண்டனர். விருந்தோம்பலுடன் விழா இனிதே நிறைவுற்றது.


## மறுமணம்

பிள்ளையார்பட்டி கோவிலைச் சேர்ந்த நல்ல வசதியுள்ள 46 வயது விவாகரத்தானவருக்கு மறுமணம் செய்து கொள்ள விவாகரத்தான பெண் தேவை.

தொடர்புக்கு : 83006 54086



நடுவீட்டுக் கோலம் தடுக்கு விற்பனைக்கு

தொடர்புக்கு : 9486905906


# அழகப்பா பல்கலையில் கருவிகள் தர ஆய்வு மையம்








காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக தொழில் மற்றும் ஆலோசனை மையம் சார்பில் தனியார் பங்களிப்புடன் மேயா லேப் கருவிகள் (Instruments) தர ஆய்வு மையத்தை (காலிபிரேசன்) காரைக்குடி அழகப்பா பல்கலைத் துணைவேந்தர் முனைவர் ஜி. ரவி துவக்கி வைத்தார். இப்பல்கலைக் கழக வளாகத்தில் தொழில் மற்றும் ஆலோசனை மையத்தின் சார்பில் ஏவி.எம். ஆய்வக குழுமத்தின் ஏவி. மெய்யப்பன் அவர்கள் சார்பில் மேயா லேப் கருவிகள் தர ஆய்வு மையம் (Calibration Centre) ரூ.2.5 கோடி மதிப்பில் அதிநவீன உபகரணங்களுடன் துவங்கப்பட்டுள்ளது. தென் தமிழ்நாட்டில் முதல் முறையாக இங்குதான் இத்தகைய மையம் துவங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எந்த கருவிகளாக இருந்தாலும் அதனை தர ஆய்வு செய்த பின்னர் தான் பயன்படுத்த வேண்டும். சர்வதேச தரநிலைகளை உறுதி செய்யும் மையமாக இது செயல்படும். தவிர இந்த மையம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பல்கலைக் கழக அங்கீகரிக்கப்பட்ட திறன் மேம்பாட்டு தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்க உள்ளது. தவிர பல்கலைக் கழகத்துடன் இணைந்து அறிவியல் மற்றும் பொறியியல் படித்த மாணவர்களுக்கு காலிபிரேசன் சான்றிதழ் படிப்பு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த பயிற்சி பெறும் மாணவர்கள் இந்தியாவில் மட்டும் இல்லாமல் உலக நாடுகள் அனைத்திலும் வேலைவாய்ப்பை பெற முடியும். புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை உருவாக்கவும் இந்த மையம் முக்கிய பங்காற்றும்.




Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan


Chettinad
Sarvalokaa Education
International School
Activities that nurture
children
holistically
• Archery
• Theatre
• Dance
• Instrumental Music
• Taekwondo
• Chess
• Soccer
ADMISSIONS
OPEN
ENQUIRE
FOR
DETAILS
044 47429900
73 5872 1784
www.sarvalokaa.org
Cambridge Assessment
International Education

Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CH(C)583/2022-2024
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)/WPP-542/2022-2024 and published on first week of every month.
Posted at Egmore. RMS PATRIKA Channel Posted on 15-21 December - 2024

